DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)

SunSanmugathas, ASA
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com

Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
$1.00
416-752-1524
416-752-6703

உதயம் 1299
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday February 26, 2021

# கனடா உதயன் வெள்ளி விழாவை ஒட்டிய அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி..

கனடா உதயன் பத்திரிகை நடத்தும் வெள்ளி விழா - உலகளாவிய மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிக்குரிய அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பெற்றுள்ளன. போட்டி நடைபெறும் தினங்கள்:-

27-02-2021 சனிக்கிழமையும்
28-02-2021 ஞாயிற்றுக்கிழமையும்

கனடிய நேரம் : காலை 9.00 மணிக்கு ஆரம்பம்
இலங்கை இந்திய நேரம்:- மாலை 7.00 மணி
மலேசிய நேரம் :- இரவு 9.00 மணி

போட்டியில் இணைந்து கொள்ளவேண்டிய போட்டியாளர்களும் பார்வையாளர்களும் பயன்படுத்த வேண்டிய இணைப்பு :
27-02-2021 சனிக்கிழமை: **ZOOM ID: 812 3636 6126 / PASS CODE: 962261**
28-02-2021 ஞாயிற்றுக்கிழமை: **ZOOM ID: 827 6566 9766 / PASS CODE: 892482**

போட்டியில் பங்குபற்றும் இளம் போட்டியாளர்கள் அல்லது அவர் தம் பெற்றோர் அவசரத் தேவைகளுக்கு தொடர் கொள்ள வேண்டிய வற்ஸ்அப் இலக்கம் **(whatsApp)** 1416 732 1608. மின்னஞ்சல்: **uthayannews@yahoo.com**

மேற்படி பேச்சுப் போட்டிக்கான நடுவர்களாக பின்வரும் பெரியோர்கள் பணியாற்றவுள்ளார்கள்.
பேராசிரியர் சங்கரநாராயணன்( தமிழ்நாடு), வழக்கறிஞர் தி. இராமகிருஸ்ணன் (தமிழ்நாடு), கலாநிதி நல்லையா குமரகுருபரன் (இலங்கை), குயின்றஸ் துரைசிங்கம் (கனடா) , நிமால் விநாயகமூர்த்தி (கனடா) , திரு வீணைமைந்தன் சண்முகராஜா (கனடா) ஆகியோர்.
'கனடா உதயன்' நடத்தும் வெள்ளிவிழா பேச்சுப் போட்டிக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து தம்பி தங்கையர்க்கும் நன்றி.

## 28 Ontario Teachers Found Guilty of Sexual Misconduct, Would Lose Their Licences As a Result of Changes

# ஒன்றாரியோ பாடசாலைகளில் மாணவர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர்கள் நீண்ட கால குற்றச் செயல்களுக்கு உட்பட்டவர்கள்

### ஒன்றாரியோ கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே தெரிவிப்பு

**(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**



" அண்மையில் எமது ஒன்றாரியோ கல்வி அமைச்சின் அதிகாரிகளினால் கண்டு பிடிக்கப்பட்ட பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் சுமார் 28 பேரில் பெரும்பாலானவர்கள் தாங்கள் ஆசிரியப் பதவிகளில் இணைந்து கொள்வதற்கு முன்பதாகவு அவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் என்பது கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால் முன்னைய ஒன்றாரியோ லிபரல் அரசானது இந்த குற்றவாளிகளை கண்டும் காணாதது போல இருந்த படியால்தான் அவர்கள் அண்மைக் காலங்களிலும் இவ்வாறாக மாணவர்கள் மீதான பாலியல் தொல்லைகளுக்கு காரணமாக இருந்துள்ளார்கள். இவ்வாறான மோசமான ஆசிரியர்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர் ஆகியோர்களது முறைப்பாடுகளைத் தொடர்ந்து எமது அமைச்சு நடவடிக்கை எடுததுள்ளது. இதனால் அவர்களது ஆசிரிய பதவி சான்றிதழ்கள் கூட திரும்ப பறிக்கப்பட்டுள்ளன"
இவ்வாறு கூறினார் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

*(உள்ளே விபரமான செய்தி. 5ம் பக்கம்)*

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404


THE GUARDIAN
HOME REALTY INC.,BROKERAGE
Where life begins...
நட்பான எங்கள் விற்பனை நிறுவனத்தின் முகவர்கள் மூலம் தங்களது வீட்டின் பெறுமதியை சட்டபூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை (Appraisal) பெற்றுக்கொள்ளலாம்.
Are you interested in working in Real Estate?
Join our team!
Discover how our results producing motivation, coaching, marketing, and technical support will maximize your income as a sales professional.
Email us at info@theguardianhomes.com for more details.
80 Nashdene Rd, unit# F119
Scarborough, ON M1V 5E4
416 989 6565
www.theguardianhomes.com

# உதயன் கதிரோட்டம்

## கனடா-பிரம்ரன் நகரபிதா பற்றிக் பிரவுணிடம் (Patrick Brown) கற்று கொள்ளுங்கள், அநியாயத்திற்கு எதிராக எவ்வாறு குரல் கொடுக்க முடியும் என்பதை..

எமது தாயகத்தில் இடம்பெற்ற தமிழின படுகொலைகள், போர்க்குற்றங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், வெள்ளைவேன் கடத்தல் போன்ற தமிழ் மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் கடந்த 2009ம் ஆண்டு தொடக்கம் எமது மக்கள் பிரதிநிதிகளும், அமைப்புக்களும் கடுமையகப் போராடி வருகின்றன. ஆனால் எந்த வகையான தண்டனைகளோடு அன்றி கேள்விகளோ இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்படவில்லை.

இந்த விடயத்திற்காக எத்தனையோ ஆண்டுகள் வீதிகளிலும் காடுகளிலும் நின்று போராடிக்கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட எமது மக்கள், தொடர்ந்தும் தாங்களாகவே போராடி வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இது ஒருபுறம் இருக்க, தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சிலின் கூட்டத்தொடரின் மூலம் இலங்கைக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையுமே எடுக்கப்படவில்லை என்பது வெளிச்சமாகவே தெரிந்து விட்டது.

இலங்கைக்கு ஆதரவாக நிற்கும் நாடுகள் தங்கள் நாடுகளிலும் மனித உரிமை மீறல் செயல்களைச் செய்த வண்ணமே உள்ளன. பாகிஸ்த்தானில் கிறிஸ்த்தவர்களை படுகொலை செய்தும், அவர்களது தேவாலயங்களை இடித்தும் எரித்தும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றவர்களை தண்டிக்காமல், அந்த நாட்டின் பிரதமர் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டுள்ளார். தனது நாட்டில் பௌத்த விகாரைகளை பாதுகாக்க தான் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தனது இலங்கைப் பயணத்தின்போது தெரிவித்துள்ளார்.

ஆனால் தமிழ் மக்களைப் படுகொலை செய்த இலங்கை அரசிற்கு தனது நாடு பக்கத்துணையாக நின்றதை வெளிப்படையாகவே கூறி தனக்கு சிங்களவர்கள் பக்கம் இருந்து புகழாரத்தைத் தேடிக்கொண்டார்.

இவ்வாறாக எமது ஈழத்தமிழர்களுக்கு விடுதலையையும் விடிவையும் பெற்றுத் தருவதற்கு மாறாக பல 'கோடரிக் காம்புகளும்' எமது சமூகத்தில் உள்ளதை நாம் நேரடியாகவே காண்கின்றோம்.' அவர்களில் பலரும், பல அமைப்புக்களும் இலங்கை அரசின் விருந்தாளிகளாகச் சென்று அங்கு விருந்துண்டு வந்ததையும் புலம் பெயர் தமிழ் மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள்.

இவ்வாறிருக்க, கனடாவில் பிரம்டன் மாநகரில் மேயராக உள்ள மரியாதைக்குரிய பெற்றிக் பிரவுண் அவர்கள் **(Patrick Brown )** தற்போது அவரது நகரத்திற்குள் ஒரு பூங்காவில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அமைக்க அதிகார பூர்வமாக நடவடிக்கை எடுத்து வருகையில் கனடாவில் இயங்கும் சிங்கள அமைப்புக்கள் அதை எதிர்க்கின்றன.

ஆனால் அந்த அமைப்புக்களுக்கு எதிராகவும் அவர்களது வாதங்களுக்கும் எதிராகவும் பாதிக்கப்பட்ட எமது தமிழ் மக்களுக்கு எதிராகவும் எவ்வாறு குரல் கொடுக்கின்றார் என்பதை சில நாட்களுக்கு முன்னர் வெளிவந்துள்ள ஒரு காணொளி நன்கு காட்டுகின்றது. ஒரு சிங்கள பேச்சாளருக்கு அமைதியாகவும் 'நேர்மையாகவும் எவ்வாறு பெற்றிக் பிரவுண் என்னும் அரசியல்வாதி பதிலளிக்கின்றார் என்பதை நாம் அவசியம் அவதானிக்க வேண்டும். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை மதிக்கின்ற அவரை சிங்களவர்கள் விமர்சனம் செய்ய முனைந்தாலும் அதை நேர்மையாக மறுதலிக்கும் அவரது உயர்ந்த பண்பை நாம் வணங்க வேண்டும்.அந்த உயர்ந்த மனிதரை நாம் போற்ற வேண்டும்.

## ஸ்காபுறோவில் கென்னடி-எக்ளிங்கடன் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள சங்கர் அன் கோ நிறுவனம்




மார்ச் மாதம் 11ம் திகதி மகா சிவாராத்திரியை தகுந்த முறையில் அனுஸ்டிக்க தேவையான பொருட்கள் அனைத்தும் ஸ்காபுறோ சங்கர் அன் கோவை வந்தடைந்துள்ளன.

----------------------------------------------

கென்னடி-எக்ளிங்கடன் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள சங்கர் அன் கோ நிறுவனத்தில் சிவராத்திரிக்குத் தேவையான பூசைப் பொருட்கள், வில்வம் இலை, வில்வம் பழம், எருக்கலம் இலை, எருக்கலம் பூ, சிவலிங்கப் பூ, தாமரை இலை மற்றும் பூசைப் பொருட்கள் அனைத்தும் தயாராக உள்ளன.

பாரம்பரிய மூலிகைப் பொருட்கள் மற்றும் மூலிகை மருந்து வகைகள் அனைத்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

-------------------------------------------

அத்துடன்
மிக்சி, கிரைன்டர்கள் றைஸ் குக்கர்கள் பிரசர் குக்கர்கள் ஆகியன திருத்திக் கொடுக்கப்படும்
விசேட நறுமணம் கொண்ட சாம்பிராணிகள்
வெண் குங்கிலியம் மற்றும் கருப்புக் குங்கிலியம்
ஆகாசக் கிழங்கு
தொலைபேசி எண்கள்: 416 759 5100 - 416 759 4916

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## ஸ்காபுறோவில் Frontline Community Services சேவை வழங்கும் நிறுவனத்திற்கு ஒன்றாரியோ அரசு வழங்கியுள்ள நிதி

ஸ்காபுறோவில் கடந்த 8 வருடங்களாக இயங்கிவரும் **Frontline Community Services** என்னும் சேவை வழங்கும் நிறுவனத்திற்கு ஒன்றாறியோ அரசின் நிதி ஒதுக்கீட்டில் ஒரு தொகை கிடைத்துள்ளதை கனடா உதயன் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது.

மேற்படி நிதியானது எமது சமுகத்திலுள்ள இனவாதம் மற்றும் வெறுப்பு அடிப்படையில் இடம்பெறும் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கும் குரல் கொடுப்பதற்கும் ஏற்ற திட்டங்களை வகுத்து அவைகளுக்கு ஏற்பட்ட இந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்கபபட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

சமுகத்தில் வெறுப்பின் அடைப்படையில் இடம்பெறும் குற்றங்களை எதிர்த்து போராட சமுகங்களுக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்ட "பாதுகாப்பானதும் இன்றியமையாததுமான சமுகம்" எனும் பொருள்பட வழங்கப்படும் மானியத்தின் மூலம் இரண்டு ஆண்டுகளில் 2.6 மில்லியன் டொலர் வரையான நிதியை ஒன்றாறியோ அரசாங்கம் ஒதுக்கியுள்ளது இந்நிதியானது ஒன்றாரியோவிலுள்ள 26 இலாப நோக்கற்ற சேவை வழங்கும்ட நிறுவனங்கள், பூர்வகுடிகளின் அமைப்புக்கள் மற்றும் அவர்களின் அமைப்புகள் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்படவுள்ளன.



இந்த நிதியின் உதவியோடு காவற்றுறையுடன் இணைந்து சமுகத்தில் பாகுபாட்டைக் குறைக்கும் திட்டங்களைச் செயற்படுத்தவும், காவற்றுறையில் பதிவாகும் வெறுப்பின் காரணமாக இடம்பெறும் குற்றங்களை அடையாளங்கண்டு சமுக ஒருங்கிணைப்பை வளர்க்கவும் உதவும்.

இதன் ஒரு பகுதியாக, **Frontline Community Services** என்னும் சேவை வழங்கும் நிறுவனத்திற்கு வெறுப்பின் அடிப்படையில் இடம்பெறும் குற்றங்களைக் ஒழிப்பதற்கு நிதி உதவி செய்யப்படவுள்ளது. "ரொறன்ரோ காவற்றுறை, ஒன்ராறியோ தெற்காசிய சட்ட மையம், பஞ்சாபிய சமுக சுகாதார சேவைகள் ஆகியவற்றுடன் இணைந்து வலுவானதும் இயைவுள்ளதுமான, சமுகங்களை உள்ளடக்கிய திட்டம் ஒன்றை நாம் செயற்படுத்தவுள்ளோம். ஆபத்துக்குள்ளாகக்கூடிய இளையவர்களுக்கான பட்டறைகள் - குறிப்பாக தன்னம்பிக்கையை மேம்படுத்துவதற்கான தற்காப்பு, சமுக இணைப்புகள், சமுகங்களில் வெறுப்பின் அடிப்படையில் இடம்பெறும் குற்றங்களைத் தடுப்பதற்கான அவர்களின் இணைந்த பங்களிப்பு போன்றவற்றை இதன்போது ஏற்படுத்தவுள்ளோம்" என்று நேற்று நடைபெற்ற் இணையவழி கலந்துரையாடலில் **Frontline Community Services** சேவை வழங்கும் நிறுவனத்தின் தலைவி திருமதி விஜயா குலா தெரிவித்தார்

"முன்னணி சமுக மையத்துடன் இணைவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். எமது சமுகத்திலுள்ள பங்காளர்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமுதாயத்தை உருவாக்கி இனவெறி மற்றும் வெறுப்பின் அடிப்படையிலான குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் அனைவரும் எவ்வாறு ஒன்றிணைய முடியும் என்பதற்கு இந்த திட்டம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு" என அங்கு உரையாற்றிய ஸ்கார்பாரோ-வடக்கு சட்டமன்ற உறுப்பினரும், முதியோர்கள் தொடர்பான அமைச்சருமான ரேமண்ட் சோ அவர்கள் கூறினார்.

"எமது அரசாங்கம் எவ்வகையிலும் வெறுப்பு மற்றும் இனவாதம் போன்றவற்றை சகித்துக்கொண்டிராது என்பதுடன், ஒன்றாறியோ மக்கள் இப்படியான தடைகளைத் தாண்டி சமுக அடிப்படையிலான தீர்வுகளைக் காண நாம் தொடர்ந்து கவனம் செலுத்து வருகின்றோம்" என்று ஸ்கார்பாரோ - றூஜ் பார்க் சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.

**BASEMENT for RENT**

2 bedroom basement
with separate entrance
மற்றும் எல்லா வித வசதிகளுடனும்
வாடகைக்கு உண்டு.

குடும்பம் விரும்பதக்கது.

**Call:**
**(416) 821-2181**

**COMPUTER REPAIR**

Laptop computer repair,
virus removal, data recovery,
upgrading & any other
troubleshooting, network installation,
printer problems அனைத்து
விதமான computer திருத்த
வேலைகளும் நியாயமான
விலையில் உங்கள் வீட்டில் வந்து
திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN:**
**(416) 894-6244**



# காணாமல் போன தனது மகனைத் நீண்டகாலம் தேடி வந்த தாய் ஒருவர் காலமானார்

வுனியாவில் காணாமல் போன தனது மகனைத் தேடி வந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

வவுனியா மறவன்குளம் பகுதியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை பேரின்பநாயகி வயது 61 என்ற தாயே நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார். இவரது 39 வயதுடைய மகன் தருமகுலநாதன் கடந்த 2000 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். அவரைத்தேடி வவுனியாவில் 1,465 நாட்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறை போராட்டத்திலும் குறித்த தாய் கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தரும்படி வேண்டியவண்ணம் போராடியிருந்தார். இந்நிலையில் மகனை மீண்டும் நேரில் காணாமலேயே அவர் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளமை பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

# "நாங்கள் நீதியை எதிர்பார்த்து நிற்கின்றோம், நிதியை அல்ல"

## பயங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவைச் சேர்ந்தவர்களிடம் கூறிய காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கச் செயலாளர் ராஜ்குமார்



"யங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவை சேர்ந்த இரண்டு உத்தியோகத்தர்கள் என்னிடம் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். நாம் மேற்கொண்டுவரும் உணவு தவிர்ப்பு போராட்டம் தொடர்பாக அவர்கள் கேட்டறிந்தனர். போராட்டங்களிற்கு வெளிநாடுகளில் இருந்து நிதி வருகின்றதா என அவர்கள் கேட்டிருந்தனர். நாங்கள் நீதியை மாத்திரமே எதிர்பார்த்து நிற்கின்றோம், நிதியை அல்ல. என்ற விடயத்தினை அவர்களிற்கு உறுதியாக கூறியிருந்தேன்" என வவுனியாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் கூறியுள்ளார். நூற்றுக்கணக்கானவர்கள் கூடி நின்ற அந்த இடத்தில் அவர் ஊடகவியலாளர்களின் கேளமேலும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதி அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய கொடிகளுடன் வவுனியா நகரசபை மண்டபத்தில் இருந்து நடைப்பயணமாக வந்தீர்களா என கேட்டிருந்தனர். பலவருடங்களாக போராடிவரும் நிலையில் எமக்கான நீதி கிடைக்கப்பெறவில்லை. இந்த நிலையில் இலங்கை அரசுமீது நம்பிக்கை இழந்துள்ள நாம் எமக்கான நீதியை பெறுவதற்கு சர்வதேசத்தின் உதவியை நாடியுள்ளதாக அவர்களிடம் தெரிவித்திருந்தேன்" என்றார்.

வவுனியாவில் கடந்த 1465 நாட்களாக சுழற்சி முறை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் கோபாலகிருஸ்ணன் ராஜ்குமாரிடம் பயங்கரவாத தடுப்புவிசாரணை பிரிவினர் திங்கட்கிழமை விசாரணைகளை முன்னெடுத்தனர். இந்நிலையில் அமெரிக்க தூதுவர் நாளையதினம் யாழ்பாணம் வரவுள்ள நிலையில் குறித்த விசாரணை முன்னெடுக்கப்படுகின்றமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்த அவர், இவ்வாறான அச்சுறுத்தல்களை முன்னெடுத்தாலும் எமது உறவுகளிற்கான போராட்டங்களில் இருந்து நாங்கள் பின்வாங்கப்போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# நான் எனது கிரிக்கட் வாழ்க்கையை ஆரம்பித்திருந்த போது உங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்திருந்தார்

## - கொழும்பில் ஞாபகப்படுத்திய பாகிஸ்த்தான் பிரதமர் -



நான் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியவுடனேயே ஒரு கிரிக்கெட் வீரனாக இலங்கைக்கு வந்தேன். நான் எனது கிரிக்கட் வாழ்க்கையை ஆரம்பித்திருந்த போது தற்போதைய இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்திருந்தார்.

அன்றிலிருந்து இலங்கை தொடர்பான சிறந்த நினைவுகளை நான் கொண்டிருக்கிறேன். டெஸ்ட் அந்தஸ்தற்ற நிலையிலிருந்து உலகக் கிண்ணத்தை வென்றது வரை இலங்கை கிரிக்ககெட் அணி வளர்ச்சியடைந்து வந்ததை நாம் பார்த்திருக்கிறோம். உலகக் கிண்ணத்தைக் கூட இலங்கை கிறிக்கட் அணி பாகிஸ்தானில் வைத்தே வென்றது. நானும் எனது கிரிக்கட் அணியினரும் இலங்கை கிரிக்கெட் அணியின் பரிணாம வளர்ச்சியை கண்டிருக்கிறோம்.

"எமது துணைக்கண்டத்தைச் சேர்ந்த நாடு என்ற வகையில் இலங்கை அணி ஓர் உலகத்தரம் வாய்ந்த அணியாக வளர்ச்சியடைந்ததைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைந்தோம்". இவ்வாறு நேற்று கொழும்பில் இலங்கைப் பிரதமர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்த பாகிஸ்த்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்தார். சுமார் 40 அங்கத்தவர்கள் கொண்ட குழுவோடு கொழும்பிற்குச் சென்றுள்ள் அவர் இலங்கை ஜனாதிபதியையும் சந்தித்து உரையாடினார்.

பிரதமர் மகிந்தாவுடனான சந்திப்பில் கலந்து கொண்ட அனைவருக்கும் முன்பாக தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில், "இலங்கையில் வடக்கில் நிலைகொண்டிருந்த பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் பாகிஸ்தான் முக்கிய பங்காற்றியதை இந்த இடத்தில் நினைவுபடுத்துகிறேன் பௌத்தர்களின் புனித தலங்களை இணைக்கும் "பௌத்த பாதை" ஒன்றை வடிவமைத்து வருகிறோம். இதன் மூலம் பௌத்த மதத்தை பின்பற்றுகின்ற மக்கள் எமது நாட்டுக்கு வருகை தர முடியும். இதற்கான முதல் அழைப்பை ஸ்ரீலங்காப் பிரதமருக்கு விடுக்கிறேன்" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை சென்ற பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவை அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அதன் பின்னர் இணை ஊடக சந்திப்பொன்றை நடத்திய நிலையில் அதில் உரையாற்றும் போதே பிரதமர் இம்ரான் கான் இதனை கூறினார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், முதலில் என்னையும் எனது தூதுக்குழுவினரையும் இலங்கைக்கு வரவேற்று உபசரித்தமைக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இலங்கைக்கு புதியவனல்ல. இந்த விஜயம் வரைக்குமான இலங்கைவுடனான எனது உறவை நினைவூட்டவே இந்த விடயங்களை இங்கு குறிப்பிடுகிறேன். இந்த விஜயம் இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும். எமது வியாபார உறவை வலுப்படுத்துவதை இலக்காக கொண்டது.

பாகிஸ்தான் சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தின் ஓர் அங்கமாக உள்ளது. சீன - பாகிஸ்தான் பொருளாதார நடைபாதை வேலைத்திட்டமும் முதன்மையானதாகும். நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் மிக முக்கியமானதாகும். எனவேதான் நான் எனது தூதுக்குழுவிடம் ஸ்ரீலங்காவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான தொடர்புகளை மேலும் முன்னேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறியுமாறு கேட்டிருக்கிறேன். சீன - பாகிஸ்தான் பொருளாதார நடைபாதை வேலைத்திட்டமானது மத்திய ஆசியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் முக்கியமானதாகும்.

எமது வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகைக் குறித்தும் நாம் பேசியிருக்கிறோம். எதிர்காலத்தில் மத்திய ஆசியாவுடனான பாகிஸ்தானின் தொடர்பு மூலம் மேலும் இலங்கை எவ்வாறு பயனடையலாம் என்பது பற்றி நாம் ஆராய்ந்திருக்கிறோம். எமது வர்த்தக உறவுகள் மூலம் இரு நாடுகளும் மேலும் ஒன்றுபட முடியும். மேலும் நெருக்கமடைய முடியும்.

எமது இரு நாடுகளும் பங்கரவாதம் எனும் பொதுவான பிரச்சினைக்கு முகங்கொடுத்த நாடுகள்.மிக மோசமான பயங்கரவாதத்திற்கு 10 ஆண்டுகளாக பாகிஸ்தான் முகங்கொடுத்தது. இதனால் 70 ஆயிரம் உயிர்களை நாம் இழந்தோம். அதேபோன்று இலங்கையும் 30 வருட காலம் பயங்கரவாதத்துக்கு எதிராக போராடியது. இலங்கையில் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் பாகிஸ்தான் முக்கிய பங்காற்றியதை இந்த இடத்தில் நினைவுபடுத்துகிறேன்.

சுற்றுலாத்துறையின் மீது தங்கியுள்ள இலங்கையழன் அபிவிருத்தி இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. பயங்கரவாதம் உள்ள ஒரு நாட்டினால் முன்னேற்றமடைய முடியாது. பயங்கரவாதம் உள்ள ஒரு நாட்டில் முதலீடுகளைச் செய்ய முடியாது. பாகிஸ்தானில் பயங்கரவாதம் தலைவிரித்தாடிய 10 ஆண்டுகளில் சுற்றுலாத்துறையே இருக்கவில்லை. எந்தவிதமான முதலீடுகளும் பாகிஸ்தானுக்கு கிடைக்கவில்லை.

இப்போது நாம் இன்னுமொரு பொதுவான பிரச்சினைக்கு முகங்கொடுக்கிறோம். அதுதான் கொரோனா வைரஸ். சுற்றுலாத்துறையில் தங்கியுள்ள இலங்கை போன்ற சகல நாடுகளும் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டதை நாம் அறிவோம். இந்த நெருக்கடியான காலத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள், எவ்வாறு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவலாம் என்பது பற்றி நாம் கலந்துரையாடினோம்.

கொரோனா வைரஸ் நெருக்கடி வறிய நாடுகளையும் அவற்றில் வாழுகின்ற வறிய மக்களையும் கடுமையாகப் பாதித்துள்ளது என்பதை அபிவிருத்தியடைந்த நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும். வறுமையான நாடுகள் எவ்வாறு கடன் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றியும் நாம் கலந்துரையாடினோம்.

கொரோனாவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாகிஸ்தான் தனது வரலாற்றிலேயே 8 பில்லியன் டொலர் பெறுமதியான மிகப் பெரிய நிவாரண உதவித்திட்டத்தை அமுல்படுத்தியது. இதனை நீங்கள் அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது அங்கு 3000 பில்லியன் டொலர் நிவாரணமாக வழங்கப்பட்டது. அமெரிக்காவின் சனத்தொகை 330 மில்லியன். பாகிஸ்தானின் சனத்தொகை 220 மில்லியன். இது அமெரிக்க சனத்தொகையில் 70 வீதம். இதுதான் மிகப் பெரிய முரண்பாடு.

கொரோனா வைரஸ் உலகில் நிலவும் இந்த சமத்துவமின்மையை நன்கு வெளிக்காட்டியுள்ளது. அதனால்தான் ஐக்கிய நாடுகள் சபை போன்ற உலக நிறுவனங்கள் கொரோனா வைரஸினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இவ்வாறான நாடுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என நான் கோரிக்கை விடுக்கிறேன்.

இறுதியாக, நான் இலங்கைப் பிரதமரை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்புவிடுக்கிறேன். உலகிலேயே மிகப் பாரிய பௌத்த புராதன சின்னங்களை பாகிஸ்தான் கொண்டுள்ளது. 40 அடி நீளமான "உறங்கும் புத்தர்" எனும் உலகிலேயே மிகப் பாரிய பௌத்த புராதன சின்னத்தை நாம் அண்மையில் கண்டுபிடித்துள்ளோம். வடக்கு பாகிஸ்தான், கந்தாரா நாகரீகத்தின் மிக முக்கிய தளமாகும். இவற்றை பார்வையிட பாகிஸ்தானுக்கு வருகை தருமாறு ஸ்ரீலங்கா மக்களை நான் அழைக்கிறேன். நாம் இப்போது பௌத்தர்களின் புனித தலங்களை இணைக்கும் "பௌத்த பாதை" ஒன்றை வடிவமைத்து வருகிறோம். இதன் மூலம் பௌத்த மதத்தை பின்பற்றுகின்ற மக்கள் எமது நாட்டுக்கு வருகை தர முடியும். இதற்கான முதல் அழைப்பை நான் ஸ்ரீலங்காப் பிரதமருக்கு விடுக்கிறேன், எனக் குறிப்பிட்டுள்ளார்.

# Ontario Government Invests in Historic Campaign to Accelerate Training for Personal Support Workers

*-- Up to 8,200 New PSWs Will Be Ready to Work in Long-Term Care by Fall 2021 --*

# PSW எனப்படும் தனியாக உதவும் பணியாளர்கள் பயிற்சியை விரைவுபடுத்துவதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கனடா— ஒன்றாறியோ அரசின் முதலீடு

*2021க்குள் 8,200 புதிய PSW எனப்படும பணியாளர்கள் நீண்ட கால பராமரிப்பில் பணியாற்ற தயாராக இருப்பார்கள்*



பெப்ரவரி 24, 2021

ஒன்றாறியோவின் சுகாதார மற்றும் நீண்டகால பராமரிப்புத் துறைகளில் அதிக தேவை உள்ள வேலைகளுக்காக 8,200 புதிய தனியாக உதவும் பணியாளர்களுக்கு (பி.எஸ்.டபிள்யூ) பயிற்சி அளிக்க ஒன்றாறியோ அரசாங்கம் 115 மில்லியன் டாலர்களை முதலீடு செய்கிறது. ஒன்றாறியோ கல்லூரிகளுடன் அமைச்சுடன் இணைந்து, அரச உதவி பெறும் சுமார் 24 கல்லூரிகளும் ஏப்ரல் 2021 முதல் இந்த புதமையானதும் முழுமையாக நிதியளிக்கப்பட்டதுமானதுமான திட்டத்தை வழங்கவுள்ளன. இது அரசாங்கத்தின் நீண்டகால பராமரிப்பு பணியாளர் திட்டத்தின் ஒரு பகுதியாகும், இது மாகாண வரலாற்றில் மிகப்பெரிய PSW ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி திட்டங்களில் ஒன்றாகும். முக்கியமாக கோவிட்-19 பரவலுக்கு எதிராக செயற்படும் ஒன்றாரியோ அரசின் இந்த முயற்சியை பல மருத்துவத்துறை தலைவர்கள் வரவேற்றுள்ளார்கள்.

ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் ∴போர்டு, நீண்ட கால பராமரிப்பு அமைச்சர் டாக்டர் மெர்ரிலி புல்லர்டன் மற்றும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் அமைச்சர் ரோஸ் ரோமானோ ஆகியோர் நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்படி விவரங்களை அறிவித்தனர்.

"எங்கள் மத்தியில் காணப்படும் மிகவும் பாதிப்பு அதிகமானவர்களைப் பாதுகாப்பதற்கும், ஒன்றாரியோ மக்களுக்கும் தேவைப்படும் போது மிக உயர்ந்த தரமான பராமரிப்பை வழங்குவதற்கும் நாங்கள் மிகப்பெரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்" என்று முதல்வர் போர்டு கூறினார். "எங்கள் மத்தியில் உள்ள சிறந்தவர்களை PSW பணிகளுக்கு நியமித்து பயிற்சி அளிப்பதன் மூலம் இலக்கை அடைவோம். இது எங்கள் மூத்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதோடு, இந்தத் துறையில் பல தசாப்தங்களாக புறக்கணிக்கப்பட்டதை நாம் நிவர்த்தி செய்வோம் என்று உறுதியாகக் கூறுகின்றோம்" என்று முதல்வரும் அமைச்சர்களும் தெரிவித்துள்ளார்கள் தொடங்கும்.

தற்போது திட்டமிடப்பட்டுள்ள பி.எஸ்.டபிள்யூ பயிற்சி திட்டம் 6,000 புதிய மாணவர்களுக்கு கல்வி பயிலும் வாய்ப்பாகும், மேலும் இது வழக்கமான எட்டு மாதங்களை விட ஆறு மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளன. என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்று மாத பாடநெறிகள் மற்றும் மருத்துவ நிலையங்களில் நேரடிப் பயிற்சி என்ற அடிப்படையில் அனுபவமிக்க கற்றல் ஆகியவற்றிற்குப் பிறகு, மாணவர்கள் இறுதி பராமரிப்பு மாதங்களில் ஒரு நீண்டகால பராமரிப்பு இல்லத்தில் அல்லது ஒரு வீடு மற்றும் சமூக பராமரிப்பு சூழலில் ஊதியம் பெறும் நேரடிப் பயிற்சியில் அமர்த்தப்படுவார்கள். இந்த திட்டத்திற்கான பதிவு ஒன்றாறியோ கல்லூரி விண்ணப்ப சேவை மூலம் கிடைக்கும், இது மார்ச் மாத தொடக்கத்தில் பதிவிற்கான வாய்ப்புக்கள் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



ஒன்றாறியோவின் பொது உதவி பெறும் கல்லூரிகளில் ஒன்றில் ஏற்கனவே இருக்கும் பி.எஸ்.டபிள்யூ திட்டத்தை முடிக்க விரும்பும் மாணவர்களுக்கு இந்த ஒன்றாரியோ மாகாணம் கல்வி உதவியை வழங்குகிறது. ஏறக்குறைய 2,200 மாணவர்கள் தங்கள் படிப்பை முடிக்க உதவுவதற்காக 2,000 டாலர்கள் கல்வி மானியம் பெற தகுதி பெறுவார்கள், அத்துடன் அவர்களின் பயிற்சியின் மருத்துவத் துறையில் வேலைவாய்ப்பு மற்றும் இறுதிப் பகுதியை பூர்த்தி செய்ய ஒரு உதவித்தொகையும் கிடைக்கும்.

"இந்த முக்கியமான அறிவிப்பு, உதவிகள் தேவையான குடியிருப்பாளர்களுக்கு நேரடி தினசரி பராமரிப்பின் சராசரியாக நான்கு மணிநேரங்களை வழங்குவதற்கு போதுமான தனிப்பட்ட உதவிப் பணியாளர்களை பணியமர்த்துவதற்கான மற்றொரு முக்கிய படியாகும்" என்று அமைச்சர் மெர்ரிலி புல்லர்டன் கூறினார். "நீண்டகால கவனிப்பை நவீனமயமாக்குவதற்கு புதுமையான தீர்வுகள் மற்றும் திட்டங்கள் தேவை, அவை PSW பணியாளர்களை விரைவாக ஆட்சேர்ப்பு செய்வதற்கும் பயிற்சியளிப்பதற்கும் அனுமதிக்கின்றன, இதனால் அவர்கள் எங்கள் அன்புக்குரியவர்களை கவனித்துக்கொள்வதற்கான மிக அவசியமான பணியைத் தொடங்க முடியும்".

ஒன்றாரியோ மாகாணம் வாழ்வதற்கு ஒரு சிறந்த இடம், வேலை செய்ய ஒரு சிறந்த இடம்: ஒன்றாறியோவின் நீண்டகால பராமரிப்பு பணியாளர் திட்டம், கடந்த ஆண்டு டிசம்பரில். இந்த திட்டத்தின் மையத்தில், குடியிருப்பாளர்களுக்கான நேரடி கவனிப்பு நேரம் நான்கு ஆண்டுகளில் ஒரு நாளைக்கு சராசரியாக நான்கு மணிநேரமாக அதிகரிக்கும். இந்த முயற்சியை செயல்படுத்த, அரசாங்கம் 2024-2025 ஆண்டுக்குள் ஆண்டுதோறும் 1.9 பில்லியன் டாலர்கள் மொத்த முதலீடுகளை செய்து உத்தேசித்துள்ளது.


"தொற்றுநோய் முழுவதும் எங்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய ஒன்டேரியர்களை கவனிப்பதில் தனிப்பட்ட ஆதரவு தொழிலாளர்கள் ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளனர், மேலும் ஒன்டேரியர்களைப் பாதுகாப்பதற்கும் எங்கள் முன்னணி தொழிலாளர்களை ஆதரிப்பதற்கும் எங்கள் அரசாங்கம் ஒவ்வொரு கருவியையும் தொடர்ந்து பயன்படுத்துகிறது" என்று துணை பிரதமர் கிறிஸ்டின் எலியட் கூறினார் மற்றும் சுகாதார அமைச்சர். "இந்த புதிய திட்டம் எங்கள் பணியாளர்களை உறுதிப்படுத்துகிறது மற்றும் பலப்படுத்தும், இதனால் எங்கள் நம்பமுடியாத முன்னணி தொழிலாளர்கள் நோயாளிகளுக்கு உயர்தர பராமரிப்பை எங்கு, எப்போது தேவைப்படுகிறார்களோ அவற்றை தொடர்ந்து பெறுவதை உறுதிசெய்ய முடியும்." மேற்கண்டவாறு மாகாண முதல்வரும ஏனைய இரு அமைச்சர்களும் தெரிவித்தனர்.

# 28 ONTARIO TEACHERS FOUND GUILTY OF SEXUAL MISCONDUCT WOULD LOSE THEIR LICENCES AS A RESULT OF CHANGES

# ஒன்றாரியோ பாடசாலைகளில் மாணவர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர்கள் நீண்ட கால குற்றச் செயல்களுக்கு உட்பட்டவர்கள்

## ஒன்றாரியோ கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே தெரிவிப்பு

**- ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**



"அண்மையில் எமது ஒன்றாரியோ கல்வி அமைச்சின் அதிகாரிகளினால் கண்டு பிடிக்கப்பட்ட பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் சுமார் 28 பேரில் பெரும்பாலானவர்கள் தாங்கள் ஆசிரியப் பதவிகளில் இணைந்து கொள்வதற்கு முன்பதாகவு அவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் என்பது கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால் முன்னைய ஒன்றாரியோ லிபரல் அரசானது இந்த குற்றவாளிகளை கண்டும் காணாதது போல இருந்த படியால்தான் அவர்கள் அண்மைக் காலங்களிலும் இவ்வாறாக மாணவர்கள் மீதான பாலியல் தொல்லைகளுக்கு காரணமாக இருந்துள்ளார்கள். இவ்வாறான மோசமான ஆசிரியர்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர் ஆகியோர்களது முறைப்பாடுகளைத் தொடர்ந்து எமது அமைச்சு நடவடிக்கை எடுததுள்ளது. இதனால் அவர்களது ஆசிரிய பதவி சான்றிதழ்கள் கூட திரும்ப பறிக்கப்பட்டுள்ளன". இவ்வாறு கூறினார் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமையன்று ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே அவர்கள் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல்லின பத்திரிகையாளர்கள் மற்றும் தொலைகாட்சி ஊடகங்களின் செய்தியாளர்கள் ஆகியோரை இணையவழி ஊடான சந்தித்து உரையாடினார். அத்துடன் அவர்கள் முன்வைத்த கேள்விகளுக்கும் பதிலளித்தார்.


அன்றைய தினம் அமைச்சர் எடுத்துக்கொண்ட முக்கியமான விடயம், ஒன்றாரியோ மாகாணத்தின் பாடசாலைகளின் மாணவர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்த காரணத்தினால் குற்றச்சாட்டுக்களுக்குள்ளாகி தொடர்ந்து விசாரணைகளுக்கு முகம் கொடுத்து தண்டனை பெற்றுள்ள சுமார் 28 ஆசிரியர்கள் அல்லது கல்வியாளர்களின் விடயமே ஆகும். அப்போது உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் முன்வைத்த கேள்வி ஒன்றுக்கு ம பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



"அண்மையில் வெளியான தங்கள அறிக்கையில் குற்றச்சாட்டப்பட்டுள்ள மேற்டி 28 ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அண்மைக் காலத்தில் இடம்பெற்றவையாக அன்றி நீண்ட காலத்திற்கு முன்னர் இடம்பெற்றவையா? என்றும் அவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோரை உங்கள் அமைச்சு எவ்வாறு ஆற்றுப்படுத்தியது?" என்ற கேள்வியையே "உதயன்" பிரதம ஆசிரியர் அமைச்சரிடம் முன்வைத்தார்.

அப்போது பதிலளிக்கும் வகையில் அமைச்சர் தொடர்ந்து பேசும் போதும் பின்வருமாறு தெரிவித்தார்.

"இந்தக் குற்றச்சாட்டுக்களில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் பல தாம் ஆசிரியப் பதவிகளில் சேர்வதற்கு முன்னரேயே இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்கள் என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். அவர்கள் ஆசிரிய பதவிகளில் இணைந்த பின்னர் மாணவர்களை தங்கள் தவறான நோக்கங்களுக்காக பயன்படுத்தியும் அவர்களை துன்புறுத்தியும் உள்ளார்கள். ஏற்கெனவே பல குற்றச்சாட்டுக்களைக் கொண்ட இவர்கள் கடந்த லிபரல் கட்சி அரசாங்கத்தின் போது விசாரிக்கப்பட்டாலும் அவர்களுக்குரிய தண்டனைகள் வழங்கப்படவில்லை.



இதற்கு காரணம் அப்போது நடைமுறையிலிருந்த சட்டங்களே காரணம். மேற்படி சட்டங்களின் மூலம் அவர்கள் தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்குரிய சாதகமான பிரிவுகள் அங்கு இருந்தன.

ஆனால் எமது அரசாங்கம் மேற்படி சட்டங்களை மாற்றிவிட்டது. ஒன்றாரியோ மாகாணததில் ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிறுவனமான "ஒன்றாரியோ ஆசிரியர் கல்லூரி" நிர்வாகத்தினர் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி அவர்களை மீண்டும் பணிகளில் அமர்த்தினார்கள்.

ஆனால் எமது அரசாங்கமும் எமது கல்வி அமைச்சும், இவ்வாறான குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ள முடியாத அளவிற்கு சட்டங்களை மாறறியிருக்கின்றோம்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோரை எமது கல்வி அமைச்சின் அதிகாரிகள் ச்நதித்து உரையாடி அவர்களுக்கு ஆறுதல் சொல்லியிருக்கின்றார்கள். எவ்வாறாயினும் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோரின் பதவிகளை நாம் பறிக்கின்றோம். அத்துடன் அவர்கள் செய்த குற்றச் செயல்களுக்காக ஒன்றாரியே நீதி மன்றத்தின் மூலம் விசாரிக்கப்பட்டு தண்டனையும் வழங்கப்படும்" என்றார் அமைச்சர் ஸ்டீபன் லேட்சே.

இங்கு காணப்படும் படங்களில் அமைச்சர் மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் திரு ரூடி மற்றும் பஞ்சாபி தொலைக்காட்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# இம்ரான் கானின் இலங்கை விஜயம்: அரசுக்கு மகிழ்ச்சி, முஸ்லிம்களுக்கு அதிர்ச்சி

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

*எச்சரிக்கை:*
*இதுவொரு பகுப்பாய்வு கட்டுரை, காழ்ப்புணர்ச்சிகள் ஏதும் இதிலில்லை.*

ஆடுகளத்திலும் சரி அரசியல் களத்திலும் சரி மிகவும் வேகமானவர் என்று அறியப்படுபவர் இம்ரான் கான். பாகிஸ்தானுக்காக உலகக் கோப்பையை வென்று கொடுத்தவர். தமது அரசியல் பயணத்திற்கு அதையே அடித்தளமாகவும் அமைத்துக் கொண்டவர். உலகக் கோப்பை வெற்றி அவரது ஆளுமையை பலமடங்கு உயர்த்தியது. லண்டனைச் சேர்ந்த செல்வச் சீமாட்டி ஜெமிமா கோல்ட்ஸ்மித்தை கரம்பிடித்தார் பின்னர் கைகழுவினார்.

பஷ்தூன் இனத்தவருக்கே உரிய உயரம், கம்பீரம், கவர்ச்சி, துணிச்சல் இவையெல்லாம் இயற்கையாகவே இம்ரான் கானுக்கு அமைந்திருந்தது. கிரிக்கெட் ஆடுகளத்தில் அவரது பந்து வீச்சில் அனல் பறக்கும். மிகவும் திறமையான வீரர்கள் கூட மிகவும் கவனுத்திடனேயே அவரை எதிர்கொள்வர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவராக அவர் வகுத்த வியூகங்கள் அந்நாட்டுக்கு பல வெற்றிகளைத் தேடித் தந்துள்ளது. இந்தப் பீடிகளை எதற்கு? ஆட்ட த்தில் அவர் சாதித்ததை அரசியலில் சாதித்தாரா என்பதை பாரபட்சமின்றி ஆய்வு செய்வதற்கே!




அவரது கட்சி பாகிஸ்தான்-தெஹ்ரீக்-இ-இன்சா.்.ப் (நீதிக்கான பாகிஸ்தானிய இயக்கம்) வளர்ந்ததற்கு அவரது ஆளுமைக்கு அப்பாற்பட்டு வேறொரு முக்கிய காரணமும் உண்டு. அது பாகிஸ்தானிய அரசியலில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியல் செய்துவந்த பாகிஸ்தான் மக்கள் கட்சியும், பாகிஸ்தான் முஸ்லிம் லீகும் மக்கள் ஆதரவை இழந்ததும் ஆகும்.

பேனசீர் புட்டோவின் படுகொலை, அதையடுத்து அவரது 19 வயது மகன் பிலாவல் புட்டோவைக் கட்சித் தலைவராக்கியது, ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான அவரது கணவர் ஆசி.்.ப் அலி ஜர்தாரியை அதிபராக்கியது என்று பாகிஸ்தான் மக்கள் கட்சி (PPP) அரசியல் தற்கொலைப் பாதையில் சென்றது. மறுபுறம் "பஞ்சாப் சிங்கம்" என்று அவரது கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீகின் அன்பர்களால் அழைக்கப்படும் நவாஸ் ஷெரீப் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிறை தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் கருணை அடிப்படையில் மருத்துவ சிகிச்சைக்காக இப்போது லண்டனில் உள்ளார். அவர் உடல் நலன் முன்னேற்றி மீண்டும் நாட்டுக்குத் திரும்பி தீவிர அரசியலில் ஈடுபடுவது சூரியன் மேற்கில் உதித்தால் மட்டுமே சாத்தியப்படும் என்பது அவரது கட்சியினரே கருதுகின்றனர் என்று உள்ளூர் செய்தியாளர்களே கூறுகின்றனர்.

அவ்வகையில் பாகிஸ்தான் மக்கள் "எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்" எனும் சூழலில் இம்ரான் கானின் அரசியல் வளர்ச்சி சூடு பிடித்தது. ஒரு மாற்று அரசியல் சக்தியாக தெஹ்ரீக்-இ-இன்சா.்.ப் உருவெடுத்தது. கால் நூற்றாண்டுக்கு முன்னர் கட்சியை ஆரம்பித்த இம்ரான் கான் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 2002ல் முதல் முறையாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், பின்னர் 2018ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்று கூட்டணி ஆட்சி அமைத்து பிரதமரானார்.

ஆட்சி என்பது வெளியிலிருந்து பார்ப்பதற்கு ரோஜா மலர் படுக்கையை போலிருந்தாலும், பதவியேற்ற அன்றே முட்கிரீடம் சூட்டப்படும். இதை மெல்ல மெல்ல உணரத் தொடங்கினார் இம்ரான் கான். அண்டை நாடுகளுடன் நல்லுறைவை மேம்படுத்துவேன் என்று தேர்தல் காலத்தில் கூறினாலும், அது யதார்த்தத்தில் எளிதல்ல என்பதை அனைவரைப் போலவே அவரும் உணர்ந்தார். ஏனென்றால் பாகிஸ்தானில் உண்மையாக ஆட்சி அதிகாரம் இராணுவத்தின் வசமே உள்ளது.

இராணுவத்தைப் பகைத்துக் கொண்டு அங்கு ஒரு சிற்றூழியர் நியமனத்தை கூடச் செய்ய முடியாது. அப்படியான சூழ்நிலையில் இந்தியாவுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புவேன் என்று அவர் கூறியது இராணுவத்தின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதைப் போலிருந்தது.




உள்நாட்டிலும் கடும் நெருக்கடியை எதிர்கொண்டார் இம்ரான் கான். அரசியலில் அவருக்குப் பெரியளவில் எதிர்ப்பில்லை என்றாலும், நாட்டின் மேற்குப் பகுதியில் பலூசிஸ்தான் பிரச்சனை அவருக்கு கடும் சவாலாகவுள்ளது. நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்கு வீழ்ந்துள்ளது, புல்வாமா தாக்குதலை அடுத்து இராணுவத்திடமிருந்து நெருக்கடி என்று மும்முனைத் தாக்குதலை எதிர்கொண்டார். இத்துடன் உலகத்தை ஆட்டிப் படைக்கும் கொரோனா பிரச்சனை மற்றும் என்றுமுள்ளது போல அடிப்படைவாதிகளின் தொடரும் இம்சை.

பலூசிஸ்தான் பிரச்சனைக்கும் ஈழத் தமிழரின் பிரச்சனைக்கும் சில ஒற்றுமைகள் உண்டு. இரண்டுமே உள்நாட்டில் சிறுபான்மையினராக இருப்பவர்கள் மீதான தாக்குதல் மற்றும் வெறுப்புணர்ச்சி. நாட்டின் 46% நிலப்பரப்பு பலூசிஸ்தான் மாகாணத்திலிருந்தாலும், அங்கு வளர்ச்சி மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ளது. அவர்கள் பேசும் உள்ளூர் மொழியான பலோச் மொழி நசுக்கப்படுவது, அங்குள்ளவர்களுக்கு பயங்கரவாத முத்திரை குத்தி அங்கிருக்கும் இளைஞர்களுக்கு கல்வி வேலைவாய்ப்பு ஆகியவற்றில் உரிய பங்கை மறுப்பது போன்ற செயல்பாடுகளை தொடர்ச்சியாக வந்த அரசுகள் மறுத்தது அங்கு மனக்கசப்பை ஏற்படுத்தி பிரிவினை எனும் பேச்சுக்களை எழுப்பியது.

இந்நிலையில் தொடரும் அந்தப் பிரச்சனையை இம்ரான் கானால் கையாள முடியவில்லை என்று உள்ளூர் செய்தியாளர்களும் பன்னாட்டு அரசியல் அவதானிகளும் கூறுகின்றனர். சவுதி அரேபியா, அமெரிக்கா போன்று தொடர்ச்சியாக பாகிஸ்தானுக்கு ஆதரவளித்த நாடுகளும் தமது ஆதரவு நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள ஆரம்பித்தன. அண்மையில் பாகிஸ்தானின் இராணுவத் தளபதி சவுதி அரேபியா சென்ற போது அவரால் பட்டத்து இளவரசர் மொஹமட் பின் சல்மானை சந்திக்க நேரம் ஒதுக்கப்படவில்லை.

இந்நிலையில் அவர் துருக்கி பக்கம் சாய ஆரம்பித்தார். உள்நாட்டில் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்ட இம்ரான் கானுக்கு வெளிநாட்டில் ஆதரவைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. எதிரிக்கு எதிரி நண்பன் எனும் கதையாக பாகிஸ்தான் என்றுமே சீனாவிடம் நட்பு பாராட்டி வந்துள்ளது.

இப்படியான இடியப்ப சிக்கலின் பின்புலத்தில் தான் இம்ரான் கானின் இலங்கைப் பயணம் அமைந்தது. இரு நாட்கள் கொழும்பிலிருந்த அவர் இலங்கையில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் பேசுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவரோ சீனாவின் முகவர் என்று எண்ணும் அளவுக்கு சீனாவின் கனவுத் திட்டமான "பெல்ட் அண்ட் ரோட்" திட்டத்தில் இலங்கையும் இணைந்து கொள்ள வேண்டுகோள் விடுத்தார். அது இலங்கைகு பலனளிக்கிறதோ இல்லையோ பாகிஸ்தானுக்கு நலம் பயக்கும்.

இதேவேளை இலங்கையிலிருக்கும் முஸ்லிம் கட்சிகள், அதன் தலைவர்கள் மற்றும் மக்கள் அவரது வருகையை "இலவு காத்த கிளி" போல நோக்கியிருந்தனர். அவர் வந்தவுடன் நேரடியாக விமான நிலையத்திலிருந்து அலரி மாளிகைக்குச் சென்று "ஜனாசா எரிப்புப் பிரச்சனைக்கு" தீர்வை பெற்றுக் கொடுப்பார் என்று எதிர்பார்த்தனர்.



எனினும் இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றக் கூட அவருக்கு வாய்ப்பு கிட்டவில்லை. முஸ்லிம் கட்சித் தலைவர்கள் அவரை சந்திக்க நேரம் கேட்டு அது ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் பாதுகாப்பு காரணங்களால் ரத்துச் செய்யப்படுவதாக அவர் வந்த அன்று தெரிவிக்கப்பட்டது. அவர் இலங்கையில் வந்திறங்கிய நாளில் கொழும்பில் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் இணைந்து சிறுபான்மையின் உரிமைகளுக்கான போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். அதில் முக்கியமானதொரு கோரிக்கை ஜனாசாக்களை புதைக்க அனுமதிக்க வேண்டும் என்பது.

இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் முஸ்லிம் இடதுசாரி முன்னணியின் கடிதம் ஆகியவை பாகிஸ்தான் தரப்பை இருமுறை சிந்திக்க வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.




திடீரென முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இம்ரான் கானை சந்திக்க 15 நிமிடங்கள் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் என்ன கலந்துரையாடப்பட்டது என்பது தொடர்பில் ஆதாரபூர்வமான தகவல் ஏதுமில்லை.

இந்தக் கூட்டத்தில் பங்குபெற்ற சிலருடன் நான் உரையாடிய போது அவர்களில் ஏமாற்றமே தெரிந்தது. ஜனாசாக்கள் அடக்கம் தொடர்பில் தான் பிரதமர் மற்றும் ஜனாதிபதியிடம் உரையாடிய போது அதற்கு அவர்கள் சாதகமாக பதிலளித்தனர் என்று இம்ரான் கான் கூறியதாகத் தெரிவித்தனர். ஆனால் அந்த "சாதகம்" என்பதற்கு என்ன பொருள் என்பது கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கே வெளிச்சம்.

ஆனால் அவரை சந்தித்த முஸ்லிம் நாடாளுமன்ற பிரதிநிதிகள், இலங்கைக்கு எதிராக ஐநா மனித உரிமைகள் ஆணையத்தில் கொண்டுவரப்படும் தீர்மானத்தை பாகிஸ்தான் ஆதரவளிக்க வேண்டும் என்று கோரவில்லை.

அதேவேளை இலங்கை அரசு பாகிஸ்தானை இஸ்லாமிய நாடுகளுடன் பேசி அவர்களை தமக்கு சாதகமாக வாக்களிக்கக் கோருமாறு வேண்டுகோள் விடுத்ததாக கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

இம்ரான் கானின் விஜயத்தைப் பார்க்கும் போது அவர் சீனா மற்றும் இலங்கை அரசின் நலன்களையே முன்னெடுக்க வந்துள்ளார் என்றே எண்ண வைக்கிறது. ஆனால் முஸ்லிம் இடதுசாரி முன்னணி அவருக்கு எழுதியுள்ள கடிதம் கவனிக்கத்தக்கது. அதில் அவர்கள் தெளிவாக ஒரு விடயத்தை கூறியுள்ளனர்.




"இலங்கையிலுள்ள தமிழ் சமூகத்தின் போராட்டம் நியாயமானது, அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பொறுப்புக் கூறல் அவசியமானது. எனவே இலங்கையுடனான நட்பு தமிழ் மக்களுக்கு எதிரானதாக இருக்கக் கூடாது என்று கூறியுள்ளனர்".

அவர்களின் இந்தக் கருத்தை பெரும்பாலான முஸ்லிம் சமூகம் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் அதை பாகிஸ்தானியப் பிரதமரிடம் கூறியிருக்க வேண்டும். உள்நாட்டில் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்களுக்கு நீதி கிடைக்காதது இலங்கையில் இணக்கப்பாடிற்கு ஒரு தடையாக இருந்துள்ளது என்று அந்தக் கடிதத்தில் அவர்கள் இம்ரான் கானுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடைசியாகக் கிடைத்த தகவலின்படி சுகாதார அமைச்சர் கோவி.்ட் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்ய அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் அது தொடர்பிலான அதிவிஷேச வர்த்தமானி வெளியாகியுள்ளது என்றும் தெரிய வருகிறது.

அதேவேளை ஐநா மனித உரிமைகள் ஆணையத்தில் மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்துள்ள கடுமையான தீர்மானம் மற்றும் அதன் அழுத்தம் காரணமாகவே அரசு தனது கோவிட் தொற்றால் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய ஒப்புதல் அளிக்கும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது என்பதே யதார்த்தமான உண்மை.

எனினும் இம்ரானின் இலங்கை வருகை இலங்கை அரசுக்கு பல வகைகளில் உதவியுள்ளதே தவிர அங்குள்ள முஸ்லிம்களுக்கு எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை என்பதே யதார்த்தம்.

# மனித உரிமைப் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் கனடிய வெளியுறவு அமைச்சின் நாடாளுமன்ற செயலாளர் றொப் ஒலிவ்பண்ட் உரையாற்றினார்

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நேற்று 25ம் திகதி கனடா வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு:

அங்கு கனடிய வெளியுறவு அமைச்சரின் நாடாளுமன்ற செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான றொப் ஒலிவ்பண்ட கனடாவின் சார்பில் பின்வரும் கருத்தை வெளியிட்டார்.

**‘உயர் ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கையைக் கனடா வரவேற்கிறது. ஆனால் தீர்மானத்திற்கான ஆதரவை மீளப் பெறும் இலங்கை அரசின் முடிவு எமக்கு வருத்தமளிக்கிறது.**

**மீளிணக்கம், பொறுப்புக் கூறல் ஆகியவற்றுக்கான உள்நாட்டு நடைமுறைகள் தொடர்ந்தும் பயனளிக்கத் தவறிவருகின்றன. தப்பிப்பிழைத்தோர், உண்மையைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் உறுதியாக இருப்பதுடன், அசாத்தியமான ஆபத்துக்களின் மத்தியிலும் சான்றுகளை வழங்க முன்வந்துள்ளார்கள். அவர்களது தாங்குசக்தியையும், துணிவையும் நாம் கண்டுணர்கிறோம்.**

**மனித உரிமை நிலைமை சீர்குலைந்து செல்வது குறித்த உயர் ஆணையாளரின் கவலை எமக்கும் உள்ளது. துரதிஷ்டவசமாக இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், இது வன்முறைக்கும், மோதலுக்கும் மீண்டும் வழிவகுக்கலாமென்பது வருத்தத்திற்குரியது. குடிசார் ஆட்சி, சுதந்திரமான நீதித்துறை, குடிசார் சமூக செயற்பாட்டுக்கான வெளி, மனித உரிமைகளுக்கான மதிப்பு, ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி ஆகிய அனைத்தும் வலுவிழக்கச் செய்யப்படுகின்றன. முஸ்லிம்களின் உடல்கள் பலவந்தமாகத் தகனம் செய்யப்படுவது, தமிழர்களின் நினைவேந்தல்கள் மீதான கட்டுப்பாடுகள் என்பன நாட்டில் பிளவுகளை மேலும் அதிகரிக்கும்.**



**இலங்கையை நிகழ்ச்சி நிரலில் வைத்திருப்பதும், மீளிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதும் பேரவைக்குள்ள கடமையெனக் கனடா நம்புகிறது.**

**மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் அலுவலகத்துடன் ஆக்கபூர்வமான முறையில் ஈடுபாட்டைப் பேணுமாறும், மனித உரிமை நிபுணர்களுக்கு விடுத்த நிலையான அழைப்புகளை மதித்துச் செயற்படுமாறும் இலங்கையை ஊக்குவிக்கிறோம்’.**

இவ்வாறு அவரது உரை அமைந்திருந்தது.

# ஆசிய இனவாதத்திற்கு எதிராகப் போராடுவது என்பது நாம் அனைவரும் ஏற்கெனவே சந்தித்த ஒன்றே

## கனடாவின் சிறுவர்த்தகம், ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகியவற்றுக்கு பொறுப்பான அமைச்சர் மேரி இங் தெரிவிப்பு

“கனடாவில் தலை தூக்கியுள்ள ஆசிய இனவாதத்திற்கு எதிராக போராடுவது என்பது நாம் அனைவரும் ஏற்கெனவே சந்தித்த ஒன்றே எனவே தற்போதும் தொடரும் ஆசியர்களுக்கு எதிரான இனவாத்திற்கு எதிராகப் போராட வேண்டிய கட்டத்தில் நாம் அனைவரும் உள்ளோம்”.

இவ்வாறு தெரிவித்தார் கனடாவின் சிறுவர்த்தகம், ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகியவற்றுக்கு பொறுப்பான அமைச்சர் மேரி இங். அந்த அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு அமையும்.

நான் எனது ஏழு வயதில் ஹொங் ஹொங் நாட்டிலிருந்து எனது பெற்றோருடன் கனடாவிற்கு குடியேறினேன். என்னைப் போலவே இந்த நாட்டில் குடியேறிய பல குடும்பங்களின் பிள்ளைகள் தங்கள் கதைகளைக் கூறுவார்கள். எனது கதையும்இங்குள்ள கணக்கில் அடங்காத கனடியர்களின் கதையைப் போன்றதுதான். நானும் இனவாதத்தால் குறிவைக்கப்பட்டேன். அந்த கூட்ட அறையில் நான் மட்டுமே ஒருவேற்றின பெண்ணாக அதை எதிர்கொண்டேன். ஆனாலும் எனக்குத் தெரியும் கனடாவின் பல்லினக் கொள்கைதான் எமது பலம் என்பது.

நான் கனடாவில் முதன் முதலாக வகுப்பறைக்குச் சென்ற அந்த நாளில் என்னோடு அங்கு கற்பதற்கு வந்த பல பல்லினங்கள் சார்ந்த பிள்ளைகளையும் அவர்களோடு நான் சேர்ந்து கற்ற விடயங்களையும், ஒன்றாக விளையாடியதையும், எப்போதும் திரும்பவும் நினைவில் கொண்டு வருவதுண்டு. இதுதான் கனடாவின் சிறப்பியல்களில் ஒன்றாகும்.

இந்த கோவிட்-19 காலப் பகுதியிலும், நாம் இனவாதத்தின் வளர்ச்சியை கனடாவில் காண்கின்றோம். உதாரணமாக வன்குவர் நகரில் ஆசிய கனடியர்களுக்கு எதிரான இனவாத எதிர்ப்பு அல்லது வெறுப்பைத் தரக்கூடிய செயல்கள் ஆகிய சுமார் 700 வீதம் அதிகரித்துள்ளதை நாம எமக்குக் கிடைக்கும் தகவல்கள் மூலம் அறிகின்றோம். இந்த விடயமானது முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும். இந்த விடயமானது எமக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள ஒரு ஞாபகப்படுத்தும் எச்சரிக்கை ஒலி என்பதும் இதற்கு எதிராக நாம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதையும் எமக்கு உணர்த்தியுள்ளது.

கனடாவில் வாழும் உங்கள் அனைவரையும் என்னையும் போன்ற நாம் அனைவரும் எங்கள் கதைகளையும் எங்கள் வளர்ச்சியையும் கண்டு பெருமைப்பட வேண்டும். கனடாவில் இனவாதத்திற்கான இடமே இல்லை என்பதை நாம் உணரவேண்டும். அத்துடன் கனடியப் பிரதமர், எமது அரசாங்கம், அவர்களுடன் நானும் இணைந்து நின்று இங்குள்ள இனவாதம் மற்றும் இனப்பாகுபாடு ஆகியவற்றை முறியடிக்கவேண்டும். இவ்வாறு கனடிய அமைச்சர் மேரி இங் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மனித உரிமைப் பேரவையின் 46 வது கூட்டத்தொடரில் Lawyers’ Rights Watch Canada சார்பில் ஹரினி சிவலிங்கம் உரையாற்றினார்

ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46 வது கூட்டத்தொடரில், சிறப்பு ஆலோசனைத் தகுதியுள்ள Lawyers’ Rights Watch Canada (LRWC) அமைப்பின் சட்டத்தரணி ஹரினி சிவலிங்கம் அவர்கள் உரையாற்றினார். அவரது உரையின் எழுத்து வடிவம் கீழே காணப்படுகின்றது.



**பேரவைத் தலைவி அவர்களே,**

Lawyers’ Rights Watch Canada (LRWC) **இலங்கை தொடர்பான அறிக்கைக்காக உயர் ஆணையாளருக்கு நன்றி தெரிவிக்கிறது. இலங்கையில் நிலவும் குற்றம்புரிந்தோர் தண்டிக்கப்படாத நிலைமையைப் பேரவை உடனடியாகக் கருத்திற் கொள்ளவேண்டுமென்ற கரிசனையை நாமும் கொண்டுள்ளோம். தமிழ் மக்கள் மீது முன்னர் புரியப்பட்ட சட்டவிரோதமான கொலைகள், ஆள்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, தான்தோன்றித்தனமான தடுத்து வைத்தல், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை உள்ளடங்கலான மீறல்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூறப்படாதமையும், இந்தப் பேரவையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டமையும், இவை மீள இடம்பெறும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றன.**

**மனித உரிமைப் பாதுகாவலர்கள், வழக்கறிஞர்கள், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆகியோரின் குரல்களை மௌனிக்கச் செய்யும் நோக்கத்துடன் இடம்பெறும் கட்டமைக்கப்பட்ட வகையான கண்காணிப்பு, தொந்தரவு மற்றும் மிரட்டல் என்பன எமக்குக் கவலையை ஏற்படுத்துகின்றன. அரசு - போர்க் குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூருவதை ஒடுக்குவதும், ஆர்ப்பாட்டங்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதும், இராணுவ மயமாக்கப்பட்ட கோவிட்-19 ஒழுங்கமைப்பின் கீழ் முஸ்லிம் மற்றும் ஏனைய சிறுபான்மையினரின் உடல்கள் பலவந்தமாகத் தகனம் செய்யப்படுவதும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தும் போக்குகளாக அமைகின்றன. இலங்கை தவறான பாதையில் செல்வதையும், நீதி, பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கான எந்த உள்நாட்டுப் பொறிமுறையும் வெற்றியளிக்கப் போவதில்லையென்பதையும் அறிகுறிகள் தெளிவாகக் காட்டுகின்றன. மனித உரிமை நிலைமை மேலும் சீர்குலைந்து செல்வதைத் தடுப்பதற்குச் சர்வதேச தலையீடு அவசரமாகத் தேவைப்படுகிறது.**

**நாம் பேரவையிடம் பின்வரும் ஆலொசனைகளைச் சமர்ப்பிக்கின்றோம்:**

**1. இலங்கை மீதான கண்காணிப்பைப் பலப்படுத்துமாறும், சர்வதேச மட்டத்தில் பொறுப்புக் கூறலுக்கான வழிகளைச் செய்வதற்கான ஒருசீரான, செயற்திறனுள்ள, நேரக் கட்டுப்பாட்டைக் கொண்டது திட்டத்தை முன்வைக்குமாறும்.**

**2. இலங்கை நிலைவரத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் பரிந்துரை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும்.**

**3. உறுப்பு நாடுகள் இலங்கையில் புரியப்பட்ட சர்வதேச குற்றங்களுக்கு சர்வதேச நியாயாதிக்கக் கோட்பாட்டைப் பயன்படுத்தி அவற்றின் தேசிய நீதிமன்றங்களில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஊக்குவிப்பதுடன், இலங்கையில் பாரதூரமான மீறல்களைப் புரிந்ததாக அடையாளம் காணப்பட்டவர்கள் மீது பயணத் தடைகள், சொத்துக்களை உறைநிலையில் வைத்தல் போன்ற தண்டனைகளை விதிக்குமாறும் கோருகிறோம்.’**

மேற்கண்டவாறு அவரது உரை அமைந்திருந்தது.


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# இந்தியாவின் நிலையான நிலைப்பாடு இரண்டு தூண்களில் உள்ளது!

கனடா – நக்கீரன்

சாத்தான் வேதம் ஓதுகிறது என்பது தமிழில் வழங்கும் ஒரு பழமொழி. உண்மையில் இது ஒரு ஆங்கிலப் பழமொழி. பிரபல ஆங்கில நாடக ஆசிரியர் வில்லியம் சேக்ஸ்பியர் தாம் எழுதிய வெனிஸ் வாணிகன் (The Merchant of Venice) என்ற நாடகத்தில் வருகிறது. "பிசாசு தன் நோக்கத்திற்காக வேதத்தை மேற்கோள் காட்ட முடியும் (The devil can cite Scripture for his purpose) என்பதுதான் அந்த சொற்றொடர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் பெப்ரவரி 23 ஆம் நாள் காணொளி மூலம் சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பேசினார். அவர் தனது பேச்சை முடிக்கும் போது புத்த பிரானின் போதனையை மேற்கோள் காட்டினார்.



எல்லா உயிரினங்களும் பாதுகாப்பாக இருக்கட்டும்,
எல்லா உயிரினங்களும் துன்பத்திலிருந்து விடுபடட்டும்.
எல்லா உயிரினங்களும் நன்றாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கட்டும்.

வெறியுறவு அமைச்சர் புத்தரின் போதனையை தனது பேச்சின் முடிவில் மேற்கோள் காட்டிய போது இந்த சாத்தான் வேதம் ஓதுகிறது என்ற பழமொழிதான் நினைவுக்கு வந்தது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தமது உரையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைர் அலுவலகத்தினால் முன்வைக்கப்பட்ட இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கையில் உள்ள முடிவுகளையும் பரிந்துரைகளையும் இலங்கை திட்டவட்டமாக நிராகரிப்பதாகத் தெரிவித்துள்ளார். இது எதிர்பார்க்கப்பட்டதே.

சென்று ஆண்டு (2020) பெப்ரவரி மாதத்தில் ஐநா-மஉ பேரவையின் 43 ஆவது அமர்வின் போது சிறிலங்கா அரசாங்கம் ஐநாமஉ பேரவையின் தீர்மானம் 30/1 மற்றும் 40/1 இரண்டுக்கும் டுத்த இணைஅனுசரணையில் இருந்து முற்றாக விலகுவதாக அறிவித்திருந்தது. அப்படி சிறிலங்கா விலகிக் கொண்டாலும் தீர்மானங்கள் தொடர்ந்து உயிர்ப்புடன் இருக்கும் என்பது தெரிந்ததே. ஐநாமஉ பேரவையின் உயர் ஆணையர் மிச்செல் பச்சலெட் வெளியிட்ட 17 பக்க அறிக்கையில் சிறிலங்கா மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.

உள்நாட்டு யுத்தம் முடிந்து சுமார் 12 ஆண்டுகள் கடந்த பிறகும் கூட பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது உறுதிப்படுத்தப் படவில்லை. கடந்த காலங்களில் நிலவிய அதே அடக்குமுறை, துன்புறுத்தல் போன்றவை தொடர்கின்றன என்றார்.

2015 ஆம் ஆண்டில், மனித உரிமை மீறல் நடக்காதவாறு பார்த்துக் கொள்வதாக உறுதிமொழி அளித்த பிறகும், தற்போதைய அரசு, அதன் முந்தைய ஆட்சியாளர்களைப் போலவே, உண்மையைக் கண்டறியவும் குற்றங்களுக்குப் பொறுப்புடைமையைக்கும் நடவடிக்கையிலும் தோல்வி அடைந்துள்ளது. போரில் உயிர் பிழைத்த ஆயிரக்கணக்கானோரின் வாழ்வு நிர்மூலமாகியிருக்கிறது. அதுமட்டுமன்றி அமைப்புமுறை, கட்டமைப்பு, கொள்கைகள், பணியாளர்கள் போன்றவற்றில் முந்தைய காலம் போலவே விதிமீறல்கள் தொடர்கின்றன. ஐநாமஉ பேரவையின் முக்கியமான பணி, குறைகளுக்கு தீர்வு கண்டு முந்தைய விதிமீறல்கள் நடக்காதவாறு கவனிப்பதுதான்.

கடந்த ஆண்டு, முக்கிய பகுதிகளில் மிகக் கடுமையான வகையில் சங்கடத்தை தரக்கூடிய போக்கு தீவிரமாக இருப்பதை எமது அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

முந்தைய ஆண்டுகளில் வளர்ந்து வந்த சிவில் சமூகமும் தன்னிச்சையான ஊடகமும் தற்போது வேகமாக சுருங்கி வருகின்றன. நீதித்துறை சுதந்திரம், இலங்கை மனித உரிமைகள் ஆணையம், தேசிய காவல்துறை ஆணையம் ஆகியவை சமீபத்தில் கொண்டு வரப்பட்ட 20 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் பலவீனமாக்கப்பட்டுள்ளன. முக்கியமான சிவில் நிர்வாக பணிகளில் வளர்ந்து வரும் இராணுவத் தலையீடு, ஜனநாயக ஆளுகை மீதான ஆக்கிரமிப்பாக பார்க்கப்படுகிறது.

பிரத்தியேக சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதில் காணப்படும் தொடர்ச்சியான தோல்வி அல்லது விதிமீறல்களுக்குக் காரணமானவர்களை அடையாளம் காணாமல் இருப்பது, கொடூரமான குற்றங்கள் மற்றும் விதி மீறலில் குற்றம்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளைப் பொறுப்புடைமைக்கு ஆளாக்காமல் விட்டுள்ளமை போன்றவை அரசின் அலட்சியத்தைக் காட்டுகின்றன.

தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர், அரசின் உயர் பொறுப்புகள் உள்ளிட்ட பணிகளில் சேராத வகையில், பிளவு படுத்தக்கூடிய மற்றும் தவறான சொல்லாடல்களால் தவிர்க்கப்படுகிறார்கள். சிறுபான்மை சமூகங்கள் கவலை கொவிட்- 19 சடலங்கள் கட்டாயப் படுத்தப்பட்டு தகனம் செய்யப்படுவது முஸ்லிம் மற்றும் கிறிஸ்துவ சிறுபான்மை சமூகங்களுக்கு வலியையும் சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது. வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால், நீண்ட கால அடிப்படையிலான அமைப்பு சார்ந்த சிக்கல்கள் இலங்கையில் தொடருகின்றன.

கடந்த கால வன்முறைகள், இப்போதும் தொடர்-லாம் என்ற அபாய செய்தியின் அறிகுறி தெளிவாக தென்படுகிறது. அடுத்து வந்த அரசுகள், உண்மையையும் பொறுப்புடைமையையும் உறுதிப்படுத்துவதில் தோல்வி அடைந்து விட் டன. உண்மையில், மனித உரிமைகள் வழக்குகளில் அரசாங்கம் நீதி நடைமுறைகளுக்கு தடங்கலை ஏற்படுத்தியிருக்கிறது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா தனது உரையில் ஐநாமஉ பேரவையின் ஆணையர் மிச்செல் பச்சலெட் சமர்ப்பித்த அறிக்கையில் காணப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தையுமே நிராகரித்திருந்தார். இப்படி நடக்கும் என்பது முன்னரே தெரிந்திருந்தது. அமைச்சர் தனது உரையில் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார். அதாவது "ஐநா சாசனத்தின் 2(7) ஆவது பிரிவான தற்போதைய சாசனத்தில் உள்ள எதுவும் ஐக்கிய நாடுகள் சபைக்கு எந்தவொரு அரசினதும் உள்நாட்டு அதிகார எல்லைக்கு உட்பட்ட விடயங்களில் தலையீடு செய்வதற்கு அங்கீகாரம் அளிக்காது என்ற விதியை முழுமையாக மீறும் செயலாகும்" என்றார்.

ஐநா சாசனத்தின் 2(7) பிரிவு சொல்வது உண்மைதான். ஆனால் மனிதாபிமான தலையீடு சமீபத்திய ஆண்டுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. மற்ற நாடுகளில் மனித உரிமை நிலைமையை விமர்ச்சிக்க மாநிலங்களுக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் உரிமை உண்டு என்பது இப்போது மறுக்கப்படுவதில்லை. சிறிலங்கா கூட ஐநாமஉ பேரவை-யின் தலையீட்டை நேற்றுவரை ஏற்றுக் கொண்டுதான் வந்திருக்கிறது. தீர்மானங்கள் 30/1 மற்றும் 40/1 சிறிலங்காவின் உள்நாட்டு விடயங்களில் தலையீடு செய்த நடவடிக்கைகள்தான்.

சிறிலங்கா போர்க்காலத்தில் எந்த மனித உரிமை மீறல்களையும் மீறவில்லை ஒரு கையில் மனித உரிமைப் பட்டயத்தையும் மறுகையில் துப்பாக்கியோடுதான் வி.புலிகளுக்கு எதிராகப் போராடி வெற்றிவாகை சூடியது, போரில் ஒருவர்கூடக் கொல்லப்படவில்லை என மகிந்த இராசபக்ச தொடர்ந்து பேசி வருகிறார்.

போரின் கடைசிக் கட்டத்தில் இராணுவம் வி.புலிகளைச் சரணடையுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்துக் கொண்டிருந்தது. ஏற்கனவே வி. புலிகள் தங்களது ஆயுதங்களை மவுனிப்பதாக அறிவித்திருந்தார்கள். இதனை அடுத்து 18 மே அதிகாலை பா.நடேசன் (சமாதானச் செயலகம்) சீ. புலித்தேவன் ( அமைதிச் செயலகம்) கேணல் இரமேஷ் (தமிழீழ காவல்துறை) ஆகிய மூவர் தலைமையில் நூற்றுக் கணக்கானவர்கள் வெள்ளைக் கொ-டியுடன் சரண் அடைந்தார்கள். இந்தச் சரணையை மகிந்த இராசபக்ச, பசில் இராசபக்ச, முன்னாள் நா.உறுப்பினர் சந்திர நேரு மற்றும் வெளியுறவு அமைச்சின் செயலாளர் பாலித கோகொன தொலைபேசி வாயிலாகச் ஒழுங்கு செய்திருந்தார்கள்.

ஆனால் சரண் அடைந்த வி.புலிகள் எல்லோரும் சித்திரவதைக்குப் பின்னர் கொல்லப்பட்டார்கள். குண்டுபாய்ந்த அவர்களது உடல்கள் தரையில் வீசப்பட்டிருந்தன. உடல்களில் தீக்காயங்கள் காணப்பட்டன. புகைப்படங்கள் ஊடகங்களில் வெளிவந்தன. கேணல் இரமேஷ் கொடூரமான முறையில் விசாரணை செய்யப்படும் காட்சி காணொளியாக வெளிவந்தது.



18 மே 2009 அன்று மாலை மேலும் ஒரு தொகுதி வி. புலிகளின் தலைவர்கள் வட்டுவாகலில் இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவிடம் சரண் அடைந்தார்கள். இதன் கட்டளைத் தளபதி சவேந்திரா சில்வா. இதில் ஆயுதம் ஏந்தாத – சீருடை தரிக்காத தலைவர்களும் இருந்தார்கள். இவர்களை ஒரு சிறிய விசாரணையின் பின்னர் விடுவிப்பதாகக் கூறி இராணுவம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் அழைத்துச் சென்றார்கள். அவர்களோடு வண.பிதா யோசேப் பிரான்சிஸ் அவர்களும் சேர்ந்து கொண்டார். அவர்கள் பேருந்துகளில் ஏற்றிச் சென்றதை நூற்றுக் கணக்கான குடும்ப உறுப்பினர்கள் கண்கண்ட சாட்சியாக இருக்கிறார்கள். விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்ட வி.புலித்தலைவர்களது பட்டியல் இதோ:

1. செல்வராசா – மணலாறு கட்டளைப் பணியகத் தளபதிகளில் ஒருவர்
2. பாஸ்கரன் – மணலாறு கட்டளைப் பணியக தளபதிகளில் ஒருவர்
3. வேலவன் – இம்ரான் பாண்டியன் சிறப்புத்தளபதி
4. தளபதி லோரன்ஸ்
5. தளபதி குமரன்
6. இளந்திரையன் – விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர்
7. பிரபா - மட்டுமாவட்ட தளபதிகளில் ஒருவர்
8. சோ. தங்கன் – அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர்
9. ரூபன் – வழங்கல் பகுதி பொறுப்பாளர்
10. பாபு – நகை வாணிபங்களின் பொறுப்பாளர்
11. வீரத்தேவன் – வைப்பகப் பொறுப்பாளர்
12. கி. பாப்பா – விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்
13. இராசா (செம்பியன்) – விளையாட்டுத்துறை துணைப் பொறுப்பாளர் மற்றும் அவரது மூன்று பிள்ளைகள்
14. கானகன் – அரசியல் துறை
15. வெ. இளங்குமரன் (பேபி சுப்பிமணியன்)– கல்விக்கழகப் பொறுப்பாளர். மற்றும் அவரது மனைவி வெற்றிச்செல்வி மற்றும் மகள் அறிவுமதி
16. அருணா – கல்விக்கழக பொறுப்பாளர்களில் ஒருவர்
17. க.வே. பாலகுமாரன் – அவரது மகன் சூரியத்தேவன், உதவியாளர் போராளி அய்ங்கரன்
18. சொ.நரேன் – தமிழர் புனர்வாழ்வுக்கழக துணை நிறைவேற்றுப் பணிப்பாளர்
19. பிரியன் – நிருவாக சேவை பொறுப்பாளர் மற்றும் அவரது குடும்பம்
20. வீ. பூவண்ணன் – நிர்வாக சேவை முன்னாள் பொறுப்பாளர்
21. தங்கையா – நிர்வாகசேவை பொறுப்பாளர்களில் ஒருவர்
22. மலரவன் – நிர்வாக சேவை பொறுப்பாளர்களில் ஒருவர்
23. பகீரதன் – நிர்வாக சேவை பொறுப்பாளர்களில் ஒருவர்
24. குட்டி – போக்குவரத்துக் கழகப் பொறுப்பாளர்
25. புதுவை இரத்தினதுரை – கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்
26. எழிலன் (சசிதரன்) – திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்
27. இளம்பரிதி – யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்
28. விஜிதரன் – அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர்
29. வீமன் – தளபதிகளில் ஒருவர்
30. சக்தி – வனவள பாதுகாப்புப்பிரிவு பொறுப்பாளர் மற்றும் அவரது குடும்பம்
31. இ. இரவி – சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்
32. சஞ்சை – முள்ளியவளைக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்
33. பரா ராதா – நீதி நிர்வாகப் பொறுப்பாளர்
34. யோகி யோகரத்தினம் – சமர்ஆய்வு மையப் பொறுப்பாளர்
35. குமாரவேல் – இராதா வான்காப்புப் படையணி பொறுப்பாளர்களில் ஒருவர்
36. ரேகா – மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர்
37. சித்திராங்கன் – மணலாறு மாவட்ட கட்டளைத் தளபதி
38. சுகி – மாலதி படையணித் தளபதிகளில் ஒருவர்
39. அருணன் – கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவர்
40. மனோஜ் – மருத்துவப் பிரிவு
41. லோறன்ஸ் – நிதித்துறை.

கொழும்பிலிருந்து வெளியாகும் Sri Lanka Guardian 10-08-2010 இல் வெளிவந்த பதிப்பில் பாலகுமாரன் மற்றும் அவரது மகன் ஒரு மரவாங்கில் அருகருகே வீற்றிருக்கும் படத்தை முதல் முறையாக வெளியிட்டது. அதன் பின்புலத்தில் சீருடை அணிந்த ஒரு இராணுவத்தினன் நடந்து செல்வது பதிவாகியிருக்கிறது. (http://www.srilankaguardian.org/2010/08/v-balakumaran-killed-or-still-alive.html)

19 மே, 2009 அன்று சரணடைந்த பின்னர் காணாமல் போன 110 விடுதலைப் புலிகளது முக்கிய தலைவர்கள், போராளிகளது பெயர்ப் பட்டியலை யஸ்மின் சூக்கா (International Truth & Justice Project – Sri Lanka) வெளியிட்டிருந்தார்.

இப்படிக் கண்கண்ட சாட்சிகள், புகைப்படங்கள், காணொளிகள் இருந்தும் இராசபக்ச அரசாங்கம் சார்பாக வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தொடர்ந்து பொய் சொல்கிறார். இது முழுப் பூசணிக்காயை ஒரு கோப்பை சோற்றுக்குள் மறைத்தது போன்றது!

வி.புலிகளின் தலைமையை திட்டமிட்டு சிங்கள - பேரினவாதம் அநாகரிகமான முறையில் அழித்தொழித்துள்ளது.

சரண் அடைந்தவர்களைக் கொல்லக் கூடாது என்ற மரபு இதிகாச காலம் தொட்டு இருந்து வருகிறது. சுக்கிரீவனை இராமன் மரத்தின் பின்னால் ஒளிந்திருந்து கொன்றதற்குக் காரணம் நேரில் அவன் முன் தோன்றினால் சுக்கிரீவன் சரண் அடைந்து விடுவான், அப்புறம் அவனைக் கொல்ல முடியாது என இராமன் நினைத்ததே.

இதை எழுதிக் கொண்டிருக்கும் போது ஐநாமஉ பேரவையின் உறுப்பு நாட்டுப் பிரதிநிதிகள் ஐக்கிய இராச்சியம், கனடா, ஜெர்மனி போன்ற நாடுகள் முன்மொழிந்த தீர்மானம்பற்றி தங்களது கருத்துக்களை (ஒன்றரை நிமிடம்) பதிவு செய்து வருகிறார்கள். சில நாடுகள் தீர்மானத்தை எதிர்த்தும் சில நாடுகள் ஆதரித்தும் பேசியிருக்கின்றன. எல்லா நாட்டுப் பிரதிநிதிகள் பேசி முடித்த பின்னர்தான் தீர்மானம் அடுத்த மாதம் நடைபெற இருக்கும் வாக்கெடுப்பில் கரைசேருமா இல்லையா என்பது தெரியவரும்.

சிறிலங்கா அரசு தனக்கு 18 உறுப்பு நாடுகளது ஆதரவு இருப்பதாகச் சொல்கிறது. இப்போது ஐநாமஉ பேரவையில் உள்ள 14 இஸ்லாமிய நாடுகளின் ஆதரவை பெறும் பொருட்டு முஸ்லிம்களது உடலை புதைக்க அனுமதியோம் எரித்தே தீருவோம் வெளிநாடுகளது தலையீட்டுக்கு அனுமதியோம் என்று வீரம் பேசி வந்த இராசபக்ச அரசாங்கம் இப்போது அசுர வேகத்தில் உடல்களைப் புதைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் முன்பாக கொண்டு செல்ல இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்



## பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் பேச்சு

"இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு மட்டுமன்றி சர்வதேச நீதி மன்றத்துக்கும் (International Court of Justice) கொண்டு செல்வதற்கு இந்தியா நடவடிக்கைகளை முன்னின்று செயற்படுத்த வேண்டும்.

தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் வடக்கு கிழக்கிலே சர்வதேச சமூகத்தினால் பொதுவாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படுவதற்கு இந்தியா தலைமை தாங்கி செயற்படுவதானது இலங்கைத் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் பல அனுகூலங்களைப் பெற்றுக்கொடுக்கும். இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும்வகையில் இலங்கையின் வடக்கின் சில கேந்திர முக்கியத்துவம்மிக்க இடங்களை சீனாவுக்கு கொடுப்பதற்கு இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளை நிறுத்துவதற்கும் இந்தியாவின் தென் கோடியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கையின் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கென உச்சபட்சமான நிரந்தரமான அதிகாரக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கும் இந்தியாவுக்கு இருக்கும் ஒரு சந்தர்ப்பமே சர்வதேச குற்றவியல் நீதிமன்றமாகும்".

இவ்வாறு கூறினார் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன். நேற்று இந்தியாவைத் தளமாகக் கொண்ட ஒரு அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இணையவழி கூட்டமொன்றில் அவர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "பொருத்தமான இந்த காலப்பகுதியில் இன்றைய இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தமைக்காகவும் என்னையும் கலந்துகொண்டு பேசுவதற்கு அழைத்தமைக்காகவும் எனது நன்றிகளை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்".

கடந்த 11 வருடங்களாக இலங்கையின் வடக்குகிழக்கு தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டம் விரும்பியோ விரும்பாமலோ ஐ. நா மனித உரிமைகள் சபையை மையப்படுத்தியதாகவே இருந்துவந்துள்ளது. இதன் அர்த்தம் மனித உரிமைகள் சபையின் ஊடாக தமக்கு நீதியும் சமாதனமும் கிடைக்கும் என்று தமிழ் மக்கள் முழுமையாக நம்பிக்கை வைத்து செயற்பட்டார்கள் என்பது அல்ல.

இனப்படுகொலையின் உச்சக்கட்டம் முள்ளிவாய்க்காலில் நடைபெற்றபின்னர் மிகவும் பலவீனமும் சோர்வும் அடைந்து இருந்த எமக்கு ஐ. நா மனித உரிமைகள் சபை இலகுவான தெரிவாக தென்பட்டதால் அதனை நாம் இறுக்கமாக பற்றிக்கொண்டுவிட்டோம்.

சர்வதேச சட்டங்கள், சர்வதேச நீதிப் பொறிமுறைகள், மனித உரிமைக் கோட்பாடுகள், சர்வதேச உறவுகள், புவிசார் அரசியல் ஆகியவற்றை சரியான முறையில் கையாண்டு சந்தர்ப்பங்களை உருவாக்கி அல்லது இருக்கும் சந்தர்ப்பங்களை முறையாக கையாண்டு மனித உரிமைகள் சபைக்கு சமாந்திரமாக வேறு வழிகளில் செல்வதற்கு நாம் பெரியளவில் ஈடுபடவில்லை. இதற்குகாரணம், முற்றுமுழுதாக விடுதலைப்புலிகளின் நிழல் அரசின் இராணுவ மற்றும் அரசியலில் எமது மக்களின் பாதுகாப்பும் நல்வாழ்வும் 2009 வரை தங்கி இருந்தமையே. 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் நாம் பூஜ்யத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டி இருந்தது. வடக்கு - கிழக்கிலே நாம் சுயாதீனமாக செயற்பட முடியாதளவுக்கு அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது.

நன்கு கட்டமைக்கப்பட்ட அரசியல் செயற்பாடுகள் எம்மத்தியில் இருக்கவில்லை. சர்வதேச அரசியலும், ராஜதந்திரமும் எமக்கும் புதிதாக இருந்தன.

இதே நிலைமைதான் புலம்பெயர் மக்கள் மத்தியிலும் இருந்தது. கட்டமைப்புக்களையும் செயற்பாடுகளையும் புதிதாக உருவாக்கி செயற்படவேண்டி இருந்தது. நிலத்திலும், புலத்திலும் பல குழப்பங்களும் முரண்பாடுகளும் ஏற்பட்டன. தமிழர் என்ற இனத்தின் நிமிர்த்தமும், தமிழ் என்ற மொழியின் நிமிர்த்தமும் நாம் உலகில் மிகவும் பலமான ஒரு சக்தியாக இருப்பதற்கான எல்லாமே எம்மிடம் இருந்தும் துரதிஷ்டவசமாக வீழ்ந்துகிடந்த எம்மை கைகொடுத்து தூக்கி நிமிர்த்தி தெம்பூட்டும் நிலையில் தமிழகமும் இருக்கவில்லை. எமது புலம்பெயர்சமூகமும் ருக்கவில்லை. ஆதலால், நாம் அநாதரவாக இருந்தோம் என்பதே உண்மையானது.

ஆனால், கடந்த 11 ஆண்டுகளில் நாம் பலவற்றைக் கற்றிருக்கின்றோம். எமது தவறுகளை உணர்ந்து கொண்டிருக்கின்றோம். உலகத்தை புரிந்து கொண்டிருக்கின்றோம். பூகோள அரசியலை புரிந்து கொண்டிருக்கின்றோம். ஐ. நா மனித உரிமைகள் சபையை புரிந்து கொண்டிருக்கின்றோம். நாம் தெளிவுபட்டு வருகின்றோம். இந்த தெளிவு நிலத்திலும் ஏற்படுகின்றது, புலத்திலும் ஏற்படுகின்றது. ஆகக்குறைந்தது செயற்பாடுகளை மையமாக வைத்தேனும் நிலத்திலும், புலத்திலும் ஒற்றுமை துளிர்விட ஆரம்பித்திருக்கின்றது.

எதிர்வரும் மனித உரிமைகள் சபைத் தீர்மானம் தமிழ் மக்களுக்கான நீதி, மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் ஒரு திருப்புமுனையாக அமையும் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால், தற்போது வெளியாகியுள்ள முதலாவது தீர்மான வரைபு பெரும் ஏமாற்றத்தை எமக்கு அளித்திருக்கின்றது. இதுதொடர்பில் எனது ஏமாற்றத்தையும் கடும் அதிருப்தியையும் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தேன்.

இந்த வரைபு காரணமாக இலங்கையின் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் பாதுகாப்பு தொடர்பில் நிச்சயம் அற்ற ஒரு சூழ்நிலை உருவாகி இருப்பதுடன் அவர்கள் மத்தியில் தமது பாதுகாப்பு பற்றிய ஒரு அச்சமும் உருவாகி வருகின்றது. இந்த வரைபு அப்படியே நிறைவேற்றப்பட்டால், தமிழ் மக்களின் பாதுகாப்பு பெரும் ஆபத்தான ஒரு நிலைமைக்கு செல்லும். ஏற்கனவே எமக்கு எதிரான செயற்பாடுகள் கழுத்துவரை வந்துவிட்டன.

இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்கள் எதிர்காலத்தில் இடம் பெறுவதற்கான ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணையாளரே குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரைபு வலுவாக்கப்படுவதற்கு அல்லது மேலும் வலுவற்றதாக்கப்படுவதற்கு இன்னமும் இரண்டு வாரங்கள் மட்டுமே இருக்கின்றன. இனப்படுகொலை, போர்க்குற்றம் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றம் ஆகியவற்றை விசாரிப்பதற்கு இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்துவதற்கு ஐ. நா பாதுகாப்பு சபை மற்றும் ஐ. நா பொதுச்சபை ஆகியவை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவற்றை ஐ. நா மனித உரிமைகள் சபையின் தீர்மானம் வலியுறுத்த வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும், அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளினதும் கோரிக்கையாக இருக்கின்றது. இந்த வலியுறுத்தலை தீர்மானத்தில் கொண்டுவருவதற்கு இந்தியா முக்கிய வகிபாகத்தை மேற்கொள்ள முடியும்.

அத்துடன் சர்வதேச நீதிமன்றம் மற்றும் பொது வாக்கெடுப்பு ஆகியனவும் எமக்கு பரஸ்பரம் நன்மை கொடுப்பன. இலங்கையின் ராஜதந்திர சூழ்ச்சிகளுக்கு இந்தியா ஏமாந்து இந்த பொன்னான சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிடக் கூடாது.

கொழும்பு துறைமுக விடயம் சரி, அல்லது வடக்கின் மூன்று தீவுகள் விடயத்தில் சரி இலங்கை அரசாங்கம் இந்தியா சார்பில் மேற்கொள்ளும் விட்டுக்கொடுப்புக்களோ அல்லது இணக்கப்பாடுகளோ தற்காலிகமானவையே அன்றி நிரந்தரமானவை அல்ல என்பதை இந்தியா புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தியாவின் மத்திய அரசாங்கத்துக்கு இந்த விடயத்தில் பாரிய அழுத்தம்கொடுக்கும் பணியை தமிழ் நாடு செய்யவேண்டும். இதுவெறுமனே ஒரு அரசியல் வலியுறுத்தலாக அன்றி மக்கள் இயக்கத்தின் ஊடாகவும் மேற்கொள்ளப்படவேண்டும். இன்றைய பத்திரிகைகளில் மூன்று தீவுகள் பற்றிய Tender தமக்கே தரப்பட்டுள்ளதாகவும் மூன்றாம் நபர்கள் எந்தவித குறுக்கீடுகளையும் செய்யப்படாது என்று சீனக்கம்பனியொன்று கேட்டுள்ளது என்ற செய்தி வந்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இரு பெரும் நாடுகளுக்கிடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தினால் பாதிக்கப்படப்போவது இலங்கையின் வடமாகாணமக்களும் இந்தியாவின் தமிழ்நாடுமே. அதனாலத் தான் இன்றைய காலகட்டத்தின் முக்கியத்துவம் பற்றி ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி, மனித உரிமைகள் சபைக்கு சமாந்திரமாக எமக்கான நீதியையும் சமூக, பொருளாதார, அரசியல் அபிலாஷைகளையும் வென்றெடுக்கும் பல வழிகளை திறந்து செயற்படவேண்டிய காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம்.

எவ்வாறு ICI என்ற சர்வதேச நீதிமன்றத்தை நாடுவது,எவ்வாறு பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்த ஏற்பாடுசெய்வது, எவ்வாறு எமது மக்களை வலுவூட்டுவது, எவ்வாறு responsibility to protect (R2P) கோட்பாட்டை எமக்கு சாதகமாக பயன்படுத்துவது, எவ்வாறு ஆய்வு மற்றும் அறிவியலை பயன்படுத்திக் கொள்வது, எவ்வாறு "தமிழ்" என்ற அடையாளத்தையும் தமிழர் என்ற இனத்தையும் பயன்படுத்திக் கொள்வது என்றெல்லாம் நாம் பல வழிகளிலும் சிந்தித்து செயற்படுவதிலேயே எமது எதிர்காலம் தங்கியுள்ளது." என்றார்.

**- மன்னார் நிருபர் (24-02-2021)**

# "ரொரன்ரோ மனித நேயக் குரல்" அமைப்பு நிதியுதவியில் யாழ் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் திட்டம்












கனடாவின் நீண்டகாலமாக இயங்கிவரும் "ரொரன்ரோ மனித நேயக் குரல்" அமைப்பின் நிதியுதவியில் யாழ்ப்பாண மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் திட்டம் தொடர்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட இந்த உதவித் திட்டத்தின்படி அண்மையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு அருகில் இடம்பெற்ற சிறிய வைபவத்தில் அப்பகுதியில் வாழும் உதவிகள் தேவைப்படும் மாணவ மாணவிகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் ஆசிரியருமான திரு பொ. ஐங்கரநேசனின் ஏற்பாட்டில் இந்த வைபவம் இடம்பெற்றது.

கனடாவின் நீண்டகாலமாக இயங்கிவரும் "ரொரன்ரோ மனித நேயக் குரல்" அமைப்பின் நிதியுதவியில் தொடர்ந்து இலங்கையின் பல பாகங்களிற்கும் மனித நேய உதவிகள் வழங்கப்படுவதாக அமைப்பின் செயலாளர் திரு மரியராசா மற்றும் பொருளாளர் திரு சங்கர் நல்லதம்பி ஆகியோர் கனடா உதயன் மற்றும் நண்பன் இணையத்தளங்களுக்கு தெரிவித்துள்ளார்கள். சுமார் ஆறு இலட்சம் இலங்கை ரூபாய்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த திட்டத்தின் இறுதி நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து கனடாவின் "ரொரன்ரோ மனித நேயக் குரல்" அமைப்பின் உதவித் திட்டங்களுக்கு தங்கள் நிதி அன்பளிப்புக்களை வழங்கவிரும்புவோர் தொடர்புகொள்ளவும்.
(416) 270-4343, (416) 732-1608.

---

**இந்த அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் திட்டத்திற்கு கனடாவில் பின்வருவோர் தங்கள் அன்பளிப்புக்களை வழங்கியிருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.**

**பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு அன்னை (ஒரு ஆன்மீகத் தலைவி), கனடா ஸ்ரீ கைலாசா யோகா அமைப்பு, திரு சங்கர் நல்லதம்பி மற்றும் திரு ஆர். என். லோகேந்திரலிங்கம்.**



# ஐநா தீர்மானத்தின் ஸீரோ வரைபு

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

கடந்த திங்கட்கிழமை இலங்கைத் தீவின் வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் ஜெயந்த கொலம்பகே The Debrief என்ற யூடியூப் சனலில் ரோயல் ரெய்மெண்ட்டிற்கு மிக நீண்ட நேர்காணலை வழங்கியிருந்தார். நேர்காணலில் அவர் பல விடயங்களைப் பற்றியும் கதைக்கிறார். அதில் ஓரிடத்தில் அவர் கூறுகிறார்... “இலங்கை ஒரு சிறிய நாடு அதன் பொருளாதாரமும் சிறியது ஆனால் அதன் அமைவிடம் காரணமாக அதற்குள்ள கேந்திர முக்கியத்துவத்தை கருதிக்கூறின் அது ஒரு பெரிய நாடு” என்று.

அதுதான் உண்மை. இந்துமகா சமுத்திரத்தில் இலங்கைத் தீவின் அமைவிடம்தான் அதன் பலம். அதேசமயம் அதுதான் அதன் துயரமும். இது சிங்கள மக்களுக்கும் பொருந்தும் தமிழ் மக்களுக்கும் பொருந்தும். கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களின் எல்லா துயரங்களுக்கும் ஊற்று மூலம் அதுதான். இனிமேல் சிங்கள மக்களின் எல்லா துயரங்களுக்கும் அதுவே ஊற்று மூலமாக அமைந்து விடுமா?

சீனாவின் பட்டியும் பாதையும் என்றழைக்கப்படும் உலகளாவிய வியூகத்தின்படியும் இலங்கைத் தீவுக்கு மிகப்பெரிய கேந்திர முக்கியத்துவம் உண்டு.அதுபோலவே பட்டியும் பாதையும் திட்டத்துக்கு எதிரான அமெரிக்காவின் இந்தோ பசிபிக் மூலோபாய திட்டத்தின்படியும் இலங்கைத் தீவுக்கு மிகப்பெரிய கேந்திர முக்கியத்துவம் உண்டு. அதாவது பூமியில் உள்ள மூன்று பெரிய பேரரசுகளின் இழுவிசைகளுக்குள் சிறிய இலங்கைத் தீவு சிக்கியிருக்கிறது என்று பொருள். இதனை தமது பேர பலமாக பயன்படுத்தி இதுவரையிலும் இருந்த எல்லா இலங்கை அரசாங்கங்களும் தமிழ் மக்களை ஒடுக்கின்ஜெனிவாவை எதிர்கொண்டன. இம்முறையும் ஜெனிவாவை எதிர்கொள்வதற்கு அப்படியொரு வியூகத்தைத்தான் ராஜபக்சக்களும் வகுத்து வைத்திருப்பதாக தெரிகிறது.

ஜெனிவா எனப்படுவது இனப்பிரச்சினையின் நீட்சியே. இன முரண்பாடுகளின் விளைவாகத் தோன்றிய போரில் வெற்றி கொள்வதற்கு ராஜபக்சக்கள் கையாண்ட வழிமுறைகளின் விளைவே ஜெனிவா. எனவே ஜெனிவா இனப்பிரச்சினையின் 2009க்குப் பின்னரான நீட்சி எனலாம். இந்த அடிப்படையில் பார்த்தால் இனப்பிரச்சினையை எதிர்கொள்வதற்கு எப்படிப்பட்ட ஒரு வியூகத்தை இலங்கை அரசாங்கங்கள் வகுத்தனவோ அப்படிப்பட்ட ஒரு வியூகத்தைத்தான் இப்போதிருக்கும் ராஜபக்ச அரசாங்கமும் வகுக்க போகின்றதா?

அட்மிரல் ஜெயந்த கொலம்பகே கூறுவதுபோல தனது கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்து அதை ஒரு பேரபலமாக அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இப்போதிருக்கும் அரசாங்கத்தின் இரண்டு பெரிய பலங்களாவன முதலாவது உள்நாட்டில் யுத்த வெற்றி. இரண்டாவது பிராந்தியத்திலும் பூகோள அளவிலும் சீனாவுக்கு நெருக்கமாக இருப்பது. இதன் காரணமாக உள்நாட்டில் அவர்கள் தொடர்ச்சியாக சிங்கள பௌத்த பெருந்தேசியவாத உணர்வுகளுக்கு தலைமைதாங்கி தேர்தல் வெற்றிகளை குவித்து வருகிறார்கள். இந்த மக்கள் ஆணையை வைத்துக்கொண்டு வெளி உலகத்துக்கு வகுப்பு எடுக்கிறார்கள். அதேசமயம் சீனாவை நெருங்கி செல்வதன்மூலம் தமது பேர பலத்தை அதிகப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அவர்கள் மேலும் சீனாவை நோக்கி நெருங்கி செல்வதைக் குறைக்க அவர்கள்மீது அதிகரித்த அழுத்தங்களை பிரயோகிக்க முடியாத ஒரு நிலைக்கு இந்தியாவையும் அமெரிக்காவையும் தள்ளிவிட்டிருக்கிறார்களா?

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட யூடியூப் நேர்காணலில் அட்மிரல் ஜெயந்த ஒரு விடயத்தை திரும்பத் திரும்ப கூறுகிறார், இந்தியாவின் பாதுகாப்பு நலன்களை மீறி இலங்கை எந்த ஒரு முடிவையும் எடுக்காது என்று. ஆனால் கடந்த ஓராண்டு கால நடைமுறை அப்படிப்பட்டது அல்ல. இந்தியா தொடர்பில் ஜெயந்த கொலம்பகேயும் ராஜபக்சக்களும் வார்த்தைகளால் இந்தியாவுக்கு அபிஷேகம் செய்கிறார்களே தவிர நடைமுறையில் அவர்கள் சீனாவை நெருங்கிச் சென்று தமது பேரத்தை அதிகப்படுத்துகிறார்கள் என்பதே சரி. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய விடயத்திலும் யாழ்ப்பாண தீவுகளில் மின் ஆலை அமைக்கும் விடயத்திலும் அவர்கள் இந்தியாவுக்கு விசுவாசமாக இல்லை என்பதை கண்டுபிடிப்பதற்கு பெரிய அரசறிவியல் அறிவு தேவையில்லை. எனினும் ஜெனீவாவில் இம்முறை இந்தியா வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் விடும் வாய்ப்புக்களே அதிகம் என்ற ஊக்கங்கள் உண்டு.

ஜெனிவாவில் இலங்கை அரசாங்கம் தனது பேரபலம் சீனா என்று நம்புகின்றது. ஏனெனில் ஜெனிவா கூட்டத் தொடருக்குப் பல மாதங்களுக்கு முன்னரே சீனா தான் இலங்கை அரசாங்கத்தை ஜெனிவாவில் பாதுகாக்க போவதாக பகிரங்கமாக அறிவித்து விட்டது. எனவே சீனா மற்றும் ர'யாவின் ஆதரவை நம்பி இலங்கை அரசாங்கம் ஜெனீவாவுக்கான தனக்கு வியூகத்தை வகுக்க போகின்றதா? என்ற கேள்வி இங்கு முக்கியம்.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட அந்த நேர்காணலில் அட்மிரல் கொலம்பகே மேலும் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டுகிறார் முன்னைய அரசாங்கம் உருவாக்கிய நிலைமாறுகால நீதிக்கான கட்டமைப்புக்கள் சிலவற்றை தாங்கள் தொடர்ந்தும் நிர்வகிக்கின்றோம் அவற்றை பலப்படுத்த போகிறோம் அவற்றிற்கு வேண்டிய நிதியை வழங்கப் போகிறோம் அந்த கட்டமைப்புகளுக்கான இந்த ஆண்டுக்குரிய செயல்திட்டத்தை உருவாக்குமாறு கேட்டிருக்கிறோம் என்றெல்லாம் கூறுகிறார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் -ஓ.எம்.பி-, இழப்பீட்டு நீதிக்கான அலுவலகம், சாட்சிகளையும் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாப்பதற்கான அலுவலகம் போன்றவற்றை தொடர்ந்தும் இயக்குவதற்கு அரசாங்கம் தயார் என்ற செய்தி அந்த நேர்காணலில் உண்டு. இது நிலைமாறுகால நீதி தொடர்பில் ஒரு உள்நாட்டு வடிவத்தை, அதை இன்னும் தெளிவாகச் சொன்னால் ராஜபக்ச பாணியிலான ஒரு உள்நாட்டு பொறுப்புக்கூறும் பொறிமுறைக்கு அவர்கள் தயார் என்ற செய்தி அதில் உண்டு. ஆனால் அந்த அலுவலகங்களுக்கு போதிய வளங்கள் இல்லை. ஓ.எம்.பிக்கு வாகனங்களே இல்லை. இழப்பீட்டு நீதிக்கான அலுவலகத்துக்கு ஒரு வாகனம்தான் உண்டு. இவ்வலுவலகங்கள் புதிய அலுவர்களை இணைக்க முடியாது. ஐநர்ஐ.சி.ஆர்.சி போன்றவற்றிடம் இருந்து துறைசார் ஒத்துழைப்பைப் பெற முடியாது என்பதே உண்மை நிலையாகும். எனவே ஒருபுறம் முன்னைய தீர்மானங்களின் விளைவாக உருவாக்கப்பட்ட சில கட்டமைப்புகளை தொடர்ந்தும் அவற்றின் செயலற்ற நிலையில் பேணிக்கொண்டு இன்னொருபுறம் சீனாவுடனான பேரபலத்தை வைத்துக்கொண்டு நிலைமைகளை கையாளலாம் என்று அவர்கள் நம்புகிறார்களா?

இப்படிப்பட்டதொரு பின்னணியில்தான் இம்முறை ஜெனிவாக் கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட இருக்கும் ஐநா தீர்மானத்தின் பூச்சிய வரைபு வெளிவந்திருக்கிறது. இந்த வரைபு தமிழ் மக்களைப் பொருத்தவரை அவர்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றாத ஒரு வரைபு. அண்மையில் மூன்று தமிழ் கட்சிகளும் சிவில் சமூகங்களும் ஒன்றிணைந்து ஜெனிவாவுக்கு அனுப்பிய கோரிக்கைகளை ஐநா கவனத்தில் எடுக்கவில்லை என்பதை தான் பூச்சிய வரைவு காட்டுகிறது. அதைவிடக் குறிப்பாக ஐநா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைக்கும் இந்த முதல்வரைபுக்கும் இடையே பாரதூரமான இடைவெளிகள் உண்டு.

ஆனால் இது ஆச்சரியப்படத்தக்க அல்லது எதிர்பாராத ஒரு இடைவெளி அல்ல. இதற்கு முன்னரும் ஐநா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைகளுக்கும் ஐநா தீர்மானங்களுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டன. அதுமட்டுமல்ல ஐநாவின் சிறப்பு தூதுவர்களின் அறிக்கைகளுக்கும் அய்நா தீர்மானங்களுக்கும் இடையில் கூட இடைவெளிகள் உண்டு. ஐநா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைகள் பெரும்பாலும் துறைசார் நிபுணர்களால் தொகுக்கப்படுகின்றன. சிறப்புத் தூதுவர்களும் அவ்வாறு துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களே. எனவே துறைசார் நிபுணத்துவம் ஊடாக தொகுக்கப்படும் அறிக்கைகள் பெருமளவுக்கு உண்மைக்கு கிட்டவாக வருகின்றன. ஆனால் ஐநா தீர்மானங்கள் அவ்வாறு அல்ல. எல்லா ஐநா தீர்மானங்களும் அரசுகளின் தீர்மானங்களே. அவை அரசுக்கும்-அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. அரசுக்கும் அரசுக்கும் இடையிலான ராணுவ பொருளாதார நலன்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. ஐநா எனப்படுவது அரசுகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உருவாக்கிய ஒரு கட்டமைப்புத்தான். எனவே ஐநா தீர்மானங்களுக்கும் ஐநா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைகளுக்கும் இடையே இடைவெளிகள் இருக்கும். இந்த இடைவெளியை தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த இடைவெளிக்குள் தான் தமிழ் மக்கள் அதிகம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது.

வரவிருக்கும் தீர்மானத்துக்கான முதல் வரைபு மென்மையான பொத்தாம் பொதுவான வார்த்தைகளால் எழுதப்பட்டிருக்கிறது. பொதுவாக தீர்மானத்தின் முதல் வரைபுகள் அவ்வாறுதான் அமையும் என்று கூறப்படுகிறது. அரசுகளின் அரங்கான மனித உரிமைகள் பேரவையில் ஓர் அரசு குறித்து நிறைவேற்றப்படும் தீர்மானத்தை உருவாக்கும் பொழுது முதல் வரைபில் அரசுகளுக்கு நோகாத விதத்திலேயே வார்த்தைகள் உள்ளடக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. பின்னர் படிப்படியாக உறுப்பு நாடுகளோடு கலந்துரையாடி அவற்றின் அறிவுறுத்தலுக்கு அமைய தீர்மானம் கடுமையாக்கப்படலாம் என்றும் ஒரு கருத்தும் உண்டு. ஆனால் இதை இப்படி எழுதுவதன் மூலம் இக்கட்டுரையானது ஐநா தீர்மானம் அரசாங்கத்தை தண்டிக்கக் கோரும் ஒன்றாக அமையும் என்றோ அல்லது தமிழ் மக்களுக்கு விடிவைத் தரும் என்ற மாயையை கட்டியெழுப்பத் தயாரில்லை.

ஐநாவைப் பொறுத்தவரை இப்பொழுது ஜெனிவாவில் உள்ள சவால் உண்மையான என்னவென்றால் இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக்கூற வைப்பது அல்ல. மாறாக ஏற்கனவே சீனாவை நோக்கி சாய்ந்திருக்கும் அரசாங்கம் இதற்கு மேலும் சீனாவை நோக்கி போகக் கூடிய விதத்தில் நெருக்கடிகளை கொடுக்காமல் அரசாங்கத்தை எப்படிக் கையாளுவது என்பது தான். ஐநா தீர்மானம் இந்த அடிப்படையில்தான் வெளிவருமா?

ஆனால் இந்த இடத்தில் தமிழ் மக்கள் ஒன்றை கவனிக்க வேண்டும். இந்து மகா சமுத்திரத்தில் எதைத் தமது பேரபலமாக சிங்கள மக்கள் பயன்படுத்தி வருகிறார்களோ அதையே தமிழ் மக்களும் தமது பேரபலமாகப் பயன்படுத்தலாம். சிங்கள மக்களுக்கு உள்ள அதே கேந்திர முக்கியத்துவம் தமிழ் மக்களுக்கும் உண்டு. ஆனால் கடந்த பல தசாப்தங்களாக இலங்கைத்தீவின் கேந்திர முக்கியத்துவம் சிங்கள மக்களுக்கு பேரபலம் ஆகவும் தமிழ் மக்களுக்கு துயரத்தின் ஊற்றாகவும் ஏன் மாறியது? என்ற கேள்விக்கு தமிழ் மக்கள் பொருத்தமான விடையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

### வீணாவின் கவிக்கணை

வாழும் வரை அடுத்தவர்
வயிற்றெரிச்சலில் வாழ்ந்து,
சாகும் வேளையில்
திருந்திவிட்டேன் என கூறி,
கண்காணா சொர்க்கத்தையடைய
புண்ணியம் செய்பவர்களே,
நீங்கள்,
வாழும் காலத்திலேயே
நன்மை பல செய்திருந்தால்,
அந்த புண்ணியத்தின் வாழ்த்தே
உங்களுக்கு சொர்கமாகிறது!
வீழ்ந்துடுவேனோ என்று
எண்ணி எண்ணியே நீங்கள்
ஒவ்வொரு நாளும் நரகத்தில்
வாழ்கின்றீர்கள் இன்று!
சொர்கமும் நரகமும்
நாம் வாழும் நாட்களில்
காண்பது தான்!!!

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

+ தமிழ் பேசும் வைத்தியர்கள்
+ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
+ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
+ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
+ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
+ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



## உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

**Scarborough / Downtown Toronto: 416-489-2000**

**Mississauga / Brampton: 416-650-5400**



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |



**Mark Shamly**
*Tamil Consultant*

*Proudly Served over 15,000 clients since 2004*

**Visit : GtaCredit.Com**

**Ajay Oberoi**
*Experienced Credit Counsellor*

# ஜெனீவாவில் மீண்டும் ஈழத் தமிழினத்திற்கு ஏமாற்றமா?

ஈழத் தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக இனப்படுகொலை செய்யப்பட்டு பன்னிரண்டு ஆண்டுகளை நெருங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 2021ஆம் ஆண்டுக்கான அமர்வுகள் ஆரம்பமாகவுள்ளது. நீதிக்காக தவித்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழினம் இந்த ஆண்டாவது நீதி நிலைநாட்டப்படுமா என ஏங்கிக் கொண்டிருக்கிறது. இப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் சமயத்தில் கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் திரண்டு தீச்சட்டி ஏந்திய போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர். நீதிக்காக பல வகையிலும் துடித்துக் கொண்டிருக்கும் தமிழினத்திற்கு ஜெனீவா வழங்கப் போவது என்ன?

இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய இனப்படுகொலை என ஈழ இனப்படுகொலை கருதப்படுகின்றது. 2009ஆம் ஆண்டில் உலகின் கண்களுக்கு தெரியும் விதமாகவே ஈழத் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். ஆர்மோனியப்படுகொலை போல, ருவாண்டா இனப்படுகொலை போல கண்களுக்கு தெரியாமல் இப் படுகொலை நடக்கவில்லை. நவீன தொடர்பாடல் சாதனங்கள் அதிகமும் வளர்ச்சி பெற்ற காலத்தில் நடந்த ஈழ இனப்படுகொலை குறித்த சாட்சியங்கள் பலவும் உடனுக்குடன் வெளியாகி இருந்தன. இதனை பன்னாட்டுச் சமூகமே பார்க்கக்கூடியதாகவே இருந்தது.

முள்ளிவாய்க்கால் யுத்த களத்தில் ஈழத் தமிழ் மக்கள் வகைதொகையின்றி இனவழிப்பு செய்யப்பட்டனர். மருந்துகள் தடுக்கப்பட்டும் இனப்படுகொலை நடந்தது. உணவு மறுக்கப்பட்டும் இனப்படுகொலை நடந்தது. போர் தவிர்ப்பு வலயங்கள் என அறிவிக்கப்பட்டு, மக்கள் அங்கே ஒன்றுகூடச் செய்யப்பட்டு, மக்கள்மீது கொத்துக் கொத்தாக குண்டுகள் பொழியப்பட்டன. அத்துடன் தடை செய்யப்பட்ட நஞ்சுக் குண்டுகள் முள்ளிவாய்க்காலில் வீசப்பட்டமையை அண்மையில்கூட தி கார்டியன் ஊடகம் உறுதி செய்திருந்தது. மிக வெளிப்படையாக திட்டமிட்டு நடந்த ஈழ இனப்படுகொலை குறித்த சாட்சியங்கள் பலவும் இந்த உலகத்திற்கு தெரிந்தவையே.

ஊடகப் போராளி இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்டதும், அப்பாவிப் பாலகன் பாலச்சந்திரன் இனப்படுகொலை செய்யப்பட்டதும் மிகப் பெரிய மீறல்கள் என்பதை ஐ.நா தனது அறிக்கையில் பதிவு செய்திருக்கிறது. ஈழ இனப்படுகொலை முடிந்த பின்னர் ஐ.நா மனித உரி-மைப் பேரவையின் அமர்வுகள் பல தடைவை நடந்திருக்கின்றன. மனித உரி-மை மீறல்கள் என்ற வித்திலும், போர்க்குற்ற மீறல்கள் என்ற வித்திலும் ஐ.நா ஈழ இனப்படுகொலையை அணுகி வந்தாலும் இன்னமும் ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்பதை ஏற்க மறுத்தும் வருகிறது.

ருவாண்டாவில் நடந்த இனப்படுகொலையை ஏற்றுக் கொள்ளவே ஐ.நாவுக்கு பல வருடங்கள் ஆனது. தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி என்பதை ஐ.நா உணர்ந்து கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் பொறுப்புக் கூறலை மேற்கொள்ள வேண்டும் என்று ஐ.நா வலியுறுத்தியது. ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கம் சர்வதேச சமூகத்தையும் ஈழத் தமிழ் மக்களையும் ஏமாற்றும் விதமாக சில ஆணைக்குழுக்களையும் அலுவலகங்களையும் அமைத்து காலத்தை கடத்தியுள்ளது. மகிந்த ராஜபக்ச அரசாங்கமும் சரி, மைத்திரிபால சிறிசேன அரசாங்கமும் சரி, தற்போது கோத்தபாய அரசாங்கமும் சரி இதே வேலையை செய்தே தமிழர்களை ஏமாற்றி வருகின்றது.

இனப்படுகொலையை மறுத்து வரும் இலங்கை அரசாங்கம் முள்ளிவாய்க்கால் போரில் தாம் தமிழ் மக்களை கொல்லவில்லை என்றும் குண்டுகளுக்குப் பதிலாக பூக்களையே தூவி வந்ததாகவும் பேசி வருவதுதான் வேடிக்கை. பல ஆண்டுகளுக்குப் பின்னர், போரின் போது சுமார் ஐந்து ஆ-யிரம் மக்களை தாம் படுகொலை செய்திருக்கலாம் என முன்னாள் இராணு-வத் தளபதி சரத் பொன்சேகா கூறியிருந்தார். இது முக்கியமானதொரு இனப்படுகொலை ஆதாரமாகும். ஆனால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை என்பது பல மடங்கு அதிகம் என்பதை நாம் நிரூபிக்க வேண்டியுள்ளது.

போருக்குப் பின்னர் சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களில் லட்சம் பேர் இனப்படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் பல ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். வணக்கிற்குரிய மன்னார் ஆயர் இராசப்பு யோசேப்பு, ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் பேருக்கும் அதிகமாக வன்னி மக்கள் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்பதை அரச புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு கூறியுள்ளார். இனப்படுகொலை செய்த ஸ்ரீலங்கா அரசாங்கம் இதனை ஒரபோதும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்பது உண்மையே.

ஆனாலும் அவ்வப்போது உண்மைகள் வெளிப்படுகின்றது. அதில் ஒன்றே சரத்பொன்சேகாவின் பேச்சும். அதுபோன்று நந்திக்கடலில் நாயை சுட்டுக் கொன்றதைப் போல புலிகளை சுட்டுக் கொன்றேன் என்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச கூறியுள்ளார். அதேநேரம், போரின் போது தாம் பொதுமக்களை கொல்லவில்லை என்றும் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் புலிகள் என்றும் ஸ்ரீலங்கா அரசின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறியுள்ளார். என்றால் புலிகள் என்ற பெயரில் தமிழ் மக்கள் நாயைப் போல் சுட்டு அழிக்கப்பட்டுள்ளனரை என்பதே உண்மையாகும்.

ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களின் உரைகளும் பேச்சுக்களும் ஈழத்தில் மிககப் கொடிய முறையில் இன அழிப்பு நடந்தது என்பதற்கான ஆதாரங்கள் ஆகும். பகிரங்கமான இப் பேச்சுக்களை தகுந்த சான்றாதாரங்களாக கொள்ள முடியும். இந்த நிலையில் தற்போது ஜெனீவாவை எதிர்கொள்ள அரசியல் காய் நகர்த்தல்களில் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டுள்ளது. இம்முறை ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை எதிர்த்து 41 நாடுகள் வாக்களிக்கும் என்றும் ஸ்ரீலங்கா அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அத்துடன் பல நாடுகளுடன் இதற்கான பேச்சுக்களிலும் ஈடுபட்டிருக்கிறது.

எப்படி இருந்தாலும் மேற்கில் சில நாடுகள் ஸ்ரீலங்கா அரசு மீது கடுமையாக குற்றம் சுமத்தி வருகின்றது. அந்த நாடுகளை சேர்ந்த அரசி-யல் மற்றும் சிவில் பிரிதிநிதிகள் ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலை குறித்து கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். எனினும் இம்முறை கொண்டுவரப்படவுள்ள ஸ்ரீலங்கா அரசு குறித்த தீர்மானம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை பரிந்துரைக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது. நடந்த இனப்படுகொலைக்கும் நடக்கும் இனவழிப்புக்கும் தீர்வாக சர்வதேச விசாரணையும் சர்வதேச நீதிமன்றமும் தேவை என்பது ஈழத் தமிழ் மக்களின் தீராத எதிர்பார்ப்பாக இருப்பதை பன்னாட்டுச் சமூகம் நன்கு அறியும்.

தமது அரச படைகள் போர்க்குற்றத்தில் ஈடுபடவில்லை என்றும் உத்தமர்கள் என்றும் ஸ்ரீலங்கா அரசாங்கம் கூறியிருந்தது. அதனை சர்வதேச விசாரணை ஒன்றின் வாயிலாக ஸ்ரீலங்கா அரசாங்கம் நிரூபிக்க வேண்டும். சர்வதேசப் பொறிமுறைகளுக்கு அஞ்சியபடி தாம் உத்தமர்கள் என்பது வேடிக்கையானது. அத்துடன் ஸ்ரீலங்கா அரசாங்கம் எத்தகைய இனப்படுகொலையை செய்தது என்பதை உலகமே அறியும். அத்துடன் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என வடக்கு மாகாண சபை ஆதார பூர்வமாக சட்டபூர்வமான முறையில் இனப்படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது.

இந்த நிலையில் உள்ளக விசாரணை என மீண்டும் காலத்தை இழுத்தடிக்க ஸ்ரீலங்கா அரசுக்கு வாய்ப்பளிக்கக்கூடாது. இனப்படுகொலை செய்த தரப்பு ஒருபோதும் நீதிபதியாக இருக்க முடியாது. நீதியும் நிலை நாட்டப்படாது. கடந்த காலத்தில் தமிழ் தலைவர்களின் இணக்கத்துடன் ஸ்ரீலங்கா அரசுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது. எனினும் ராஜபக்ச தரப்பினரை காப்பாற்றும் தந்திரத்திற்காகவே கால அவகாச நாடகம் பயன்படுத்தப்பட்டது. ஸ்ரீலங்காவுக்குள் நீதி கிடைக்கும் என ஈழத் தமிழ் மக்கள் எந்தவொரு காலத்திலும் நம்பவில்லை. எனவே சர்வதேச விசாரணையும் நீதியுமே ஈழத் தமிழ் இனத்தின் இருப்புக்கு அடிப்படை தேவையாக உள்ளது.

**கனடா உதயனுக்காக,**
**கிளிநொச்சியில் இருந்து தீபச்செல்வன்**

## இலங்கையில் புரியப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறப்படுதை உறுதி செய்யவேண்டியதன் அவசியத்தை, கனடா தொடர்ந்து ஆதரவளிக்கும்

### ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கனேடிய வெளியுறவு அமைச்சர்



∴பெப்ரவரி 24, 2021

“இலங்கையில் புரியப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறப்படுதை இந்தப் மனித உரிமை பேரவை உறுதி செய்யவேண்டியதன் அவசியத்தை, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அண்மையில் வெளியிட்ட அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. பொறுப்புக்கூறல், மீளிணக்கம், அமைதி ஆகியவற்றுக்கு ஆதரவான நடவடிக்கைகளுக்குக் கனடா தொடர்ந்து ஆதரவளிக்கும்”.

மேற்கண்டவாறு இன்று ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைக் பேரவையின் கூட்டத்தில் உரையாற்றிய கனடாவின் வெளியுறவு அமைச்சர் மார்க் காரினியுக் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

*“இலங்கையில், மனித உரிமைப் பாதுகாவலர்களும் குடிசார் சமூக அமைப்புக்களும் அச்சுறுத்தப்படுவது, நினைவுகூர்தல் ஒடுக்கப்படுவது, சிறுபான்மையினரின் உடல்கள் பலவந்தமாகத் தகனம் செய்யப்படுவது, சட்டத்தின் ஆட்சி சீர்குலைந்து செல்வது ஆகியவற்றை உள்ளடக்கிய மனித உரிமை நிலைமை சீர்குலைந்து செல்வதையிட்டுக் கனடா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது”,* என்றும் தெரிவித்தார்.

உடல் எடையை / பருமனை உடன் குறைக்க வேண்டுமா






★ இந்தத் தயாரிப்பானது உங்கள் உடலில் உள்ள கொழுப்பைக் குறைத்து அணுக்களை புதுப்பித்து உடலை இறுக்கப்படுத்தி அழகுடன் புத்துணர்ச்சி பெறுவதை 3 நாட்களில் நீங்கள் உணர்வீர்கள்.

★ பக்க விளைவுகளை ஏற்படுத்தாத இயற்கை தானியங்களினால் தயாரிக்கப்பட்டவை (விற்றமின்ஸ் - Based on science). இதனைப் பாவிப்பதன் மூலம் இடை குறைந்து அழகுறப் பெற்று உடல் எடையும் குறைந்து இளமைத் தோற்றத்தைப் பெறுவீர்.

★ இத்தயாரிப்பானது 100% இயற்கையானதும் பாதுகாப்பானதும். மேலும் மனித உணவுப் பொருட்களில் பயன்படுத்த அரசாங்கம் ஒப்புதல் அழித்துள்ளது. இதனைப் பாவிப்பதன் மூலம் நீங்கள் மூட்டுவலி. முகப்பரு. ஒற்றைத் தலைவலி மற்றும் தலைவலி போன்ற ஏனைய நோய்களிலிருந்தும் விடுபடுவீர்கள்.



This product helped naturally to remove all fat and replace the cell and tight your body you can see the change in your body within 3 days, it will enhance your energy. Additionally, all of the flavor components are 100% natural safe, and government approved for use in human food products BY doing this weight loss, you will also heal all other diseases, JOIN PAIN, ACNE. migraine/ Headache.

மேலும் விளக்கம் தேவைப்படின் அழையுங்கள்

416-875-1340

www.Gr2.control.com www.Gr2.control.com

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்
ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

**Ontario**

Carefirst
SENIORS & COMMUNITY SERVICES ASSOCIATION

# தென்கிழக்கு மார்க்கம் பகுதிக்கு கோவிட் - 19 சம்பந்தமான அதிமுக்கியத்துவமான சமூகச் செயற்பாடுகள்

நீங்கள் கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்டிருந்து, உங்களுக்குச் சமூக ஆதரவு தேவைப்பட்டால் எங்களை அழையுங்கள்.

**Carefirst** இனது சமூக ஆதரவு சேவைகள் உள்வாங்கல் தொடர்பு எண்:

**416 646 5108** (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, முற்பகல் **9. 00** மணியிலிருந்து பிற்பகல் **5. 00** மணிவரை)

எமது பணியாளர்களால் கீழ்வரும் மொழிகளில் உங்களுக்கு உதவ முடியும்:
ஆங்கிலம், கன்ரனீஸ், மன்டறின், ஹிந்தி, பஞ்சாபி, தமிழ், உருது

## கிடைக்கக்கூடிய சேவைகள்:

- உணவுப் பாதுகாப்பு
- போக்குவரத்து
- மளிகைப் பொருள் கொள்வனவு
- குழந்தைப் பராமரிப்பு, தன்னார்வத் தனிமைப்படுத்தல் மையம், தங்குமிடம், வருமான உதவி ஆகியவற்றிற்கான சமூக வளங்கள்
- உளரீதியான ஆதரவு, ஆதரவுக்கான ஆலோசனை (மெய்நிகர் வழியாக)
- மருந்து / அத்தியாவசியப் பொருள் விநியோகம்
- பராமரிப்பு ஒருங்கிணைப்பு

***தகுதியானவர்களுக்கு மானியங்கள் கிடைக்கின்றன.**

## ஏனைய வளங்கள்:

**ஒன்ராரியோ தொலைபேசிச் சுகாதார சேவை**
**உங்களுக்கு நோய்க்குரிய அறிகுறிகள்** காணப்பட்டால் அழைக்க வேண்டியது:
Tel: 1-866-797-0000

**ஒன்ராரியோ 211 / சமூகம் மற்றும் சமூக சேவைகள் உதவித் தொடர்பு:**
211ontario.ca

யோர்க் பிராந்திய கோவிட் - 19 தன்னார்வத் தனிமைப்படுத்தல் நிலையம்
**York Region COVID-19 Voluntary Isolation Centre**
1-877-464-9675
york.ca/isolationcentre


**யோர்க் பிராந்தியப் பொதுச் சுகாதாரப் பிரிவு**
1-800-361-5653

Carefirst **முதியோர், சமூக சேவை இணையம் மற்றும் கீழ்வரும் சேவைப் பங்காளர்களினால் இது எடுத்துவரப்படுகிறது**:

Carefirst Family Health Team
Centre for Immigrant and Community Services
Community & Home Assistance to Seniors (CHATS)
City of Markham
EYRND Ontario Health Team
Health Common Solutions
Health for All Family Health Team
Hong Fook Mental Health Association
Islamic Society of Markham - Jam'e Masjid Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
Markham Wesley Centre
Social Services Network
Tamil Civic Action
The Cross-cultural Community Services Association
YMCA of Greater Toronto (Markham)
York Region Community and Health Services
York Region Public Health
105 Gibson Centre
360° Kids Support Services

**Funded by: Ontario Health and Central LHIN**

Updated on February 5, 2021




# அமெரிக்காவில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்கள் தொகை அரை மில்லியனைத் தாண்டியது

அமெரிக்காவில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை அரை மில்லியனைத் தாண்டியுள்ளது. இது உலகில் அதிக உயிரிழப்பு எண்ணிக்கை என்பதோடு மொத்த உயிரிழப்பில் 20 வீதமாக உள்ளது.

கலிபோர்னியா மாநிலத்தில் அமெரிக்காவின் முதலாவது கொரோனா உயிரிழப்பு இடம்பெற்று ஓர் ஆண்டு கடந்திருக்கும் தருணத்தில் கடந்த திங்கட்கிழமையே அந்த எண்ணிக்கை 500,000ஐ தொட்டது.

"500,071 உயிரிழப்பு என்ற உண்மையிலேயே மனதுக்கு வேதனை தரும் மைல்கல் ஒன்றை நாம் இன்று எட்டியிருக்கிறோம்" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார். இந்த உயிரிழப்புகளுக்காக கடந்த திங்கட்கிழமை மாலை வெள்ளை மாளிகையில் அவர் மௌன அஞ்சலி செலுத்தினார். இதன்போது உயிரிழந்தவர்களுக்காக மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டன.

"முதலாம் உலகப் போர், இரண்டாம் உலகப் போர் மற்றும் வியட்நாம் போர் ஆகிவற்றில் ஒட்டுமொத்தமாக பதிவான உயிரிழப்புகளை விடவும் இந்த பெருந்தொற்றினால் அமெரிக்கா ஓர் ஆண்டுக்குள் அதிக உயிரிழப்புகளை சந்தித்துள்ளது. உலகின் வேறு எந்த நாட்டை விடவும் இந்த வைரஸினால் அதிக உயிரிழப்பை சந்தித்திருக்கிறோம்" என்றும் பைடன் தெரிவித்தார்.




அமெரிக்க வரலாற்றில் மிகுந்த துயரமிக்க இந்தத் தருணத்தை அனுசரிக்கும் நோக்கில், அனைத்து அரசாங்க கட்டடங்களில் உள்ள தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடும்படி பைடன் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வைரஸை கட்டுப்படுத்துவதற்காக பைடன் நிர்வாகம் சமூக கட்டுப்பாடுகள் மற்றும் தடுப்பு மருந்து விநியோகத்தை தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் அமெரிக்காவில் அண்மைய வாரங்களில் நோய்ப் பாதிப்பு எண்ணிக்கை குறைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் நிலையான நிலைப்பாடு இரண்டு தூண்களில் உள்ளது!

*(8ம் பக்கத் தொடர்ச்சி)*

அதற்கான வர்த்தமானி அறிவிப்பும் நேற்றிரவு வெளிவந்துவிட்டது! உண்மை என்னவென்றால் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அவர்களது தலையீட்டுக்கு சிறிலங்கா அடிபணிந்து போயிருக்கிறது.

இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பில் (Organisation of Islamic Countries) 57 உறுப்பு நாடுகள் இருக்கின்றன.

ஐநாமஉ பேரவையில் பேசிய இந்தியத் தூதுவர் இந்திரா மணி பாண்டே அவர்களின் உரை சிறிலங்கா அரசுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

இந்தத் தீர்மானங்கள் தொடர்பான கலந்துரையாடல்களில் இந்தியா ஒரு சுறுசுறுப்பான பங்கேற்பாளராக இருந்து வருகிறது, மேலும் இலங்கையுடன் அதன் நெருங்கிய நண்பராகவும், உடனடி அண்டை நாடாகவும் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது. இந்தியாவின் நிலையான நிலைப்பாடு இரண்டு தூண்களில் உள்ளது:

(i) இலங்கையின் ஒற்றுமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கான ஆதரவு.

(ii). சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கவுரவத்திற்கான இலங்கைத் தமிழர்களின் வேட்கைகளுக்கு உறுதியளித்தல்.

இவை இரண்டில் ஒன்று அல்லது தேர்வுகள் அல்ல. தமிழ்ச் சமூகத்தின் உரிமைகளை மதிப்பது, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மூலம் உட்பட, இலங்கையின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் நேரடியாக பங்களிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

எனவே, தமிழ் சமூகத்தின் நியாயமான வேட்கைகளை நிறைவேற்றுவது இலங்கையின் சிறந்த நலன்களுக்காக நல்லது என்று நாங்கள் வாதிடுகிறோம். நல்லிணக்க செயல்முறை மற்றும் இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது உள்ளிட்ட இத்தகைய வேட்கைகளுக்குத் தீர்வு காணத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இலங்கையை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். (http://www.dailymirror.lk/breaking_news/India-calls-upon-Sri-Lanka-to-fully-implement-13A-to-address-aspirations-of-Tamil-community/108-206640)

இந்தியத் தூதுவரின் பேச்சு இலங்கைக்கு விடுக்கப்பட்டுள்ள மறைமுக எச்சரிக்கையாகும். தமிழர் சிக்கல் பற்றி பாரதப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெயசங்கர் அவர்களது கருத்தைவிட மேலும் ஒரு படி இறுக்கமாகவுள்ளது.

ஐநாமஉ பேரவையில் இலங்கைக்க எதிரான தீர்மானம் மீது அடுத்தமாதம் மார்ச் 22 அல்லது 23 ஆம் திகதி வாக்கெடுப்பு இடம்பெற இருக்கிறது. என்ன நடக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

Carefirst Seniors & Community Services Association

கோவிட்-19
POP-UP சோதனை

உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் OHIP சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் OHIP அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு COVID-19 சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட COVID-19 சோதனைக்கு தகுதியற்றவர்கள்

**Carefirst One-Stop Multi-Services Centre**
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
ஒவ்வொரு வியாழக்கிழமை. தொடக்க தேதி: ஜனவரி 14
2:00 p.m. - 6:30 p.m.

**YMCA**
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
ஒவ்வொரு புதன் & வெள்ளி. தொடக்க தேதி: ஜனவரி 30
9:30 a.m. - 2:30 p.m.

**Markham Chinese Presbyterian Church**
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
ஒவ்வொரு செவ்வாய் & புதன். தொடக்க திகதி: பிப்ரவரி 2
9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
www.carefirstontario.ca
Walk-In ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் www.carefirstontario.ca அல்லது அழைக்கவும் 416-646-5108

உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association
Carefirst Family Health Team
Health for All Family Health Team
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on January 27, 2021

# கனடா உதயன்

## வெள்ளி விழா ஆண்டு 2021

உதயன் 25th ANNIVERSARY www.uthayannews.ca

உலகளாவிய மாணவர்களுக்கான இணையவழி ஊடான

# பேச்சுப் போட்டி

POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
Shankar Nallathamby, CHA
Director
shankar@vhgcanada.com
www.vibranthospitalitygroup.com

## நான் விரும்பும் அரசியல் தலைவர்

இங்கு காணப்படும் தமிழ்த் தலைவர்களிலிருந்து தங்களுக்கு பிடித்தமான ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பற்றி **5 நிமிடங்களுக்கு** மேற்படாமல் பேச வேண்டும். போட்டி ZOOM செயலியூடாக **பெப்ரவரி 27. 28 தினங்களில்** நடைபெறும். கனடா, இந்தியா, அமெரிக்கா, மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நடுவர்கள் வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பார்கள். இவர்களோடு கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சேர்ந்து எடுக்கும் இறுதி முடிவிற்கு ஏற்பவே பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.



### நிபந்தனைகள்

1. உலகின் எப்பாகத்திலும் வாழும் 20 வயதிற்கு உட்பட்ட தமிழ் பேசும் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம் (வயதை உறுதிப்படுத்தும் பத்திரம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

2. இங்கு காணப்படும் தலைவர்களில் தாம் விரும்பும் ஒருவரைப் பற்றி மட்டும் ஐந்து நிமிடத்திற்கு மேற்படாமல் பேசவேண்டும்

3. போட்டிக்கான உரையை அவர்களாகவோ அன்றி மற்றவர்களின் உதவியுடனோ தயாரிக்கலாம்.

4. இறுதிப் போட்டிக்கு முன்பதாக தேவையேற்படின் முதற்சுற்றுப் ரோட்டியில் பங்குபற்றவும் தயாராக இருக்க வேண்டும்.

5. போட்டி இடம்பெறும் இரண்டு நாட்களில் ஏதாவது ஒரு நாளில் போட்டியில் பங்கு பற்ற தயாராக இருக்க வேண்டும்.

6. பேச்சுப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் பின்வரும் விபரங்களை uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சலுக்கோ அன்றி 1 (416) 732 1608 / 1 (416) 587 0552 என்னும் இலக்கத்தில் WhatsApp இற்கோ அனுப்பி வைக்க வேண்டும்.
மாணவரின் முழுப் பெயர், மாணவரின் வயது, கல்வி கற்கும் பாடசாலை அல்லது பல்கலைக் கழகம், தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம், தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் விலாசம்:-
(பெற்றோர் அல்லது பாதுகாவலர் விபரங்களும் இணைக்கப்படலாம்)

7. விபரங்கள் எமக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் பெப்ரவரி 12, 2021 வெள்ளிக்கிழமையாகும். அந்த திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. பரிசு பெறும் மாணவர்களுக்கு பணத்தொகையும் சான்றிதழ்களும் நேரிலோ, தபால் மூலமாகவோ அல்லது வங்கி கணக்கு ஊடாகவோ அனுப்பி வைக்கப்படும்.

### பரிசுகள்

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு | ஐந்து ஆறுதல் பரிசுகள் |
|---|---|---|---|
| 300 கனடிய டொலர்கள் | 200 கனடிய டொலர்கள் | 100 கனடிய டொலர்கள் | 50 கனடிய டொலர்கள் |

**ZOOM பெப்ரவரி 27, 2021 சனிக்கிழமை**

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 812 3636 6126 | Passcode: 962261**

**ZOOM பெப்ரவரி 28, 2021 ஞாயிற்றுக்கிழமை**

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 827 6566 9766 | Passcode: 892482**

### நடுவர்கள்:

பேராசிரியர் சங்கர நாராயணன் (தமிழ்நாடு) | வழக்கறிஞர் தி. இராமகிருஷ்ணன் (தமிழ்நாடு)
கலாநிதி நல்லையா குமரகுருபரன் (இலங்கை) | திரு. ஆர். சர்வேஸ்வரா (இலங்கை)
திரு. குயின்ரஸ் துரைசிங்கம் (கனடா) | திரு. நிமால் விநாயகமூர்த்தி (கனடா)
திரு. வீணைமைந்தன் சண்முகராஜா (மொன்றியால் - கனடா)

சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி :
பெப்ரவரி 12, 2021
E-mail: uthayannews@yahoo.com
WhatsApp : +1 416 732 1608
+1 416 587 0552

Our Media Partners
அனலை எக்ஸ்பிரஸ் Analai Express HD
east FM 102.7 தமிழ்
உலகத்தமிழர்
ஈழநாடு
ஈழமுரசு
yugam radio
MONதமிழ்
செய்தி SEITHY.COM
Roobam FM Toronto Digital Radio
Easy 24 News
eet

PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca 416-200-5470
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha Electical,Plumbing and drainage service Residential Commercial and industrial All Repairs & Renovations
Santha Plumbing and drainage service
Tel : 416 200 5470
info@santha.ca
www.santha.ca
Santha Panchalingam

CAMSONICS SECURITY SYSTEMS.INC
NO.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
WE ONLY DO PROFESSIONAL INSTALLATIONS AND CONCEAL WIRES IN THE ATTIC OR BEHIND THE WALLS
FULL HD
PROTECT YOUR HOME AND BUSINESS ANY TIME ANY WHERE IN THE WORLD
Rajeev Sebarasha :- 647.302. 5748
Web: www.camsonics.com E-Mail: camsonics@gmail.com 1 888 723 5747

FRUITS HABY
மொன்றியல் மாநகரில் பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு புகழ்பெற்ற தமிழர் பலசரக்கு மாளிகை
5925 Victoria Ave, Montreal, QC H3W 2R9

HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE*
For all your Real Estate needs...
Buyers and Sellers
I will pay your Lawyer Fees and Moving Charges!**
VALLIKKANNAN MARUTHAPPAN Sales Representative
Direct: 416-880-6051 Bus: 416-298-3200
www.mvkhome.ca

வீடு விற்க! வாங்க
Award winning Agents will give you Professional, Reliable and Friendly Services
We can arrange Mortgage, Second Mortgage and Refinance.
ROYALAN TEAM
" Our clients are our value"
Ragu Thillainathan 416-629-5800
Kailain Thillainathan 647-668-8276
kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com

வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

# மொழி அழிந்தால் இனம் அழியும்!

**- கனடா உதயன் பத்திரிகைக்காக - தீபச்செல்வன்**

மாசி 21, உலக தாய் மொழி தினம். தாய்மொழி மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக போராடி வரும் ஈழத் தமிழர்களுக்கு இது மிக முக்கியமானதொரு நாளாகும். தாய் மொழி என்பது ஒவ்வொரு மனிதரதும் பிறப்புரிமை. அதனை அதனை மனிதர்கள் தம் தாய் வழி சமூகத்திடமிருந்து கற்றுக்கொள்ளுகின்றனர். மொழியற்று பிறக்கும் ஒரு குழந்தை தன் தாயிடமிருந்து மொழியை பெறுகிறது. தாய் மொழியின் ஊடாக தன்னுடைய பண்பாட்டை, வரலாற்றை, வாழ்வை கற்றுக்கொள்வது எளியது என்பதால் ஒவ்வொருவருக்கும் தாய்மொழி மிக முக்கியமாகிறது. தாய்மொழியை எவரும் இழந்துவிடக்கூடாது என்பதற்காகவே இந்த நாள் வருடம் தோறும் உலக மக்களால் அனு'டிக்கப்பட்டு வருகிறது.

ஈழத்தில் தாய்மொழியை மறந்துபோனவர்கள் பலருண்டு. தம் தாய் மொழியை இழந்தவர்கள் பலருண்டு. அன்றைய ஈழத் தீவில் தமிழ் மக்கள் தீவு முழுவதும் பரவியிருந்தனர். பிற்காலத்தில் சிங்கள ஆதிக்கம் பெற்றபோது தென்பகுதியில் காலி, நீர்கொழும்பு போன்ற பகுதிகளில் இருந்த தமிழர்கள் எல்லாம் சிங்களத்தை பேசி, பின்னர் அந்த மொழியில் முழுமையாக தங்கி தம் தாய் மொழியை இழந்து பின்னர், தமது இன அடையாளத்தையே தொலைத்து இன்று சிங்களவர்களாக வாழ்கின்றனர். ஈழத் தீவுக்குள் நிகழ்ந்த இந்த அனுபவமே தாய் மொழி குறித்து ஓரினம் எப்படி விழிப்பாக இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாகிறது.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த பல மொழிகள் இன்று இல்லை என்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஏழாயிரம் மொழிகள் இருந்த இடத்தில் இப்போது மூவாயிரம் மொழிகளே உள்ளதாக கூறுகின்றனர். பல ஆயிரக்கணக்கான மொழிகள் இன்னும் வரிவடிவம் பெறாமல் பேச்சு மொழியாகவே உள்ளதாகவும் கூறப்படுகிறது. இன்னும் பல மொழிகள் அழிந்துவிடும் என்று மொழியியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். தாய் மொழியை போற்றிய நாடுகளே பெரும் வளர்ச்சி பெற்றுள்ளன. தாய் மொழியை புறக்கணித்து அந்நிய மொழிகளை பயன்படுத்திய நாடுகள் வீழ்ச்சியையே சந்தித்துள்ளன.

உலகிற்கு நாகரிகத்தை கற்றுக்கொடுத்த, வளமான இலக்கிய பாரம்பரியத்தை கொண்ட ஆறு மொழிகளில் தமிழும் முக்கிய இடம்பெறுகிறது. சமஸ்கிருதம், கிரேக்கம், ஹீப்ரு, லத்தீன், சீனம் ஆகிய மொழிகளுடன் தமிழ் மொழியும் மூத்த மொழிகளாக முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழ் ஹீப்ரு மொழியைக் காட்டிலும் முந்தியது. கிறிஸ்துவுக்கு முந்தைய வரலாற்றை கொண்டு. செழுமையான இலக்கியங்கள், தொல்லியல் சான்றுகள், நேர்த்தி மிக்க இலக்கண நூல்கள் என தமிழ் கொண்டுள்ள தனித்துவம் சிறப்பு மிக்கது.

ஈழத் தீவைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் தமது மொழியாற்றலால் உலக அளவில் கவனத்தை பெற்றிருந்தனர். இத் தீவின் தீர்மானிக்கும் சக்திகளாக ஈழத் தமிழர்கள் இருந்தனர். தமிழ் மக்களின் தாய் மொழி குறித்த அறிவும் ஆங்கிலப் புலமையும் பிரித்தானிய அரசில் இத் தீவின் முதல் பிரதிநிதிகளாக ஈழத் தமிழர்களை ஆக்கியது. பிந்தைய காலத்தில், சிங்கள அரசு உருவாக்கத்தின் பின்னர், ஈழத் தமிழ் மக்களின் தாய் மொழி திட்டமிட்ட ரீதியாக ஒடுக்கப்பட்டது. 1956இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது. தமிழ் மொழிக்குரிய சம இடம் மறுக்கப்பட்டது. பின்னர் அரசால், அரச படைகளால் தமிழை ஒழித்துக் கட்டும் வேலைகள் மும்மரமாக இடம்பெற்றன.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தமிழ் மொழி உரிமைக்கானது. தமிழ் மொழி அரசுக்கானது. அதனால்தான் தந்தை செல்வா தமிழரசுக் கட்சியை தோற்றுவித்தார். ஒரு இனம் தனது தாய் மொழியை இழந்து வாழ முடியாது. தாய் மொழி இல்லையேல் அந்த இனம் அழிந்துவிடும். அது தனது பண்பாட்டை, வரலாற்றை இழந்துவிடும். தன் தாய் நாட்டை, தாய் நிலத்தை இழந்துவிடும். இதற்காகவே ஈழத் தமிழர்கள் இத்தனை ஆண்டு காலமாய் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் தியாகங்களைப் புரிந்து போராடி வருகிறார்கள்.

தமிழீழ அரசானது தமிழ் மொழியில் அழகியதொரு தேசத்தைப் படைத்தது. அரச கட்டமைப்புக்கள் மற்றும் போரியல் கட்டமைப்புக்களுக்கு தமிழ் பெயர்களை சூட்டுதல் துவக்கம், நடைமுறையில் தூய தமிழ் மொழியிலான வாழ்வொன்றை சாத்தியப்படுத்தினர். மாந்தர்களுக்கு தமிழ் பெயர்களை சூட்டுதல், பொருட்களுக்கு தமிழ் பெயர்களை சூட்டுதல் என விடுதலைப் புலிகளின் மொழித்துறை நிர்வாக கட்டமைப்புக்கள் முன்னெடுத்த நடவடிக்கைகள் இன்றளவும் உலகால் வியப்புடன் நோக்கப்படுகின்றன. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த நகரங்களும் ஒட்டுமொத்த நிலமும் தமிழ் அமைந்திருந்தது.

ஈழத் தமிழினம் மொழி மறுப்பாலும் மொழியழிப்பாலுமே ஆயுதம் ஏந்தியது. உலகின் செழுமையான மொழி தமிழ். அந்த செழுமையுடன் இன்றளவும் வாழ்வையும் பேசும் மொழியையும் கொண்டவர்கள் ஈழத் தமிழ் மக்கள். அதனை அழித்தொழிக்க வேண்டும் என்பதில் அன்றிலிருந்து இன்றளவும் குறியாக இருக்கிறது சிங்கள அரசு. மொழியையும் இனத்தையும் அழிக்க வரலாறு முழுதும் இனப்படுகொலைகளை செய்த பின்னரும், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை செய்த பின்னரும் சிங்கள அரசின் அணுகுமுறை எப்படி இருக்கிறது?

இன்றும் இலங்கை அரசின் அலுவலகங்களில், அரசு வடக்கு கிழக்கில் நடும் பெயர்பலகைகளில் எங்கள் தாய் மொழி கொலை செய்யப்படுகிறது. பொலிஸ் நிலையங்களில் சிங்களத்தில்தான் முறைப்பாடு பதிவு செய்யப்படுகிறது. வடக்கு கிழக்கிற்கு வரும் பல சுற்று நிரூபங்கள் சிங்களத்தில்தான் உள்ளன. தென் பகுதியில் பிரதான அலுவலகங்களுக்குச் சென்று தமிழிலில் பிரச்சினைகளை தீர்க்க முடியாது. வடக்கு கிழக்கில் மருத்துவமனை உள்ளிட்ட பல இடங்களில் தமிழ் தெரியாத வைத்தியர்களிடம் எங்கள் மக்கள் நோளை சொல்கிறார்கள்.

உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகள் தாயகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களிடையே தாய் மொழி, மற்றும் தமிழ் மொழி குறித்தான பல்வேறு போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் தாய் மொழி தினத்தை ஈழத் தமிழர்கள் கொண்டாட வேண்டும். மொழி, இனம், பண்பாடு குறித்த புரிதலை இந்த நாளில் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நாளில் ஏற்படுத்தும் விழிப்புணர்வு எல்லா நாட்களிலும் பயனாக விளைய வேண்டும்.

உலகில் தாய் மொழி அழிக்கப்படும் அனைத்து இனங்களுக்காகவும் நாங்கள் குரல் கொடுப்போம். தாய் மொழியை திட்டமிட்டு அழிக்க ஒடுக்கப்படும் அத்தனை இனங்களுக்காகவும் நாங்கள் குரல் கொடுப்போம். இனம், மொழி, பண்பாடு, வரலாறு என ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த வாழ்வை அழிப்பது மிகவும் கொடியது. கடந்த நூறு ஆண்டுகளாக நாங்கள் இத் தீவில் அனுபவித்து வரும் கொடிய சரித்திரம் இதுவே. தாய் மொழியை பேண, தமிழ் மரபை பேண, தமிழ் இனத்தின் இருப்பை பேண எல்லோரும் விழிப்புடன் இருக்க வேண்டிய காலம் இது. மொழி அழிந்தால், இனம் அழியும் என்பதையும் அவ்வாறு அழிந்த இனங்களையும் மொழிகளையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

# யாழ்ப்பாணம் மார்க் மாஸ்டர் உருவாக்கிய ஓவியர்களுள் கனடாவின் கருணா தலை சிறந்தவர்

**- தமிழகத்தின் ஓவியக் கலைஞர் மருது புகழாரம்**




“என்னைப்போன்ற பல ஓவியர்கள் தமிழ்நாட்டில் இந்தத் துறையில் பணியாற்றிவருகின்றார்கள். நாங்கள் அனைவருமேயாழ்ப்பாணம் மார்க் மாஸ்டர் அவர்கள் பற்றியும் அவர் உருவாக்கிய ஓவியர்கள் பற்றியும் நன்கு அறிந்து வைத்துள்ளோம். நான் பயணம் செய்யும் வெளிநாடுகளில் கூட பல ஈழத்து ஓவியர்களைச் சந்தித்துள்ளேன். அவர்கள் அனைவருமே அற்புதமான ஓவியங்களை இன்னும் படைத்து வருகின்றார்கள். இவ்வாறான ஓவியர்களுள் கனடாவில் வாழ்ந்து இரண்டு வருடங்களுக்கு முன்னர் திடீர் மரணத்தைத் தழுவிய கருணா என்னும் எனது நண்பர் தலை சிறந்தவர் என்றுதான் நான் கூறுவேன். கனடாவின் “தாய்வீடு” பத்திரிகையோடு தன்னை இணைத்துக் கொண்டு கலைத்துறையில் ஈடுபட்டு வந்த நண்பர் கருணாவின் நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாது”.

இவ்வாறு தெரிவித்தார் தமிழகத்தின் ஓவியக் கலைஞர் மருது அவர்கள். கனடாவின் வாழ்ந்து இரண்டு வருடங்களுக்கு முன்னர் காலமான ஓவியர் கருணாவின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு கடந்த திங்கட்கிழமையன்று இணையவழி ஊடாக கனடாவில் இடம்பெற்றன.

கனடா தாய்வீடு பத்திரிகையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வை திரு பொன்னையா விவேகானந்தன் தொகுத்து வழங்கினார்.

மேற்படி அஞ்சலி நிகழ்வில் கனடாவிலிருந்து மட்டுமல்ல, உலகின் பல நாடுகளிலும் உள்ள கலைத்துறை சார்ந்தவர்கள் மற்றும் எழுத்தாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அங்கு தொடர்ந்து உரையாற்றி தமிழகத்தின் ஓவியர் மருது அவர்கள் தனது அஞ்சலி உரையில் பின்வருமாறு தெரிவித்தார்.

“கருணா அவர்கள் நாம் இன்னும் வியந்து பேசக் கூடிய மனிதராவார். அவர்கள் தன்னை ஒரு ஓவியராகக் வெளிக்காட்டிக் கொள்ளாவிட்டாலும் அவரிடத்தில் பல திறைமைகள் மறைந்து கிடந்ததை நான் அவதானித்தேன். அவரோடும் அவரது நண்பர்களாக பலரோடும் நான் கழித்த பல நாட்கள் என் வாழ்க்கை அழிக்க முடியாத அத்தியாயங்களாகவே இன்னும் பதிந்துள்ளன. ஓவியம், புகைப்படக் கலை மற்றும் மேடை நாடகம் சார்ந்த துறைகளில் முத்திரை பதித்து நின்றவர் திடீரென் நிரந்தர நித்திரைக்குச் சென்றுவிட்டார் என்பதை நம்பவே




முடியவில்லை” என்றும் தெரிவித்தார்.



தாய்வீடு பத்திரிகையின் ஆசிரியர் திரு திலீப்குமார் தனது உரையில், “இரண்டு வருடங்கள் கழிந்தாலும் நாம் மறக்க முடியாத ஒரு அற்புதக் கலைஞனாகவும் நண்பனாகவும் திகழும் கருணாவை இழந்து தவிக்கும் ஒருவனாக நான் உள்ளேன். அவர் மூலம் நான் கற்றுக்கொண்ட அச்சுக்கலை, எழுத்து வடிவமைப்பு மற்றும் வரைகலை போன்ற அறிவு சார் விடயங்கள் தொடர்ந்து கைகொடுக்கின்றன. எனவே எமது பத்திரிகைப் பயணம் தொடரும் வரை கருணா என்னும் கலைஞன் தொடர்ந்து எம்மோடு பயணிப்பார் என்று உறுதியாக நம்புகின்றேன்” என்றார். மேலும் பலர் அங்கு உரையாற்றினார்கள்.

# “தமிழக முதலமைச்சர்யிடம் கலைமாமணி விருது வாங்கிய நடிகர் சிவகார்த்திகேயன் தனது தாயிடம் காண்பித்து காலில் விழுந்து ஆசி பெற்றார்”





# யாம் அறிந்த மொழிகளிலே தாய்த் தமிழுக்கு நிகர் ஏது என்போம்!




**- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்**

---

பெப்ரவரி 21ம் திகதி **'உலகத் தாய்மொழித்'** தினமாகும். அதையொட்டி இக் கட்டுரை இவ்வாரம் பிரசுரமாகின்றது
- பிரதம ஆசிரியர, உதயன்

---

இன்றைய வங்க தேசத்தில் (அன்றைய கிழக்குப் பாகிஸ்த்தான்) வங்காள மொழியையும், பாகிஸ்த்தானின் தேசிய மொழியாக அங்கீகரிக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தார்கள். 1952ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ம் திகதி இடம்பெற்ற இந்த போராட்டத்தில் நான்கு மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். பின்னர் அந்தக் கிளர்ச்சி தீவிரமடைந்து, கிழக்குப் பாகிஸ்த்தான் தனி நாடாகி "வங்க தேசம்" என்ற ஒரு நாடு உருவாகியது.

1999ம் ஆண்டு "யுனெஸ்கோ (ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டுக் கழகம்) நடத்திய ஒரு மாநாட்டில் வங்க தேச அரசு, தாய்மொழிக்காக போராடித் தங்கள் உயிர்களை அர்ப்பணித்தவர்களின் நினைவாகவும், தாய்மொழியின் சிறப்பை வலியுறுத்தும் வகையிலும் பெப்ரவரி மாதம் 21ம் திகதியை" உலகத் தாய்மொழித் தினமாக ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். "யுனெஸ்கோ" அமைப்பானது, அநதத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, 2000ம் ஆண்டிலிருந்து, பெப்ரவரி மாதம் 21ம் திகதி வருடந்தோறும் "உலகத் தாய்மொழித் தினம்" என்று அனைவராலும் கொண்டாடப்பெற்ற வருகின்றது.

ஆயிரம் மொழிகளை அறிந்திருந்தாலும், அவற்றிற்கு அடிப்படையாக விளங்குவது தாய்மொழியே ஆகும். "உங்களுக்குத் தெரிந்த மொழியிலே ஒருவன் பேசினால், அது உங்கள் அறிவைச் சென்றடையும், ஆனால் உங்கள் தாய்மொழியிலே ஒருவன் பேசினால், அது உங்கள் உள்ளத்தையும் ஊடுருவிச் செல்லும்" என்று நெல்சன் மண்டேலா குறிப்பிட்டார். அந்த வகையில், தாய்மொழி என்பது நம் உணர்வோடு நம்முடைய கனவோடு, நம்முடைய அழுகையோடு, சிரிப்போடு, அனைத்து மெய்பாடுகளோடும் வளர்ந்த மொழியாகும்.

தாய்மொழிக்கு முதன்மை வழங்குவது என்பது, பெற்ற தாய்க்கு எவ்வாறு முதன்மை வழங்க வேண்டுமோ, அதைப்போன்ற ஒரு உன்னதமான கடமையாகும். உலகத்தில், தற்போது 2700 மொழிகள் பேசப்பட்டு வருவதாகவும், ஐந்தாயிரம் வட்டார மொழிகள் புழக்கத்தில் உள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

ஆனால், அந்த 2700 மொழிகளுள் ஆசியாக் கண்டத்தில் மாத்திரம் 2200 மொழிகள் பேசப்பட்டு வருகின்றன என்பது பலருக்கு வியப்பைத் தரும்.
இந்திய உப கண்டத்தில் 33 மொழிகளும், 2000 வட்டார மொழிகளும், பேசப்பட்டு வருவதாக கூறப்படுகின்றது. அந்த 33 மொழிகளுக்குள், 23 மொழிகளை மட்டுமே இந்திய அரசு அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையின் கீழ் அங்கீகாரம் அளித்துள்ளது என்றும் அறியப்படுகின்றது.

கிரேக்க மொழி,லத்தீன் மொழி, ஹிப்ரூ மொழி, சீன மொழி, தமிழ் மொழி, சமஸ்கிருதம் ஆகிய யாவையும், பழைமை வாய்ந்த மொழிகள். இவற்றுள்ள சமஸ்கிருதம் ஒரு பேச்சு மொழி அல்ல. அது தவிர்ந்த மொழிகள் அனைத்தும் ஒரு காலத்தில், மக்கள் திரள் திரளாகப் பேசிக்கொண்டு அல்லது இலக்கியங்களையும் அறிவியலையும் தமது சமூகத்திற்காக படைத்தளித்துக் கொண்டே இருந்தவை ஆகும்.

இவற்றுள், இன்றைக்கு கிரேக்கமும், லத்தீனும் செல்வாக்கும் பாவைனையும் இழந்து விட்டன என்றே கூறலாம். தனது செல்வாக்கை இழந்திருந்த ஹீப்ரு மொழி, யூதர்களின் எழுச்சியினாலும், உழைப்பாலும், மறுமலர்ச்சியடைந்துள்ளது. சீனமொழியானது என்றைக்குமே தளர்ச்சியடையாத நிலையில் உறுதியாக எழுந்து நிற்கின்றது. இடைவிடாத வணிகத்தால், உலகத்தோடு தொடர்பு கொண்டு வலிமை வாய்ந்த ஒரு இனமாக என்றைக்குமே இருந்து வரும் காரணத்தால், சீனமொழி நிலைத்து நிற்கின்றது.

அதுபோலவே, எமது தமிழ் மொழியும், பல்வேறு நாடுகளுக்கும் சென்று குடியேறிய தமிழர்களின் முயற்சியால், ஒரு சிறப்பு வாய்ந்த உலக மொழியாக "செம்மொழி" அந்தஸ்த்துடன் நிலைபெற்று வாழ்கிறது.

எல்லா நிலைகளிலும், எளிமையும் இனிமையும் என்றும் மாறாத தன்மையும் கொண்டது எமது தமிழ் மொழி. இது ஒரு ஆச்சரியமான வியடமே. திருவள்ளுவர் எப்படிப் பேசினாரோ அல்லது எழுதினாரோ, அதைப்போன்றே நாமும் பேசுகின்றோம். அதனால்தான் எமக்கு திருக்குறளும் எமக்குப் புரிகின்றது.

ஆங்கிலம் 11ம் றுாற்றாண்டுக்குப் பின்பு தோன்றிய மொழியாகும். எனினும், ஆங்கில மொழியின் வளர்ச்சியில், 13ம் நூற்றாண்டுக்குரிய ஆங்கிலம், இன்றைக்கு இருக்கின்ற ஆங்கிலேயர்களுக்கே புரியாது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. ஆனால், 2000 ஆண்டுகளுக்கு முந்தைய திருக்குறள் இன்றும் நமக்குப் புரிகின்றது. காலம் மாறினாலும் என்றும் தனித்துவம் மாறாது இருக்கின்ற பெருமை தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு. ஆதனால் தான், அமெரிக்காவிலும் கனடாவிலும், ஏன், உலகெங்கும் வாழும் தமிழர்களும் தமிழ் ஆர்வலர்களும், அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலைக் கழகத்திலும், கனடாவின் ரொரன்ரோ பல்கலைக் கழகத்திலும், தமிழ் மொழிக்கான சிறப்பு "இருக்கை"களை நிறுவுவதற்கான முயற்சிகளில் இறங்கி அவற்றுள் வெற்றியையும் ஈட்டியுள்ளார்கள்.

நிறைவாக,
"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே
அதைத் தொழுது படித்திடடி பாப்பா"
"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"
என்றெல்லாம் எமது மொழியைப் போற்றினார் பாரதியார்.
"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்றார் பாரதிதாசனார்.

தமிழ் மொழியை நாம் போற்றுகின்ற அளவு பயன்படுத்துவதில்லை. தாய்மொழி என்பது நம்முடைய உணர்வோடு, நம்முடைய கனவோடு, பின்னிப் பிணைந்திருப்பதை நீங்கள் இன்னொரு மொழியில் காண முடியுமா? நீங்கள் எந்த மொழியைப் படித்தாலும், உங்கள் கனவில் வருவது எந்த மொழி? தாய் மொழி-தானே?

கூவினால் தான் குயில்
கர்ச்சித்தால் தான் சிங்கம்
உறுமினால் தானே புலி
வீடுகளில் பேசினால் தானே தமிழ்
மொழி மறைந்தால் இனம் அழியும்
இனத்தின் முகவரியும் தொலைந்து விடும்

பெற்றோர்களுக்கு! வீட்டிலாவது, உங்கள் பிள்ளைகளுடன் தாய் மொழியான தமிழில் பேசிப் பழகுங்கள்.

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமர் சிறப்புக் கண்டார்" என்றுரைத்த பாரதியை வணங்கி இக் கட்டுரையைத் தீட்டுவதற்கு உந்து சக்தியாக விளங்கிய பேராசிரியர் மறைமலை இலக்குவனார்க்கும், பேராசிரியர் கு. ஞானசம்பந்தனுக்கும் என் நன்றியும் வணக்கமும்!




*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# #35 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

ஒரு சமயம் கலைஞானி கமலஹாசன் குமுதம் (13-0 6 -1996) இதழுக்கு பேட்டி அளித்திருந்தார்." நீங்கள் தான் நம்பர் 1 ஸ்தானத்தில் தான் அதில் கடந்த 20 ஆண்டுகளாக இருந்து வருகிறீர்கள் என்று பம்பாய் பத்திரிகைகள் மிக அழுத்தமாக எழுதுகின்றனவே?", என்று கூறிய கருத்துக்கு "இருபது வரு'மான்னு நீங்க சொல்றீங்க, எனக்கு முப்பது வரு'மா ஒருத்தர் தான் நம்பர் ஒன்றாக தெரிகிறார்! வீடியோ இல்லாத காலத்தில, தொழில் கூட்டுறவோ சக வெளிநாட்டு ஹாலிவுட் படங்களைப் பற்றிய உடனடி கருத்துப் பரிமாற்றமோ இல்லாத காலகட்டத்தில அவர் பண்ணின சாதனை என்னை பிரமிக்க வைத்தது. ஏன் பொறாமையாக கூட இருக்கு! அந்த பிரமிப்பிலிருந்து மீளவே முடியல.... ஒருவேளை அவர் கூட நடிச்சுட்டா இது குறைஞ்சுடும்னு அதையும் செஞ்சு பார்த்துட்டேன். ஊகும்.. என்ன ஒரு ஈடுபாடு! அவர் பெயர் சிவாஜி கணேசன். யோசித்துப் பார்த்தேன் இந்த அளவிற்கு நிற்கணும்னா என்ன ஒரு வேகம்! உத்வேகம் இருக்கணும்!

கமல் அவர்கள் கூறியது நூற்றுக்கு நூறு சரியானதே! ஒரு முழுமையான ஆழமான கலைஞனுக்குத் தான் இன்னொரு கலைஞனின் முழு பரிமாணமும் புரியும். அது மாத்திரமல்ல... எந்த மேடையிலும் சிவாஜி பற்றி கமல் பேசும் போது தெய்வ சந்நிதானத்தில் தெய்வத்திற்குக் கொடுக்கும் மரியாதை போன்று மிகுந்த பக்தியுடனும், நன்றியுடனும் பேசுவது அவருடைய உயர்ந்த பண்பு!



சிவாஜி அவர்கள் பற்றி உயர்வாக பேசும் போது பேசுபவர்க்கே ஒரு தனி மதிப்பு வந்து விடுகிறது. இது சிவாஜி அவர்களால் எமக்குக் கிட்டிய இன்னொரு பெருமை! திறமை - உழைப்பு - விடாமுயற்சி - தொழில் பக்தி - இவை நான்குமே சிவாஜியின் இமாலய வெற்றிக்கு காரணம் என்று முன்பே பல இடங்களில் எழுதியுள்ளேன். சிவாஜி அவர்களுடைய தொழில் ஈடுபாட்டை பற்றி குறிப்பிடும் "சோ" ராமசாமி (துக்ளக் நிறுவனர்) அவர்கள், "சிவாஜி ஒரு பெரிய நடிகர், "தொழிலில் மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் உள்ளவர். 'ாட் முடிந்தாலும் சிவாஜி செட்டை விட்டு போக மாட்டார். அனேகமாக எல்லா நடிகர்களுமே 'ாட் முடிந்ததும் செட்டை விட்டு வெளியே சென்றுவிடுவார்கள். ஆனால் சிவாஜி உள்ளே எவ்வளவு புழுக்கமாக இருந்தாலும் செட்டை விட்டு வெளியே வரமாட்டார். அடுத்த 'ாட்டில் அவர் நடிக்கவில்லை என்றாலும் உடன் நடிக்கும் நடிப்பை கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பார்.

ஒருமுறை சிவாஜியுடன் நடித்துக் கொண்டிருக்கும் போது, நான் "செட்டை" விட்டு வெளியே வந்தேன். நடிகர் ஸ்ரீகாந்தும் என்னுடன் வந்தார். செட்டுக்கு வெளியே நின்று சிறிதுநேரம் அரட்டை அடித்து விட்டு, இருவரும் உள்ளே வந்தோம். உள்ளே வந்ததும் சிவாஜி, ஸ்ரீகாந்தை கூப்பிட்டு "அவன் (சோ) வெளியே போனான் என்றால் நீயும் ஏன் போனாய்?, அவனுக்கு எதிலும் அக்கறை இல்லை. இந்த நடிப்பு தொழில் இல்லாவிட்டால் வக்கீல் தொழில் இருக்கிறது என்பான். உனக்கு அப்படி அல்ல, உனக்கு நடிப்புதான் தொழில். அடுத்த 'ாட்டில் அவன் ஒரு ஜோக் அடிப்பான், அதில் எல்லாமே சரியாய்ப் போய்விடும். உனக்கு அதுவும் செய்யத் தெரியாது, உன்னுடன் கூட நடிக்கும் ஒரு நடிகன், ஒரு 'ாட்டில் எப்படி நடிக்கிறான், அதற்கு ஏற்றார் போல் நாம் எப்படி நடிக்க வேண்டும் என்பதை எல்லாம் கவனித்து பார்த்தால் தான் தெரியும். இதெல்லாம் தெரிந்து கொள்ளாமல் நீங்கள்லாம் என்ன நடிக்க போகிறீர்கள்? செட்டிலேயே உட்கார்ந்து மற்றவர்கள் நடிப்பதை பார்த்துக்கொண்டிருக்கும் நான் என்ன பைத்தியக்காரனா?, என்று லெக்சரே அடித்துவிட்டார்". தொழில் மீது அவர் கொண்ட அக்கறைக்கு இது ஒரு உதாரணம். இவ்விதம் நூற்றுக்கணக்கான சம்பவங்களை அவரது உயர்ந்த தொழில்பக்திக்கு உதாரணமாக என்னால் எழுத முடியும். அப்படியொரு பக்தியும் ஈடுபாடும் இருந்தபடியால் தான் தமிழ் சினிமாவில் சிவாஜி அவர்களது ஆரம்பகால பதினைந்து ஆண்டுகள் சினிமா தொழிலை நம்பி முதலீடு செய்பவர்களது பொற்காலமாக கவனிக்கப்படுகிறது.

நடிகர் திலகம் அவர்களுடைய 50 ஆண்டுகால கலைச்சேவையை பாராட்டி மக்கள் திலகம் எம்ஜிஆர் முதலமைச்சராக இருந்த வேளையில், ஏவிஎம் சரவணன், பாரதிராஜா, நடிகர் சுந்தரராஜன் ஆகியோர் கொண்ட குழுவினர் ஏற்பாடு செய்து நடாத்திய மிகப் பிரம்மாண்டமான பாராட்டு விழாவிலே நடிகர் வினுசக்கரவர்த்தி கூறிய பாராட்டு வார்த்தைகளை இங்கு குறிப்பிடுவது மிகப்பொருத்தமாக இருக்கும்.

"நமது மதிப்பிற்குரிய நடிகர் திலகம் அவர்கள் தன்னுடைய 50 ஆண்டு கலை பயணத்தை முடித்து நூறு ஆண்டுகளை தொடரவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறேன்."

"இவருடைய நடிப்பை என்னுடைய தாத்தா, தந்தை தாய் பார்த்து ரசித்தார்கள். நான் கண்டு ரசித்தேன். என் பிள்ளை கண்டு ரசிப்பான். பேரன் கண்டு ரசிப்பான். பேரனுக்குப் பேரன் எல்லாம் கண்டு ரசிக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை, ஏனென்றால் தமிழிலேயே ஒரு வார்த்தை புரியவில்லை என்றால் அகராதியை தேடுவோம், ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை புரியவில்லை என்றால் டிக்சனரியை புரட்டுவோம். அதேபோல வக்கீல், டாக்டர், நீதிமான், பெரிய காவியத் தலைவனாக, செக்கிழுத்த சிதம்பரனாராக, கட்டபொம்மனாக நடிக்க வேண்டுமென்றால் இந்த நடிப்பு என்ற அகராதியைப் புரட்டிப் பார்த்துவிட்டுத் தான், நாங்கள் எல்லாம் அரிதாரம் பூசுவோம்".

கவியரசு வைரமுத்து அவர்கள் பேசும்போது "நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் தமிழ் திரையுலகிற்கு வந்த பிறகுதான் குளோசப் என்று சொல்லப்படுகிற உத்தி தமிழ் திரையுலகில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. அதற்கு முன்னால் இசை நடித்துக் கொண்டிருந்தது. சிவாஜி அவர்கள் வந்தபின் தான் அவருடைய உதடு நடித்தது புருவம் நடித்தது நெற்றி நடித்தது நரம்பு நடித்தது அவருடைய உடம்பே நடிப்பின் அவதாரமாக மாறிவிட்டது! தமிழுக்கு... தமிழில் வார்த்தைக்கு முறுக்கேற்றி கொடுத்தார் கலைஞர் அவர்கள். அதை நடிகர் திலகம் அவர்கள் தன்னுடைய குரலால் சங்கீதமாக்கிக் கொடுத்தார்... கீழே வைரமுத்து அவர்கள் பேசிக் காட்டிய மனோகரா தர்பார் சீன் வசனத்தில் ஒரு பகுதி..! (வசனம் கலைஞர் மு கருணாநிதி)

மனோகரன்: கட்டளையா அது? கரை காண முடியாத ஆசை! பொன்னும் மணியும் வைரமும் பூட்டி மகிழ்ந்து கண்ணே முத்தே..! என்றெல்லாம் குலவிக் கொஞ்சி... தந்தத்தால் ஆன கட்டிலிலே... சந்தனத் தொட்டிலிலே.. வீரனே! என் விழி நிறைந்தவனே! தீரர் வழி வந்தவனே! என்று யாரை சீராட்டி பாராட்டினீர்களோ.. அவனை அந்த மனோகரனை சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தி சந்தோசம் கொண்டாட வேண்டும் என்ற தங்கள் தணியாத ஆசைக்கு பெயர் கட்டளையா தந்தையே? என்று இந்தச் சொற்களின் உச்சரிப்பின் பாவங்களை... எங்கே தமிழை நிறுத்த வேண்டும், எங்கே தமிழுக்கு முறுக்கேற்ற வேண்டும், எங்கே தமிழின் நாடியிருக்கிறது என்று உச்சரித்து காட்டிய பெருமை நடிகர் திலகம் அவர்களுக்கே உண்டு!



அவரால் தமிழ் பட வசனம் உயிர்பெற்றது! அவரால் பாட்டு உயிர்பெற்றது! கவிஞர் கண்ணதாசன் அவர்கள் தன்னுடைய கவிதைக்கு... எதை உணர்ந்து எழுதினாரோ.. எது தன்னுடைய வார்த்தைக்கு வேர் என்று நினைத்தாரோ... அதை நடிகர் திலகம் தன்னுடைய விழிகளில் கொண்டுவந்தார்! முகத்தில் கொண்டு வந்தார் உதட்டில் கொண்டு வந்தார்! "சிலர் சிரிப்பார்.. சிலர் அழுவார்.. நான் அழுதுகொண்டே சிரிக்கின்றேன். உலகத்தில் வேறு எந்த கலைஞனாவது இந்த நான்கு வரிகளுக்கு நடித்துக் காட்ட முடியுமா? என்று சந்தேகமாக இருக்கு!

சிலர் சிரிப்பார் என்கிறபோது ஒரு நடிகன் சிரித்து காட்டிவிட முடியும். சிலர் அழுவார் என்கிறபோது ஒரு நடிகன் அழுது காட்டிவிட முடியும். ஆனால் நான் சிரித்துக் கொண்டே அழுகின்றேன், இந்த வார்த்தையை சிரிப்பை முகத்தில் பரப்பி சிரிப்பு முகத்தில் உட்கார்ந்து மறைவதற்கு முன்பே அழுகையை கொண்டுவந்து நிரப்பவேண்டும். இது உலகத்திலேயே மிகச்சிறந்த கலைஞனான நமது சிவாஜி அவர்களுக்கே மட்டும் என்று சொன்னால் மிகையாகாது!

"கப்பலோட்டிய தமிழன் திரைப்படத்தில் அவரோடு இணைந்து நடிக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அதை மிகப்பெரிய பேறாகக் கருதுகிறேன். வீரசிதம்பரனாராக அவர் நடித்துள்ளது நடிப்புத் துறைக்கே ஒரு இலக்கணமாகும். நான் அவையிலே வீற்றிருந்து கப்பலோட்டிய தமிழனை பார்த்தேன். அன்று என் அருகில் அமர்ந்திருந்தவர் ஜெமினி அதிபர் திரு எஸ் எஸ் வாசன் அவர் கூறினார், "இனி இப்படி ஒரு நடிகர் நடிக்க முடியுமா?, என்று என் போன்ற கலைஞர்களுக்கு கண்ணீர் வருவது என்றால் அது மிகையில்லை! நடிப்புக்காக அழுவோம். ஆனால் மெய்யாக வாழ்க்கையில் அழுகை வராது. அழுகையை அடக்குவதில் நாங்கள் திறமை பெற்றவர்கள். கப்பலோட்டிய தமிழனை பார்த்துக்கொண்டிருந்த வேளை பலமுறை நான் பொருமிப் பொருமி அழுதேன். என் அடக்குமுறைக்கு கட்டுப்படாமல் கண்ணீர் பொத்துக்கொண்டு வந்தது. சிவாஜி கணேசனின் சிதம்பரனார் நடிப்பில் நான் என்னை மறந்தேன். இவ்வளவிற்கும் படத்தில் நான்தான் சுப்பிரமணிய சிவாவாக நடித்திருந்தேன். சிதம்பரனார் சிறையில் இருந்து விடுதலையாகி வெளியே வந்ததும் அவரை வரவேற்ப் போனவன் நான். அப்போது நான் கொடூரமான கு்'ட நோய்க்கு ஆளாகி எனது உருவமே உருக் குலைந்திருந்தது. "என்ன பிள்ளைவாள் என்னைத் தெரியவில்லையா" எனக் கேட்டதும், "எனக்கு மிகவும் பழக்கப்பட்ட குரல் போல் இருக்கிறது. யார் நீங்கள்?"

"கட்டிளந்து களையிழந்து காய்ந்து சருகாக நிற்கும் நான்தான் உங்கள் சிவம்!"

"ஆ! சிவமா! எங்கள் தேச பக்தி சிங்கம் சிவம்! வைர உடல் படைத்த வீரச் சிவமா இது!"

"வெண்கலக் குரலால் வெள்ளையர்களை நடுங்க வைத்த வீரத்திலகமே! உமக்கா இந்த கதி? சிவம்!.. என்ன கொடுமை இது!"

"வெள்ளையன் சிறை கொடுத்த சீதனம் பிள்ளைவாள்... சீதனம்! மாவீரன் போல் உள்ளே போனேன், மயான பிணமாய் ஆக்கிவிட்டது மாற்றான் சிறை கொடுமை! உடலெல்லாம் செல்லரித்த சல்லடையாக்கிவிட்டது பிள்ளைவாள்! அன்னை பாரதத்தாயின் விடுதலைக்காகத் தான் இந்த உயிர் ஊசலாடுகிறது பிள்ளைவாள்...! கப்பலோட்டிய தமிழனில் இந்தக் காட்சியில் உங்கள் கண்களிலிருந்து கண்ணீர் சிந்தினால் அது கண்ணீர் அல்ல ரத்தத் துளிகள்! மேலும் "முத்தமிழ் இரத்தினம் அவ்வை டி கே சண்முகம் கூறுகிறார் "நடிகர் திலகம் என்ற பெயர் சிவாஜிகணேசனுக்கு முற்றிலும் பொருந்தும். மெய்யாகவே நடிகர்களுக்கெல்லாம் திலகமாக விளங்குகிறார் அவர். இதுவரையில் தமிழகத்தில் எத்தனையோ நடிகர்களை நான் சந்தித்திருக்கிறேன். அவர்களில் சிலரோடு நடித்தும் இருக்கிறேன். சிவாஜி கணேசன் அவர்கள் அனைவரிலும் சிறந்த ஆற்றல் வாய்ந்த நடிகர் என்பதில் ஐயமில்லை. உவகை, வெகுளி, காதல், வீரம், அவலம், அச்சம், வெறுப்பு முதலிய ஒன்பான் சுவைகளையும் நடித்துக் காட்டும் ஆற்றல்வாய்ந்த கலைஞர்கள் நம்மிடையே சிலர்தான் இருக்கிறார்கள். அவர்களில் முதன்மையானவர் சிவாஜி கணேசன் ஆவார். அவர் இருப்பது நமக்கெல்லாம் பெருமை. ஆனால் தமிழகத்திற்குள் நிற்கும் நடிகரல்லர். தென்னிந்தியாவின் நடிகர் திலகம் பாரதத்தின் நடிகரத்தினம்! உலக நடிக மேதை சிவாஜிகனேசனின் ஒளிவீசும் கண்கள் என்றும் சொல்லலாம்! ஆம்! மெய்யாகவே அவர் கண்கள் பேசுகின்றன.

எத்தனையோ நற்செல்வங்களைத் தமிழர்கள் அடைந்துள்ளார்கள். அருட்செல்வம் - பொருட்செல்வம் - தமிழ்ச்செல்வம் அனைத்தும் இங்கு உள்ளன. ஆம்! ஐயமில்லை, "சிவாஜிகணேசனும் தமிழர்களுக்கு ஒரு செல்வம்தான்"!

*காட்சிகள், நினைவுகள் விரியும் - வீணை மைந்தன்*



*அறிமுகம்...*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

*சென்ற வார தொடர்ச்சி...*

**சூ**டாமணி விகாரத்தில் தலைமைக் குரு அருள்மொழி வர்மனிடம் நீங்கள் ஏன் இலங்கையில் முடி சூட மறுத்துவிட்டீர்கள் என்று கேட்கும் போது, அருள்மொழி வர்மன் பதில் இவ்வாறு அமைகிறது 'மன்னிக்க வேண்டும் மகாவம்சம் படித்ததுண்டா? என்று தங்களிடம் கேட்டது, தங்களுக்குப் படிக்கத் தெரியுமா என்று கேட்பது போலத்தான். ஆனால் அந்த 'மகாவம்சம்' கூறும் அரச பரம்பரையில் யார், யார் என்னென்ன பயங்கரமான கொடும் பாவங்களைச் செய்திருக்கிறார்கள் என்று தங்களுக்குத் தெரியும் அல்லவா? மகன் தந்தையைச் சிறையில் அடைத்தான். தந்தை மகனை வெட்டிக் கொன்றான். தாய் மகனுக்கு விஷிமிட்டுக் கொன்றாள், தாயை மகன் தீயிலே போட்டு வதைத்தான்-- பெற்றோர்களுக்கும் பெற்ற மக்களுக்கும் உறவு இப்படி என்றால் சித்தப்பன்மார்கள், மாமன்மார்கள், சிற்றன்னை, பெரியன்னைமார்கள், அண்ணன் தம்பிமார்கள்-- இவர்களைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. குருதேவரே! இப்படிப்பட்ட கொடும் பாதகங்களை இலங்கை அரச குடும்பத்தினர் செய்தனர் என்று 'மகாவம்சம்' கூறுகிறதல்லவா?' என்கிறார். பட்டம் பதவிக்காக முட்டி மோதி தம் குலப் பெயர் மங்கி தன்மானம் இழந்து இன்று நாம் நிற்கிறோம். மேலும் சோழப் பேரரசின் முடி அருள்மொழி வர்மனுக்கே என்று மக்கள் பெரும் ஆவலுடன் அந்த முடி சூடும் அற்புத நாளில் பெருந்தொகையாக மகிழ்வுடன் பெருகி நிற்கையில், அருள்மொழி வர்மனோ நீதி முறை தவறாது தன் கையாலேயே தன் முடியை சித்தப்பன் மகனான சேந்தன் அமுதன் எனும் மதுராந்த சோழனுக்கு அணிவிக்கிறான். அணிவித்து தம் குடி மக்கள் உள்ளங்களில் உயர்ந்து நிற்கிறான். இன்றோ நீதி அழிந்து, ஒற்றுமை குலைந்து உலக நாடெங்கும் தமிழர்கள் அகதிகளாகச் சிதறிக்கிடக்கின்றோம். ஒற்றுமையின் கைகள் ஒன்றுபட்டிருந்தால் நாமும் இன்று அரியணை ஏறியிருப்போம். ஆட்சி செய்ய ஒரு நாடு இல்லை என்றால் எப்படி மொழியை வளர்ப்பது. ஆதித்த கரிகாலனின் சூழ்ச்சியில் அருள்மொழி வர்மனும்,

குந்தவையும் காரணம் எனும் கட்டுக்கதைக்கு இடம் கொடுக்காது இராஜதந்திர உத்தியைக் கையாண்டுள்ளான். என்றால் அது மிகையாகாது.

இந்த நாவலில் வரும் பல சம்பாசனைகளை எடுத்துக் கொண்டால் எத்தகைய பொறுமையாக, மரியாதையாக அனாவசியமான பேச்சுக்களைத் தவிர்த்து எங்கும் துன்பம் நேர்ந்திடாது உண்மைகளை சரியான இடத்தில் சரியானவர்களிடம் சொல்லும் பாணி, தம் கடமைகளை கண்ணியமாகச் செய்யும் கதாபாத்திரங்களாக சித்தரிக்கும் தன்மை எத்தனை நேர்மையையும், நாட்டுப்பற்றையும் விழித்து நிற்கிறது.

ஆதித்த கரிகாலனின் மரணம் பற்றி நாவலாசிரியர் மர்மமாகவே விட்டுவிட்டார். இந்தியாவின் கடலூரிலுள்ள காட்டுமன்னார் உடையார் குடிமனை சிவன் கோவில் கருவறையில் சோமன், ரவிதாசன், பரமேஸ்வரன் என்பவர்களால் ஆதித்தகரிகாலன் கொல்லப்பட்டான் என்று கல்வெட்டுக்கள் சான்று சொல்கின்றன. ஆனால் ஆசிரியர் ஏன் மர்மமாக்கினார்? இன்றும் நாம் அதைத் தேடி அலைந்து எம் வரலாறுகளை மேலும் தெரிந்து கொள்வதற்காகவோ? அல்லது ஆதாரங்களைத் தெரிந்து கொள்ளவில்லையோ? தெரிந்தும் மறைத்தாரோ?


'அந்தப் புரத்தில் பெண்கள் ஆடல், பாடல்களில் ஆனந்தமாகக் காலம் கழிக்க வேண்டும் அதை விட்டுவிட்டு ராஜாங்க விடயங்களில் நீ தலையிட்டதனால்' ------என்கிறார் குந்தவையை நோக்கி அன்பின் அநிருத்தர். சோழப் பேரரசு பெருமை கொள்ள சோழர் காலம் ஓர் பொற்காலமாக விளங்க ராஜ ராஜ சோழனுக்கு அவர் தங்கையான குந்தவை ஒரு வழிகாட்டியானாள் என்று பெருமை கொள்ளலாம். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்ற பழமொழியைப் பிறப்பித்து தந்ததும் இதுவே. பெண்களுக்குப் பெருமை சேர்த்த புதுமை நாவலும் இதுவே எனலாம்.

இத்தனை பெரிய சோழ வரலாற்றை தமிழர்களின் பொக்கிக்ஷமாக, வலுவுள்ள நூலாக முழுமைப்படுத்தி தன் விவேகத்தை வியக்க வைத்துள்ளார். இவர் வரலாற்றுப் புதினங்களை தன் கருப் பொருளாகக் கொண்டபோதிலும் மனிதன் வாழ்வை வென்றெடுக்க விவேகம் ஒன்றே போதுமானது என்பதுபோல் பாத்திரங்களைச் சித்தரித்திருப்பது சிறப்பானது. அருள்மொழி வர்மன் தன் அரசமுடியை தன் மாமன் மகனிற்கு நீதி முறைப்படி தருகின்றார் இதில் அவர் தியாகமும், விவேகமும் காட்சிப்படுத்தப்படுகின்றது. அதாவது அக்காலத்தில் அவருடைய அண்ணன் ஆதித்தகரிகாலன் கொலை மர்மமாகவே உள்ளபோது தான் முடி சூடுவதற்காகவே அவரைக் கொன்றிருக்கலாம் என்ற கொலைப் பழிக்கு ஆளாகலாம் என்று கூட எண்ணியிருக்கலாம். மற்றும் தான் மனைவியாக அடைய இருக்கும் வானதியின் சத்தியமான, 'ஆகாச வாணி பூமாதேவி சாட்சியாக சபதம் செய்கிறேன் பொன்னியின் செல்வர் இந்தக் கண்டத்திலும் தப்பிப் பிழைத்தாரானால் அவர் மனம் உவந்து என்னைக் கரம் பிடித்து மணந்து

கொண்டாரானால் அத்தகைய பெரும்பேறு எனக்குக் கிடைத்தனால் தஞ்சை அரண்மனைச் சிம்மாசத்தில் நான் ஒரு நாளும் உட்காரமாட்டேன் இது சத்தியம் சத்தியம்' என்பதுவும் அவனைத் தடுத்திருக்கலாம். இறுதியாக முடி சூடும் கட்டாய நிலை வந்த போது அவன் முடி தாங்கினான். இங்கு விவேகம் வெற்றி கொண்டது எனலாம். குந்தவை வந்தியத் தேவனை நோக்கி 'ஐயா உம்முடைய பதட்டமான காரியங்களால் உமது உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் என்னகதி? என்னவாகும்?------ என வினவிய போது இதற்குப் பதிலாக 'தேவி தங்களுடைய இதய சிங்காசனத்தில் இடம் பெற்ற இந்தப் பாய்க்கியசாலி உயிருக்குப் பயந்த கோழையாக இருக்க முடியுமா? ஏன்ற போது குந்தவை, 'கோழைத்தனம் வேறு ஜாக்கிரதை வேறு -------- எனத் தொடரும் இந்த உரையாடலில் வாழ்வின் வெற்றிக்கு மட்டுமல்ல உயிர்காக்கவும் விவேகம் வேண்டும். வெற்றியைக் கொண்டாட நாம் சுக நலத்துடனும், உயிருடனும் இருக்க வேண்டும் அல்லவா? அறிவும் வ ீரமும் இருந்தும் விவேகம் இல்லையேல் யாவும் வீணே என்றாகிவிடும். என்ற உள் தத்துவம் பொதிந்து கிடக்கிறது.

பொன்னியின் செல்வன் என்ற இக் கல்கியின் அழியாக் காவியத்தை காலம் கடந்தும் எம் கைகள் தாங்கி நிற்கின்றது என்று கூறலாம். இதற்கு முழுமுதற் காரணம் இனிமைமிக்க எம் முதல் மொழியாம் தமிழ் மொழியே. இந்தத் தமிழ்மொழியை என்றும் அழியாது வாழ வைக்க பல அறிஞர்கள், ஆர்வலர்கள், புலவர்கள், தலைவர்கள் என யாவரும் முழு மூச்சாக முனைந்துள்ளார்கள். உப்பை மலையாய்க் குவித்த போதிலும் சர்க்கரைச் சுவை வருவதில்லை என்றார் ஓர் அறிஞர். அவ்வாறே உலகெங்கும் பரவிக் கிடக்கும் எம் தமிழை, இளம் தலைமுறையிடம் எப்படி தமிழ் என்னும் சர்க்கரையாய் ஊட்டுவதென்பதே எம் ஆதங்கம். பொன்னியின் செல்வன் ஆசிரியர் கல்கியின இந்த ஆதங்கம் கரை சேர நாமும் கைகொடுப்போம். இக் கதையை நீங்கள் புத்தகங்களில் வாசிக்கலாம், இணையத்தளத்தில் வாசிக்கலாம், ஒலி வடிவில் கேட்கலாம். இருப்பினும் நாமும் உங்களிற்கு சிறிது சிறிதாக கதைத் தொடரை வடித்து பிரசுரிப்பதில் விருப்பம்

கொண்டுள்ளோம். பத்திரிகையை மட்டும் வாசிக்கும் வாசகர்களின் நலம் கருதி உருவாக்கிய இச் சிறு முயற்சிக்கு உங்கள் ஆதரவையும், விமர்சனங்களையும் தெரிவியுங்கள்.




இந்நூலில் முதல் அறிமுகமாகும் கதாபாத்திரமான வீரவேங்கையான வந்தியத்தேவன் முடிவு வரை முதன்மை பெறுகிறான். இவனைக் கருப்பொருளின் துணையாகக் கொண்டே கதையை விரித்து, வியாபித்து முடிவுற வைத்தார் கல்கி. இவன் சோழ நாட்டின் முதன்மையான பகுதிகளுக்கு பயணம் செய்கிறான். இவனுடைய பயணங்களூடாக நாம் உங்களிற்கு கதை சொல்ல முனைகின்றோம். வந்தியத்தேவனின் பயணங்களாவன:

கடம்பூர் பயணம்
குடந்தைப் பயணம்
தஞ்சைப் பயணம்
பழையாறைப் பயணம்
கோடிக்கரைப் பயணம்
இலங்கைப் பயணம்
இலங்கைப் பயணத்தின் திருப்பம்
பழையாறைக்குத் திரும்பும் பயணம்
மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்
மீண்டும் ஓர் இலங்கைப் பயணம்

---


Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

---

*தொடரும்...*

## ஜீவன் முக்தி (பகுதி 106)

# மனிதகுலத்திற்கு இழைக்கப்பட்டிருக்கும் மாபெரும் துரோகம்



**கு**ழந்தைகளுக்கு துரதிஷ்ட வசமாக சமுகத்தின் கொடுமையான சூழல் காரணமாக உடல் மலர்ச்சி அடைகின்ற வயது குறைந்துகொண்டே வருகிறது.

இன்றைய காலகட்டத்தில் எட்டு வயதில் மலர்ச்சி நடக்கத் துவங்கிவிடுகிறது என்று மருத்துவர்கள் வேதனையோடு பகிர்ந்து கொண்டார்கள்.

சமுகரீதியாக சரியாக இருக்கலாம். ஆனால் அது அவர்களுக்கு இழைக்கப்படும் பாவம். பாவம் கூட அல்ல. துரோகம்.

உடல் மலர்ச்சி ஆகின்ற வயது அதிகமாக ஆக குழந்தைகள் ஆரோக்கியத்தோடும், ஆயுளோடும், உயர்ந்த மன அழுத்தம் இல்லாத, நரம்பு தளர்ச்சி அடையாத, ஸ்திரமான நரம்பு மண்டலத்தோடு வாழ்வார்கள்.

உடல் மலர்ச்சி நடக்கின்ற வயது, ஓரு காலத்தில் பதினெட்டு வயதாக இருந்தது என்று கேள்விப்பட்டிருக்கிறோம்.

என்னுடைய தவங்களை, சாதனைகளைப் பார்த்து சந்தோஷப்பட்டு அதில் தொடர்ந்து முன்னேற உத்வேகம் தந்தவர் ஒரு பெண் துறவி. அவருக்குக் குப்பம்மாள் என்று பெயர்.

அவர்கள் தங்களுடைய சிறுவயதில் செய்த சாதனைகளைப் பற்றியும், அடைந்த ஆன்மீக அனுபவத்தையும் என்னிடம் சொல்லி இருக்கிறார்கள்.

சிறுவயதிலிருந்தே யோகம், தவம், செய்து வந்திருக்கிறார். மிகவும் சிரத்தையோடு தொடர்ந்து செய்து இருபத்தி இரண்டு வயதுவரை உடல் மலர்ச்சி ஆகவே இல்லையாம்.

அவர் பெரிய யோகி.

அவருடைய குடும்பத்தினர், அவருக்குத் திருமணம் செய்விக்க வேண்டும் என்பதற்காக, யோகம் செய்யவிடாமல் தடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் தடுத்து நான்கு வருடங்களுக்குப் பிறகுதான், உடல் மலர்ச்சி நிகழ்ந்ததாம்.

பதினெட்டு வயதில், யோகம் செய்வதை வீட்டிலிருந்தவர்கள் தடுத்திருக்கிறார்கள். நான்கு வருடங்களுக்குப் பிறகு, இருபத்தி இரண்டு வயதில்தான் உடல் மலர்ச்சி நடந்ததாம். அதற்குப் பிறகுதான், இல்லற வாழ்க்கையிலேயே ஈடுபட்டிருக்கிறார்கள். கட்டாயப்படுத்தித்தான் திருமண வாழ்க்கையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்.

அவருடைய வாழ்விலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது. "சூக்சுமமான உங்கள் உணர்வை மாற்றுவதன் மூலமாகவும், உடல் மலர்ச்சியைத் தள்ளிப் போட முடியும். உடல் மலர்ச்சி நடந்தாலும் சக்தியைக் கீழே வாரமல் அப்படியே மேலேயே எடுத்துக்கொண்டு போய் வைத்துவிட முடியும்".

சக்தி மேல் நோக்கித் திரும்பிவிட்டால், உடல் மலர்ச்சி நடந்தாலும், மனதால் உடனடியாக, இன்னொரு உடலைத் தேடாது, இன்னொரு துணையை மனம் தேடாது. அதாவது தனக்குள்ளேயே இன்னொரு உடலாலும், மனதாலும் அடையப்படும் ஆனந்தத்தைவிட, உயர்ந்த ஆனந்தத்தில் அப்படிப்பட்டவர்ளின் உடலும் மனமும் இயங்கும்.

ஆனால், இந்தக் காலத்தில் துரதிர்ஷ்டவசமாக, இன்னொரு துணையைத் தேடுகின்ற மனஅமைப்பு, உடல் மலர்ச்சி அடைவதற்கு முன்பே வந்துவிடுகிறது. அந்த மன அமைப்பு கொடுக்கின்ற அழுத்தத்தினால்தான் இப்பொழுது உடல் மலர்ச்சியே நடக்கிறது.

சக்தி ரீதியாக, உணர்வு ரீதியாக உச்சத்தில் வாழும் குழந்தைகளின் மனஅமைப்பை மாற்றுவது மட்டுமல்லாமல், கற்பனைகளையும், கனவுகளையும் புகுத்தும் சமூகச' சூழல்தான், மனித குலத்திற்கு இழைக்கப்பட்டிருக்கின்ற மிகப் பெரிய கொடுமை, மிகப் பெரிய துரோகம்.

**பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்.**

*மேலதிக தொடர்புகளுக்கு: (416 439 2080)*


தற்பொழுது நடைபெறுகிறது
Since 1989
சங்கர் அன் கோ
மாபெரும் மலிவு விற்பனை!
இறக்குமதியாளர்கள், மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
அனைத்து வீட்டு உபயோகப் பொருட்களின் புதிய வரவுகள் !
இல்லத்தரசிகளின் சமையற் கலைக்கான தேர்வுகளுக்கு தன்னிகரற்ற இடம் !
SOWBAGHYA
Preethi
ULTRA
சுவாமிப் படங்கள்
உணவுப் பொருட்கள்
பசுமையான மரக்கறி
மற்றும் பழவகைகள்
பூசைப் பொருட்கள்
ஆலயத்திற்குத் தேவையான
வழிபாட்டுப் பொருட்கள்
மங்கல நிகழ்வுகளான
திருமணம், குடிமனைபுகுதல்
ஆயுர்வேத மருந்துகள்
விசேட கூந்தல் தைலங்கள்
அனைத்து மூலிகைப்
பொருட்கள்....
ASIA Kitchen Machines
PREETHI Premier Mixies
ULTRA Wet Grinder
SOWBAGHYA
Wet Grinder
PREMIER
Wet Grinder
மண் சட்டிகள்
மட் பானைகள்
மண் அடுப்புகள்
மண் கூசாக்கள்
மின் தேங்காய் துருவி
மண்வெட்டிகள்
அப்பச்சட்டி
குளிப்பணியாரச்சட்டி
சில்வர் பானைகள்
எவர் சில்வர் பாத்திரங்கள்
எவர்சில்வர் பேணிகள்
சாப்பாட்டுத் தட்டுகள்
அலுமினி/மண் பானைகள்
அடுக்குச் சட்டிகள்
பிட்டுக் குடம், பானைகள்
தோசைக் கல்லு, உரல்
தேங்காய் துருவிகள்
கத்தி, கரண்டிகள்
இன்னும் பல!
தைப்பொங்கல் புத்தாண்டு.
மற்றும் ஆலய உற்சவங்கள். புதிய இல்லங்களின்
கிரகப் பிரவேச வைபவங்கள். திருமணங்கள் மற்றும்
விசேட வைபவங்கள் ஆகியவற்றுக்கு தேவையான அனைத்துப்
பொருட்களும் சங்கர் அன் கோவில் தவறாமல் கிடைக்கும்.
தற்போது தமிழர் புத்தாண்டை முன்னிட்டு. இல்லங்களுக்குத் தேவையான.
குறிப்பாக சமையல் அறைக்குத் தேவையான Rice Cookers. Grinding
Machines, Rotty Makers and Sumeet, Preeti, Premier Chefmaster
Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து விமானங்களின்
மூலம் இறக்குமதி செய்யப்பெற்றுள்ளன.
இன்றே தொலைபேசியில் அழைத்து உங்கள்
வருகையை உறுதி செய்த பின்னர்
முகக் கவசம் அணிந்து செல்லுங்கள்...
தற்போது காலை 8.30 மணி
தொடக்கம் இரவு 9.00 மணி
வரை திறந்திருக்கின்றது
அனைத்து விதமான
பசுமைமிகு பூக்கள்
மல்லிகை மொட்டு
கனகாம்பரம்
தாமரைப் பூ
சாமந்தி, அலரி
ரோஜாப்பூக்கள்
அல்லிப் பூ
கார்னேஷன் பூ
வாழை இலை
மாவிலை, அறுகு
வில்வம், துளசி, அரசிலை
பூச்சரம் எல்லா நாட்களும் கிடைக்கும்!
பிற்புறத்தில் தாராளமான வாகனத் தரிப்பிடமுண்டு
SHANKAR & Co.
2425 Eglinton Avenue East, Unit 6, Scarborough, ON M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916
(Kennedy & Eglinton)
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்!
OPEN
7 Days a week

# இவ்வார ராசிபலன்

**26-02-2021 வெள்ளி தொடக்கம் 04-03-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** கனத்த இதயத்தில் வலுத்த பலன் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். சோதனைகள் நீங்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல் நலம் திருப்தி தரும். மன அமைதி குறையும். திருமண வாய்ப்பு கூடும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சு திறமை அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னி லிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,7,9,0
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,U




**ரிஷபம்:** இறைவனின் கருணை இல்லத்தில் நிரம்பக் கூடிய அற்புதமான வாரம். சுய வீடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். பிரார்த்தனையால் பலன் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: பட்டத்தரசியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z




**மிதுனம்:** ஆலய தரிசனத்தால் ஆத்ம பலம் பெருகக்கூடிய அற்புதமான வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு, கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஹோரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,8,2,9
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X




**கடகம்:** மேலான ஆசியும், மேதைகளின் நட்பும் கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். தொழில் லாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும். வெகுமதி கூடும் நாள். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை அணிகலன் சேரும். மருத்துவச் செலவு உண்டு. பெண்களுக்கு கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 5,2,6,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,G




**சிம்மம்:** புதிய பாதையில் அடியெடுத்து வைக்கக்கூடிய அற்புதமான வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெருமைகள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பணத் தேவை அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். புகழ் கூடும். அந்தஸ்து உயரும். உறவினர் ஒன்றுமை ஏற்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனகசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,2,5,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**கன்னி:** சினமும், குணமும் சீராக அமையக்கூடிய சிறப்பான வாரம். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். சொத்து சேர்க்கை உண்டு. உழைப்பில் கவனம் தேவை. கோரிக்கை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. பொருளாதார வளம் மேம்படும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தேவி செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 1,8,2,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,A




**துலாம்:** தடைகளுக்கு விடை கிடைக்கக் கூடிய நல்ல வாரம். காதல் பிரிவை ஏற்படுத்தும். வீண் குழப்பங்கள் வந்து போகும். உடல் நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய முயற்சிகள் கை கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. அயல் நாட்டுப் பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான நாள். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச் செய்தி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாங்கல்யேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,V




**விருச்சிகம்:** பெருமையான நிகழ்வுகளை அருமையாகச் சந்திக்கக்கூடிய அற்புதமான வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வீண் செலவுகளை தவிர்ப்பது நல்லது. புதிய சிந்தனை உருவாகும். கண்ணாடிப் பொருட்கள் சேதமாகும். எதிர்ப்புகள் தவிடுப் பொடியாகும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர்.
வழிபட வேண்டிய தெய்வம்: அன்னமாரி சுவாமி, அதிர்ஷ்ட எண்: 4,2,7,0
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Q




**தனுசு:** நுண்ணறிவைப் பயன்படுத்தி மென்மேலும் உயரக்கூடிய உன்னதமான வாரம். மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. பொறாமைகள் விலகும் நாள். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகள் தாமதமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். சுபக்காரியங்கள் நடந்தேறும். இல்லத்தில் அமைதி பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: படை வீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 0,9,3,6
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,F





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** கிள்ளிக் கிடைக்கும் யோகத்தால் துள்ளிக் குதிக்கக்கூடிய அற்புதமான வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: வேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**கும்பம்:** பொறுமையுள்ள பெண்களுக்கு பெருமை சேரக்கூடிய அருமையான வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஓம்கார சுயம்புலிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மீனம்:** வேண்டாத நபர்களை விலக்கி வைக்க வேண்டிய விவேகமான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்ம சக்தி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M

## கலைமாமணி விருதுக்கு தகுதியுள்ளவளாய் மாற்றிக் கொள்வேன் என்கிறார் நடிகை மதுமிதா



தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்ற நடிகை மதுமிதா வெளியிட்டுள்ள அறிக்கையில், "என் இன்ஸ்பிரேசன் ஆச்சிக்கு வணக்கங்கள் சொல்லி கலைமாமணி விருதைப் பெறுவதில் மகிழ்கிறேன். இவ்விருதிற்கு தகுதியுள்ளவளாய் என்னை மாற்றிக்கொள்ள இன்னும் உழைப்பேன். தமிழக அரசிற்கும், முதல்வர் மாண்புமிகு எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கும், அமைச்சர் மாண்புமிகு கடம்பூர் ராஜு அவர்களுக்கும், இயல் இசை நாடக மன்ற நிர்வாகிகள் அனைவருக்கும், நளினி அம்மாவிற்கும் என் நன்றிகள். என்னைத் தொடர்ந்து நல்ல பாத்திரங்களில் பயன்படுத்தி வரும் இயக்குநர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் நேசிக்கும் ரசிகர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள்". இவ்வாறு நடிகை மதுமிதா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## நடனக் கலைஞர் மதுரை ஆர் முரளிதரனுக்கு தமிழ்நாடு அரசின் "கலைமாமணி விருது"



நேற்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் அரசின் "கலைமாமணி விருது" வழங்கும் விழாவில் புகழ்பெற்ற நடனக் கலைஞர் "மதுரை ஆர் முரளிதரன்" அவர்களும் மேற்படி விருதினைப் பெற்றார்.

தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு வருடா வருடம் தமிழ்நாடு அரசு இவ் விருதுகளை வழங்குவது வழக்கம் அந்த வரிசையில் பரதக் கலையில் பல ஆராய்ச்சிகளைச் செய்து பல உருப்படிகளை ஆக்கிய நடனக் கலைஞர் மதுரை ஆர் முரளிதரன் அவர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, "கலைமாமணி விருது" வழங்குவதையும் அருகில் துணை முதலமைச்சர் பன்னீர்ச்செல்வம் உட்பட அமைச்சர்கள் சிலர் நிற்பதையும் காணலாம்.

# சென்னைக்கு அருகே புதிய தொழிற்பூங்கா; பிரதமர் மோடி அறிவிப்பு: சுயசார்பு பாரதத்தை உருவாக்கவும் உறுதி

சென்னைக்கு அருகே புதிய தொழிற்பூங்கா உருவாக்கப்படும் என, பிரதமர் நரேந்திர மோடி கோவையில் இன்று நடைபெற்ற விழாவில் தெரிவித்துள்ளார்.மத்திய, மாநில அரசுகளின் சார்பில் ரூ.12 ஆயிரத்து 400 கோடி மதிப்பிலான புதிய திட்டப்பணிகள் தொடக்க விழா, முடிந்த திட்டங்களை பயன்பாட்டுக்குத் தொடங்கி வைக்கும் நிகழ்வு, கோவை கொடிசியா தொழிற்காட்சி வளாகத்தில் உள்ள அரங்கில் இன்று (பிப். 25) மதியம் நடைபெற்றது.தமிழக முதல்வர் கே.பழனிசாமி தலைமை வகித்தார்.

ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் முன்னிலை வகித்தார். மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி பேசினர். பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்று முடிந்த திட்டங்களை பயன்பாட்டுக்குத் தொடங்கி வைத்தார். புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.அதன் பின்னர் பிரதமர் நரேந்திரமோடி பேசியதாவது:"இன்று கோயம்புத்தூரில் நான் இருப்பது எனக்கு அளவில்லா மகிழ்ச்சி அளிக்கிறது. இது தொழில் நகரம். புதுமை படைக்கும் நகரம் கோயம்புத்தூர்.

கோவை மட்டுமின்றி ஒட்டுமொத்த தமிழகத்துக்கும் நன்மை பயக்கும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி இருக்கின்றோம்.பவானிசாகர் பாசனத்திட்டத்தின் மூலம் இரண்டு லட்சம் ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெறும். குறிப்பாக, இத்திட்டத்தின் வாயிலாக ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறுவர். இத்தருணத்தில் வள்ளுவர் கூறிய 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்வர்' என்ற திருக்குறள் எனக்கு நினைவுக்கு வருகிறது.இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்காற்றி வருகிறது. தொழில் வளர்ச்சிக்கு தடையில்லா மின்சாரம் தான் முக்கியம்.

இந்நிலையில், மின்திட்டங்களை தொடங்கி வைத்துள்ளதற்கு பெருமிதம் கொள்கிறேன். தூத்துக்குடி துறைமுகத்தில் கொண்டு வரப்பட்டுள்ள திட்டங்கள் சரக்கு கையாளும் திறனை மேலும் வலுப்படுத்துவதோடு, பசுமைப் பொருளாதாரம் சார்ந்த முழு முயற்சிக்கு உறுதி சேர்க்கும். இது மட்டுமல்லாது



இந்தியாவின் கடற்கரைகளில் அதிகளவில் சரக்குகளை கையாளும் திறன் கொண்ட துறைமுகமாக, இத்துறைமுகத்தை மேம்படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்வோம். உலக அளவில் வர்த்தகம் மற்றும் சரக்கு கையாளும் மையமாக இந்தியா பிரதிபலிக்க இது உதவுகின்றது.துறைமுகம் சார்ந்த ஆராய்ச்சி குறித்த இந்திய அரசின் நிலைப்பாட்டை சாகர் மாலா திட்டத்தின் மூலம் நன்கு உணரமுடியும்.

தமிழகத்தில் சென்னைக்கு அருகே குரோம்பேட்டையில் பல்வேறு சரக்குகளை கையாளும் ஒரு புதிய தொழிற்பூங்கா விரைவில் தொடங்கப்பட உள்ளது. சாகர் மாலா திட்டத்தின் மூலம் வ.உ.சி துறைமுகப் பகுதியில் உள்ள சாலை விரிவுபடுத்தப்பட உள்ளது. சரக்கு வாகனங்கள் துறைமுகத்திற்கு வந்து செல்லும் நேரத்தைக் குறைக்கவும் இது உதவுகின்றது.

வளர்ச்சியும் சுற்றுச்சூழல் மீதான அக்கறையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. துறைமுகத்தில் ஏற்கெனவே 500 கிலோ வாட் திறன் கொண்ட மேற்கூரை சூரிய மின்சக்தி திட்டம் நிறுவப்பட்டுள்ளது. தற்போது 140 கிலோ வாட் திறன் கொண்ட மேற்கூரை சூரிய மின்சக்தி திட்டம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது மட்டுமல்லாமல், 5 நகரங்களில், 5 மெகா பட்ஜெட், ரூ.300 கோடி செலவில் பணிகள் மேற்கொண்டிருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கின்றது.நெய்வேலியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட புதிய அனல் மின் திட்டம் ரூ.7,800 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் உற்பத்தியில் 65 சதவீதத்துக்கும் அதிகமான மின்சாரம் தமிழகத்துக்கே வழங்கப்படும். தனிநபரின் வளர்ச்சியின் மையக்கருவாக இதனை உறுதி செய்யும் அடிப்படை வழிகளில் ஒன்று அனைவருக்கும் குடியிருப்புகளை ஏற்படுத்தித் தருவதாகும். அம்மக்களின் கனவுகளை நனவாக்கும் விதமாக பிரதமரின் வீட்டு வசதி திட்டம் தொடங்கப்பட்டு இருக்கிறது.இதன் ஒரு பகுதியாக, திருப்பூர், மதுரை, திருச்சி மாவட்டங்களில் சுமார் ரூ.332 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4,344 வீடுகளை திறந்து வைத்ததில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

நாடு சுதந்திரம் அடைந்து அறுபது ஆண்டுகள் ஆன நிலையில், குடியிருப்புகள் இல்லாத மக்களுக்கு இந்த வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி குறித்து மத்திய அரசு முனைப்போடு இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் 9 சீர்மிகு நகரங்களில் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையங்களுக்கான அடிக்கல் நாட்டியதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டங்கள் அனைத்தும் தமிழ்நாட்டு மக்களுக்கும் வாழ்வுக்கும் வாழ்வாதாரத்திற்கும் மிகப்பெரிய உந்து சக்தியாக விளங்கும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.மக்களின் கனவுகளை நிறைவேற்ற தொடர்ந்து பணியாற்றுவோம். சுயசார்பு பாரதத்தை உருவாக்குவோம்".இவ்வாறு அவர் பேசினார்.முன்னதாக பிரதமர் மோடி பேசத் தொடங்கும்போதும், பேசி முடிக்கும் போதும் 'வணக்கம்', 'நன்றி' என தமிழில் கூறினார்.

பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் கீழ் திருப்பூர் வீரபாண்டி, மதுரை நகரில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளையும் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். இந்த குடியிருப்புகள் ரூ.330 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.கீழ்பவானி திட்டத்தை விரிவுபடுத்துதல், புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கல் திட்டம், வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் ரூ.20 கோடி செலவில், 5 மெகாவாட் சூரிய மின்சக்தி தொகுப்புக்கும் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.கோவை, மதுரை, திருச்சி, சேலம், தஞ்சை, திருப்பூர், வேலூர் மற்றும் தூத்துக்குடி உட்பட ஸ்மார்ட்சிட்டி நகரங்களில் ரூ.107 கோடியில் அமைக்கப்பட உள்ள ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

# சிவகாசி பட்டாசு ஆலையில் பயங்கர விபத்து: 4 அறைகள் தரைமட்டம் 2 பெண்கள் உள்பட 5 பேர் பலி; 13 பேர் படுகாயம்

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் இன்று மாலை ஏற்பட்ட வெடி விபத்தில் 2 பெண்கள் உள்பட 5 பேர் உயிரிழந்தனர்.சிவகாசி அருகே உள்ள காளையார்குறிச்சியில் தங்கராஜ் பாண்டியன் என்பவருக்குச் சொந்தமான பட்டாசு ஆலை ஒன்று இயங்கி வருகிறது. நாக்பூரில் உள்ள மத்திய பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் கட்டுப்பாட்டுத் துறையின் அனுமதி பெற்று இயங்கும் இந்த ஆலையில் 30க்கும் மேற்பட்ட அறைகளில் பேன்ஸி ரக பட்டாசுகள் தயாரிக்கப்படுகின்றன. வழக்கம்போல் இன்றும் இந்த பட்டாசு ஆலையில் 80க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது ஒரு அறையில் பேன்ஸி ரக பட்டாசுகளுக்கு மருந்து செலுத்தும் போது உராய்வு ஏற்பட்டு பட்டாசுகள் வெடித்து சிதறின. இதனால் அடுத்தடுத்து இருந்த அறைகளுக்கும் தீ பரவி பட்டாசுகள் வெடித்து சிதறின. இந்த விபத்தில் 2 பெண்கள் உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 4 கட்டிடங்கள் இடிந்து தரை மட்டமாயின. மேலும் 13 தொழிலாளர்கள் பலத்த காயமடைந்தனர்.தகவலறிந்த விருதுநகர் மற்றும் சிவகாசி தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இறந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இறந்தவர்களின் விவரங்களை உடனடியாக கண்டறிய முடியவில்லை.காயமடைந்த நபர்களும் சிவகாசி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து குறித்து எம். ரெட்டியபட்டி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.ஒரே மாதத்தில் 3வது விபத்து:விருதுநகர் மாவட்டத்தில் ஒரே மாதத்தில் நடந்துள்ள மூன்றாவது பட்டாசு ஆலை விபத்து இது.

கடந்த 12ம் தேதி அச்சங்குளத்தில் பட்டாசு ஆலையில் விபத்து ஏற்பட்டது. தொடர்ந்து அதே வாரத்தில் சிவகாசி அருகே காக்கிவாடன்பட்டியில் ஓர் ஆலையில் விபத்து நடந்தது.இந்நிலையில், சிவ காசி காளையார்குறிச்சி பட்டாசு ஆலையில் இன்று மாலை திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது. பேன்ஸி ரக பட்டாசு செய்யும் அறையில் ஏற்பட்ட தீ அடுத்தடுத்த அறைகளுக்கும் பரவியதால் விபத்து பகுதி தீயணைப்பு வீரர்கள் நெருங்கமுடியாத அளவுக்கு உள்ளது. 40க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 14 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவருக்கு 80 சதவீதத்துக்கும் மேல் காயம் ஏற்பட்டுள்ளது.கடந்த பிப்ரவரி 12ம் தேதி சாத்தூர் அச்சங்குளம் பகுதியில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 23 பேர் பலியாகினர். அந்த விபத்து ஏற்படுத்திய சோகம் விலகுவதற்குள் மற்றுமொரு விபத்து நடந்துள்ளது.அதிகாரிகள் ஆய்வு:சம்பவ இடத்தில் மாவட்ட எஸ்.பி. மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

பட்டாசு ஆலைக்கு உரிமம் இருப்பதாகத் தெரிவித்துள்ள எஸ்.பி., ஆலை உரிமம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறதா, ஆலையில் விதிமீறல் ஏதும் உள்ளதா போன்ற விசாரணைகள் நடைபெறுவதாகக் கூறினார்.நீதிமன்றம் உத்தரவு:முன்னதாக இன்று பிற்பகல், தமிழகத்தில் பட்டாசு தொழிலை முறைப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பாக தமிழக அரசு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# கேரளா, மகாராஷ்டிராவில் இருந்து தமிழகம் வருவோருக்கு கட்டாயம் 7 நாட்கள் வீட்டுத்தனிமை: தமிழக அரசு

கேரளா, மகாராஷ்டிராவில் இருந்து தமிழகம் வருவோர் கட்டாயம் 7 நாட்கள் வீட்டில் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. நாடுமுழுவதும் கரோனா பரவலைக் கட்டப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக ஏறக்குறைய ஓராண்டு ஆகும் நிலையில் பல மாநிலங்களில் பரவல் கட்டுக்குள் வந்து. இயல்பு நிலையும் திரும்பி வருகிறது. ஆனால், கேரளா, மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், பஞ் சாப், காஷ்மீர் ஆகிய 6 மாநிலங்களில் கடந்த சில தினங்களாக கரோனா பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக கேரளா மற்றும் மகாராஷ்ராவில் பாதிப்பு அதிகமாக உள்ளது.

சிகிச்சை பெறுபவர்களில் 74 சதவீதத்துக்கும் அதிகமானோர், கேரளா மற்றும் மகாராஷ்டிராவில் உள்ளனர். சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், பஞ் சாப், ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆகிய மாநிலங்களில், தினசரி கோவிட் பாதிப்பு அதிகரித்துள்ளது.கேரளாவில் கடந்த 4 வாரங்களாக, வார சராசரி கோவிட் பாதிப்பு குறைந்தபட்சம் 34,800 முதல் அதிகபட்சமாக 42,000 வரை இருந்தது. மகாராஷ்டிராவில் வார பாதிப்பு 18,200 லிருந்து 21,300 ஆக அதிகரித்துள்ளது. இந்நிலையில் கேரளா, மகாராஷ்டிராவில் இருந்து தமிழகம் வருவோர் கட்டாயம் 7 நாட்கள் தங்களை வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு சுகாதாரத் துறை வெளி யிட்டுள்ள அறிவிப்பில், அறிவிப்பில், "கேரளா மற்றும் மகாராஷ்டிராவில் இருந்து தமிழகம் வருவோர் தங்களை 7 நாட்கள் கட்டாயமாக வீட்டுத்தனிமையில் வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்த 7 நாட்கள் தங்களின் உடல்நிலையைத் தொடர்ந்து கண்காணித்துக் கொள்ள வேண்டும். பிறமாநிலங்களில் இருந்து தமிழகம் வரும் பயணிகள் தங்களை 14 நாட்கள் தங்களின் உடல்நிலையை 14 நாட்கள் கண்காணிக்க வேண்டும்.


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# ஈழத்துத் திருக்கோவில்கள் 935



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## தம்பலகமம், ஆதிகோணநாயகர் கோயில்
### திருகோணமலை

“மதிநுதல் மங்கையோடு வடபாரிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொனடறை மாலை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனொடு தூதர்
கொடுநோய்களானபலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவைந ல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.”

இவ்வாலய மகோற்சவத்தின்போது கதிர்காமசுவாமி உற்சவமும், சூகரவேட்டைத் தூதும் விசேடமான விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. அத்தோடு விசேட திருநாள்களில் பூசைகள் விமரிசையாக நடைபெறும். கௌரிவிரதம், கந்தசஷ்டி, நவராத்திரி, சிவராத்திரி, சித்திராபௌர்ணமி, திருவெம்பாவை முதலியனவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தினமும் மூன்று முறை நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றது.

இவ்வாலயத்திலே நடைபெறும் நடைமுறைகளை அறிவதற்கு ஆதாரமாக இருப்பது, கோணேசர் கல்வெட்டாகும். கோணேசர் கல்வெட்டு கவிராசரால் இயற்றப்பட்டதாகும். வைத்திலிங்கதேசிகரால் வெளியிடப்பட்ட கோணேசர் கல்வெட்டுப் பிரதியில் 58 பாடல்கள் உள்ளன. திருகோணமலைத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவராக விளங்கிய அகிலேசபிள்ளை அவர்களின் மகன், திரு. அ. அழகக்கோன் பிரசுரித்த பிரதியில் 60 பாடல்கள் காணப்படுகின்றன. கோணேசர் கல்வெட்டின் சரியான விடயங்களை அறிவதற்குப் பழைய ஏட்டுச்சுவடிகளை ஒப்புநோக்கி ஆராய்ந்து தெளிவது, இன்றைய காலகட்டத்தின் தேவையாகக் கருதலாம். கோணேசர் கல்வெட்டை ஆராய்வதன் மூலம், கோணேசர் ஆலயத்திலே நிகழ்ந்த வழிபாட்டு முறைகள், மற்றும் கோயிற்றொழும்பு செய்வோர்பற்றியும், அவர்களுக்கென வகுக்கப்பட்ட கடமைகளையும், அக்கால சமூக அமைப்பினையும் தெரிந்துகொள்ள வாய்ப்புண்டு.

கி.பி 1624 ஆம் ஆண்டு அழிக்கப்பட்ட திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயம், ஏறக்குறைய 339 ஆண்டுகளாக அழிக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் மக்கள் கோணேஸ்வரப்பெருமானைத் தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயத்திற்குச் சென்று தரிசித்து வந்துள்ளனர். இந்நிலயில் கோணேசர் கல்வெட்டிலே கூறப்பட்ட தொழும்புப்பணிகள் தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் முறையாகப் பேணப்பட்டு வருகின்றது. குளக்கோட்டு மன்னனால் திருக்கோணேஸ்வர ஆலயத்தொழும்புகளுக்காகக் கொண்டுவரப்பட்ட குடிமக்களின் பரம்பரைகள் தொடர்ந்தும் தம்பலகமம் ஆதிகோணநாயகர் கோயிலில் தொண்டாற்றி வருகின்றனர். கோணேசர் கல்வெட்டிலே ஆலயத் தொண்டிற்குரிய பல அம்சங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் பாசுபதர், தானத்தார், வரிப்பத்தார் போன்ற மூன்று அம்சங்களைத் தம்பலகமம் ஆதிகோணநாயகர் ஆலயம் பேணிவருகின்றது. குளக்கோட்டு மன்னனால் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழும்பாளர்களில் இவர்கள் பணி முக்கியமானது.

பாசுபதர் எனப்படுவோர் ஆகமமுறைப்படி பூசை செய்பவர்களாகக் காணப்பட்டுள்ளனர். குளக்கோட்டன், பாசுபதர்களைக் கோயிலுக்குப் பூசகர்களாக நியமித்தான். பாசுபதர் என்போர் பாசுபத சமயத்தோராவர். பாசுபதரை மயேச்சுரர் என்றும் அழைப்பர். இவர்கள் சிவலிங்க வழிபாட்டை மேற்கொண்டோராகக் காணப்பட்டனர். நகுலேச பாசுபதமே வீரசைவம் என்ற கருத்தும் நிலவுகின்றது.

குளக்கோட்டு மன்னன், திருக்கோணேசர் ஆலயத்தில் தொழும்பு செய்வதற்கு, மருங்கூரிலிருந்து முப்பது குடிகளைக் கொண்டுவந்து திருகோணமலை நகரில் குடியேற்றினான். இம் முப்பது குடியினரையும் தானத்தார் என அழைப்பர். இவர்களுக்கு மூவகையான கடமைகள் வகுக்கப்பட்டுள்ளன. இறைவன் முன் ஆலாத்தி எடுத்தல், நடனமாடுதல், பன்றி குத்தல் போன்றவை இவர்களது கடமைகளாகக் காணப்பட்டது.

வரிப்பத்தார் எனப்படுவோர், பட்டாடை கொய்தல், கட்டல், புஷ்பபத்திரமெடுத்தல், விளக்கேற்றல், தளிசைத்தட்டு விளக்குதல், தீர்த்தம் எடுத்தல், நெல்லுக்குற்றல், சாணிமெழுகல், கொடியேற்றல், இறக்கல், சந்தணம் அரைத்துக்கொடுத்தல், முதலிய ஆலயப்பணிகள் இவர்கள் செய்ய வேண்டிய பணிகளாகக் காணப்பட்டது. நீர் பாயும் பள்ளவெளி நிலம் இவர்களுக்கு நிவந்தமாகக் கொடுக்கப்பட்டது.

இவர்களைத் தவிர தானத்தார், வரிப்பத்தார் என்போரையும், நடுநின்று நீதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டி அரசு செய்ய, மதுரையைச் சேர்ந்த மதிக்குலத்து உதித்த தனியுண்ணாப் பூபாலனையும் குளக்கோட்டன் நியமனம் செய்துள்ளான். அத்தோடு வருடக் கணக்குகள், மானியத் தொகைகளைப் பெரிய வளமைப் பத்ததியின்படி செயற்படுத்தக் கனகசுந்தரப் பெருமாள் என்பாரையும் நியமனம் செய்தான். காலப்போக்கில் தானத்தார், வரிப்பத்தார் எனப்பட்டோர் காரியப்பர், வயிராவியார் என்று மாறியுள்ளனர். இப் பரம்பரையினர் தம்பலகமம் ஆதிகோணநாயகர் கோயிலில் தற்காலத்திலும் பணியாற்றி வருகின்றார்கள். அடப்பன், கங்காணம் என்போர் பிற்காலத்தில் தோன்றியவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களும் ஆலயப் பணிகளை, மேலாளராக இருந்து செய்து வருகின்றார்கள்.

தம்பலகமத்திலுள்ள வயல்வெளிகள், கந்தளாய்க்குளத்தின் மூலம் நீர்ப்பாச்சப்பட்டுச் செழித்துக் காணப்படும். எனினும், சிலகாலங்களிலே மழை தவறுவதும், வெயில் தேவைப்படும் காலங்களில் அது கிடைக்காமல் பயிரினங்களும், மக்களும் பல்வேறு துன்பங்களை அனுபவிக்க நேரிடும். இச்சூழ்நிலையைத் தவிர்த்து மழையும் வெயிலும், காலந்தவறாது நிகழத்தக்க முறையிலான ஆணையொன்று கோணேசர் கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ளது. குளக்கோட்டு மன்னன் கோணேசர் கல்வெட்டிலே குறிப்பிட்டுள்ள இந்த ஆணையையும் தம்பலகமம் ஆதி கோணநாயகர் ஆலயம் கடைப்பிடித்து வருகின்றது. “மன்னுபச்சைப் பட்டுவரின் மழையுதவும், சிவப்பு மகா வெயிலே காட்டும்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளதே இவ் ஆணையாகும். ஆலயத்திற்கு மானியமாக வழங்கப்பட்ட வயல்நிலங்களுக்கு நீர்ப்பாச்ச உதவியாக குளக்கோட்டு மன்னன், கந்தளாய்க் குளத்தைக் கட்டி, மகாவலிகங்கை நீரைத் திசைதிருப்பி, குளத்தை வந்தடையச் செய்தான்.

மகாவிஷ்ணுவினுடைய ஆணைப்படி குளத்திற்குக் காவலாக, விநாயகர், காளமாமுனி, புலத்தியர், மங்கலர், வீரபத்திரன், வதனமார், வைரவர், அண்ணமார், பல்வேறுவகையான பூதங்கள், ஐயனார், சக்திகாவலர்கள், கன்னிமார், பத்தினி, காளி, எனப் பல்வேறான தெய்வங்களை இந்தக்குளக்கட்டிலே நிறுவினான். இவ்வாறு அமர்த்தப்பட்டுள்ள காவற்தெய்வங்களுக்கு, ஒருவருடம் மடையும், மறு வருடம் வேள்வியும் செய்யும்படி குளக்கோட்டன் ஆணையிட்டுள்ளான். இந்த ஆணை இன்றும் தவறாது பின்பற்றப்பட்டு வருகின்றது. ஸ்ரீஆதிகோணநாயகருக்கு முறைப்படி பொங்கல் வேள்விகளைச்செய்து, நேர்த்தி வைத்து, அவருக்குப் பச்சைப்பட்டுக் கட்டினால் மழை வருவதும், சிவப்புப்பட்டுக் கட்டினால் வெய்யில் காய்வதும் இங்கு நடைபெற்றுவரும் அற்புத நிகழ்வாகக் காணப்படுகின்றது. இதனால் தம்பலகமம் கிராமமும் அதனைச் சூழவுள்ள கிராமங்களும் இயற்கை எழில்சூழ் பிரதேசமாக விளங்குவதோடு, செந்நெல் விளையும் பூமியாகவும் திகழ்கின்றது.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

ALL DEBT SOLUTIONS C R PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# அன்பின் தொனி - 601

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தரோ எனக்கு அடைக்கலமும், என் தேவன் நான் நம்பியிருக்கிற கன்மலை**

நீதியைச் சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தாவே, நீதியைச் சரிக்கட்டுகிற தேவனே, பிரகாசியும். பூமியின் நியாயாதி பதியே, நீர் எழுந்து, பெருமைக்காரருக்குப் பதிலளியும். கர்த்தாவே, துன்மார்க்கர் எது வரைக்கும் மகிழ்ந்து, துன் மார்க்கர் எதுவரைக்கும் களிகூர்ந்திருப்பார்கள்? எதுவரைக்கும் அக்கிரமக்காரர் யாவரும் வாயாடி, கடினமாய்ப் பேசி, பெருமைபாராட்டுவார்கள்? கர்த்தாவே, அவர்கள் உமது ஜனத்தை நொறுக்கி, உமது சுதந்தரத்தை ஒடுக்குகிறார்கள். விதவையையும் பரதேசியையும் கொன்று, திக்கற்ற பிள்ளைகளைக் கொலைசெய்து: கர்த்தர் பாரார், யாக்கோபின் தேவன் கவனியார் என்று சொல்லுகிறார்கள். ஜனத்தில் மிருககுணமுள்ளவர்களே, உணர்வடையுங்கள், மூடரே, எப்பொழுது புத்திமான்களாவீர்கள்? காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ? ஜாதி களை தண்டிக்கிறவர்கடிந்து கொள்ளாரோ? மனுஷனுக்கு அறிவைப் போதிக்கிறவர் அறியாரோ? மனுஷனுடைய யோசனைகள் வீணென்று கர்த்தர் அறிந்திருக்கிறார். கர்த்தாவே, துன்மார்க்கனுக்குக் குழிவெட்டப்படும்வரைக்கும், நீர் தீங்குநாட்களில் அமர்ந்திருக்கப்பண்ணி, சிட்சித்து, உம்முடைய வேதத்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான். கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்தரத்தைக் கைவிடாமலும் இருப்பார். நியாயம் நீதியினிடமாகத் திரும்பும், செம்மையான இருதயத்தார் யாவரும் அதைப் பின்பற்றுவார்கள். துன்மார்க்கருக்கு விரோதமாய் என் பட்சத்தில் எழும்புகிறவன் யார்? அக்கிரமக்காரருக்கு விரோதமாய் என் பட்சத்தில் நிற்பவன் யார்? கர்த்தர் எனக்குத் துணையாயிராவிட்டால், என் ஆத்துமா சீக்கிரமாய் மவுனத்தில் வாசம்பண்ணியிருக்கும். என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது. என் உள்ளத் தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது. தீமையைக் கட்டளையினால் பிறப்பிக்கிற கொடுங்கோலாசனம் உமக்கு இசைந்திருக்குமோ? அவர்கள் நீதிமானுடைய ஆத்துமாவுக்கு விரோ தமாய்க் கூட்டங்கூடி, குற்றமில்லாத இரத்தத்தைக் குற்றப்படுத்துகிறார்கள். கர்த்தரோ எனக்கு அடைக்கலமும், என் தேவன் நான் நம்பியிருக்கிற கன்மலையுமாயிருக்கிறார். அவர்களுடைய அக்கிரமத்தை அவர்கள்மேல் திருப்பி, அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம் அவர்களைச் சங்கரிப்பார், நம்முடைய தேவனாகிய கர்த்தரே அவர் களைச் சங்கரிப்பார். **- சங்கீதம் 94: 1-23**

**கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார்.**

கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள். துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம். கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார். பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது, பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள். சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார், வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று. நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள். அவர் நம்முடைய தேவன், நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர்கைக்குள்ளான ஆடுகளுமாமே. இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டி னபோதும் சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள். நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன். **- சங்கீதம் 95: 1-11**

**அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்**

கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள், பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைப் பாடுங்கள். கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரித்து, நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள். ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள். கர்த்தர் பெரியவரும், மிகவும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார், எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே. சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே, கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர். மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது, வல்லமையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது. ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள், கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள். கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய பிராகாரங்களில் பிரவேசியுங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள், பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள். கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், ஆகையால் பூச்சக்கரம் அசையா தபடி உறுதிப்பட்டிருக்கும் அவர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள். வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி, சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக. நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக, அப்பொழுது கர்த்தருக்கு முன்பாக காட்டுவிருட்சங்களெல்லாம் கெம்பீரிக்கும். அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார், அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார். **- சங்கீதம் 96: 1-13**

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள். என் மகனே, உன் தகப்பன் புத்தியைக்கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும். என் மகனே, பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும் நீ சம்மதியாதே எங்களோடே பங்காளியாயிரு, நம்மெல்லாருக்கும் ஒரே பை இருக்கும் என்று அவர்கள் சொல் வார்களாகில், என் மகனே, நீ அவர்களோடே வழிநடவாமல், உன் காலை அவர்கள் பாதைக்கு விலக்குவாயாக. **- நீதிமொழிகள்**

*தொடரும்*

SHIVA SAI DURGA ASTROLOGICAL CENTER



Pandit: Kumara swamy



Most Powerful Spiritual Healer

We can Handle any Problem

25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்

உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் கூறுவார்

Remove Black Magic, Witchcraft, Obeya, Evil Spirits

Bad Luck & Jadoo & Give 100%, Life Long Protection

கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து

ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,

இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.

செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி, நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம், காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்

எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்

100% SATISFACTION GUARANTEED

Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result

Call for Appointments/Walk ins Welcomed 647-766-9775

2607 Eglinton Ave E Scarborough, M1K 2S2,

UPSTAIRS ERRA MARKET, EGLINTON & BRIMLEY

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திரு. ராஜரத்தினம் பொன்னுத்துரை
(கோண்டாவில் கிழக்கு மற்றும் கனடா)

பொன்னுத்துரை பெற்ற (ராஜ) ரத்தினமே!
மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த உன்னை
விண்ணுலகும் போற்றும் ஐயா,
வண்ணமலர்துவி வாழ்த்தும் ஐயா...
வள்ளல் தன்மைக்கு வான் நிகர் கொண்டவரே,
உந்தன் பிரிவு கேட்டு ஊரும் உறவும துடித்தபோது
நீங்கள் வாழ்ந்த வாழ்வின் சிறப்பு அறிந்தோம் ஐயா
உங்கள் புகழ் சீரோங்க நாம் வாழஎம்மை வழி
நடத்துங்கள் அப்பா...

பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

அன்னாரின் மறைவு செய்தி கேட்டு அவரின் பூதவுடலுக்கு ஓடோடி வந்து அஞ்சலி செலுத்திய உறவுகளுக்கும், தொலைபேசிமூலம் ஆறுதல் அளித்த உறவுகளுக்கும், இன்றுவரை அவரின் நினைவாக உணவளித்து வரும் நல் உள்ளங்களுக்கும், இறுதிக் கிரிகைகளை சிறப்புற ஒழுங்கமைத்த விலோசன் அவர்களுக்கும், மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்திய அன்பர்களுக்கும், எம்மோடு இணைந்து எம் தந்தையின் இறுதி ஊர்வலம் சிறப்புற தோளோடு தோள் நின்ற சித்தப்பாவின் பிள்ளைகள், மற்றும் மாமியின் (அன்றியின்) பிள்ளைகளுக்கும் கோடானு கோடி நன்றி.

பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலில் பெரிது - திருக்குறள்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 18-02-1934 | 31-01-2021 |

தொடர்புகளுக்கு: திருமதி. தனலட்சுமி: (905-927-9166)
Dr. கிருபா: (905) 927-9166
ரவி: (905) 409-0167
ஜனா: (416) 725-8173
பாபு: (416) 731-5711


# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**









# உதயன்

25வது வெள்ளி விழா 2021 UTHAYAN






உதயம் 1299 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 26, 2021

## மனித உரிமைப் பேரவையின் 46வது கூட்டத்தொடரில் Lawyers' Rights Watch Canada சார்பில் ஹரினி சிவலிங்கம் உரையாற்றினார்



ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46 வது கூட்டத்தொடரில், சிறப்பு ஆலோசனைத் தகுதியுள்ள **Lawyers' Rights Watch Canada (LRWC)** அமைப்பின் சட்டத்தரணி ஹரினி சிவலிங்கம் அவர்கள் உரையாற்றினார். அவரது உரையின் எழுத்து வடிவம் கீழே காணப்படுகின்றது.

*(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கம்)*

## தமிழ்நாடு திருவள்ளுவர் இலக்கிய மன்ற மரபுக் கவிதை நூல் தெரிவுப் போட்டியில் கனடா மாவிலி மைந்தன் சண்முகராஜாவிற்கு முதற் பரிசு




தமிழ்நாடு திருவள்ளுவர் இலக்கிய மன்றம் தனது 46வது ஆண்டு விழாவை முன்னிட்டு இவ்வாண்டு நடத்திய சிறந்த மரபுக் கவிதை நூல்களுக்கான தெரிவுப் போட்டியில், கனடா வாழ் "மாவிலி மைந்தன் சண்முகராஜாவின் 'மனவெளி மேகங்கள்' என்ற கவிதைத் தொகுப்பு நூல் முதல் பரிசைப் பெற்றுள்ளது என்பதை உலகெங்கும் உள்ள கலை இலக்கிய நண்பர்களோடு கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகின்றது .

தமிழ்நாட்டில் பல இலக்கிய ஆளுமைகளினால் ஆரம்பிக்கப்பெற்ற இந்த திருக்குறள் இலக்கிய மன்றம் இவ்வாண்டு நல்லழகம்மை-செல்லப்பன் அறக்கட்டளை நிறுவனத்தோடு இணைந்து நடத்திய மரபுக் கவிதை நூல் தெரிவுப் போட்டியில் பல தமிழ்நாட்டுக் கவிஞர்களின் கவிதை நூல்களும் தெரிவிற்காக அனுப்பப்பட்டிருந்தன.

இந்த தெரிவுப்போட்டியில் கனடா வாழ் மாவிலி மைந்தன் சண்முகராஜாவின் மரபுக் கவிதை நூல் முதல் பரிசைப் பெற்றது, கனடா வாழ் கலை இலக்கிய நண்பர்களுக்கும் கனடா கவிஞர்கள் கழகத்திற்கும் பெருமை சேர்க்கும் விடயம் என கனடாவில் உள்ள சில இலக்கிய ஆர்வலர்கள் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்குத் தெரிவித்துள்ளார்கள்.

## மனித உரிமைப் பேரவையின் 46வது கூட்டத்தொடரில் கனடிய வெளியுறவு அமைச்சின் நாடாளுமன்ற செயலாளர் றொப் ஒலிவ்பண்ட் உரையாற்றினார்



மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நேற்று 25ம் திகதி கனடா வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு:-

அங்கு கனடிய வெளியுறவு அமைச்சரின் நாடாளுமன்ற செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான றொப் ஒலிவ்பண்ட கனடாவின் சார்பில் பின்வரும் கருத்தை வெளியிட்டார்.

*(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கம்)*

## 'ரொரன்ரோ மனித நேயக் குரல்' அமைப்பு நிதியுதவியில் யாழ் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் திட்டம்







கனடாவின் நீண்டகாலமாக இயங்கிவரும் 'ரொரன்ரோ மனித நேயக் குரல்' அமைப்பின் நிதியுதவியில் யாழ்ப்பாண மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் திட்டம் தொடர்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட இந்த உதவித் திட்டத்தின்படி அண்மையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு அருகில் இடம்பெற்ற சிறிய வைபவத்தில் அப்பகுதியில் வாழும் உதவிகள் தேவைப்படும் மாணவ மாணவிகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

*(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கம்)*

## Ontario Government Invests in Historic Campaign to Accelerate Training for Personal Support Workers

## PSW எனப்படும் தனியாக உதவும் பணியாளர்கள் பயிற்சியை விரைவு-படுத்துவதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கனடா - ஒன்ராறியோ அரசின் முதலீடு

### 2021 க்குள் 8,200 புதிய PSW எனப்படும பணியாளர்கள் நீண்ட கால பராமரிப்பில் பணியாற்ற தயாராக இருப்பார்கள்



ஒன்ராறியோவின் சுகாதார மற்றும் நீண்டகால பராமரிப்புத் துறைகளில் அதிக தேவை உள்ள வேலைகளுக்காக 8,200 புதிய தனியாக உதவும் பணியாளர்களுக்கு (பி.எஸ். டபிள்யூ) பயிற்சி அளிக்க ஒன்ராறியோ அரசாங்கம் 115 மில்லியன் டாலர்களை முதலீடு செய்கிறது. ஒன்ராறியோ கல்லூரிகளுடன் அமைச்சுடன் இணைந்து, அரச உதவி பெறும் சுமார் 24 கல்லூரிகளும் ஏப்ரல் 2021 முதல் இந்த புதமையானதும் முழுமையாக நிதியளிக்கப்பட்டதுமானதுமான திட்டத்தை வழங்கவுள்ளன. இது அரசாங்கத்தின் நீண்டகால பராமரிப்பு பணியாளர் திட்டத்தின் ஒரு பகுதியாகும், இது மாகாண வரலாற்றில் மிகப்பெரிய **PSW** ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி திட்டங்களில் ஒன்றாகும். முக்கியமாக கோவிட்-19 பரவலுக்கு எதிராக செயற்படும் ஒன்றாரியோ அரசின் இந்த முயற்சியை பல மருத்துவத்துறை தலைவர்கள் வரவேற்றுள்ளார்கள்.

*(உள்ளே விபரமான செய்தி. 5ம் பக்கம்)*